



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:265 | 10-04-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

10.04.2026 பங்குனி 27
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.06

திதி:
இன்று இரவு 8.59 வரை
அஷ்டமி பின்பு நவமி.

நட்சத்திரம்:
இன்று காலை 9.27 வரை
பூராடம் பின்பு உத்திராடம்.

யோகம் :
இன்று மாலை 4.26 வரை
சிவம் பின்பு சித்தம்.

கரணம்
இன்று காலை 8.15 வரை
பாலவம் பின்பு இரவு
8.59 வரை கௌலவம்
பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 9.27 வரை
ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.
இன்று தேய்பிறை
அஷ்டமி நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## கேரளாவில் 77.45%, அசாமில் 85.04%

# புதுச்சேரியில் 89.83% வாக்குகள் பதிவு

**புதுடெல்லி, ஏப்.10:**

வாக்குப் பதிவு நிறைவு பெற்ற நிலையில், மாலை 6 மணி நிலவரப்படி கேரளாவில் 77.45% வாக்குகளும், அசாமில் 85.04% வாக்குகளும், புதுச்சேரியில் 89.83% வாக்குகளும் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இறுதியான வாக்குப்பதிவு சதவீதம் இன்னும் வெளியாகவில்லை.

அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. நீண்ட வரிசையில் நின்று பொதுமக்கள் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றினர். மாலை 6 மணி வரை தேர்தல் நடைபெறற்றது. ஆறு மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வந்தவர்கள் அனைவரும் டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்கும் வரை வாக்குப்பதிவு நடைபெறும்.



**புதுச்சேரியில் 89.83% வாக்குகள் பதிவு:** 30 சட்டப்பேரவைத்தொகுதிகளைக் கொண்ட புதுச்சேரியில் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இங்கு காலை 11 மணி நிலவரப்படி 37% வாக்குகளும், பகல் 1 மணி நிலவரப்படி 56.83% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 72.40% வாக்குகளும், மாலை 5 மணி நிலவரப்படி 86.92% வாக்குகள் பதிவாகின. இறுதி நிலவரப்படி 89.83% வாக்குகள் பதிவாகின.

இங்கு என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் இந்த தேர்தலில் முக்கிய சக்திகளாகக் கருதப்படுகின்றன.

**கேரளாவில் 77.45% வாக்குகள்:** 140 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட கேரளாவில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. 2.71 கோடி வாக்காளர்களைக் கொண்ட கேரளாவில் 883 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

காலை 11 மணி நிலவரப்படி கேரளாவில் 33.30% வாக்குகளும், பகல் 1 மணி நிலவரப்படி 49.70% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 62.71% வாக்குகளும், மாலை 5 மணி நிலவரப்படி 75.01% வாக்குகள் பதிவாகி உள்ளன. மாலை 6 மணி நிலவரப்படி 77.45% வாக்குகள் பதிவாகின.

இங்கு ஆளும் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணிக்கும், பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதேநேரத்தில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்த தேர்தலில் முக்கிய சக்தியாக களத்தில் உள்ளது.

**அசாமில் 85.04% வாக்குகள் பதிவு:** 126 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட அசாமில் காலை 7 மணி முதல் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றினர். காலை 11 மணி நிலவரப்படி இந்த மாநிலத்தில் 38.92% வாக்குகள் பதிவாகின.

பகல் 1 மணி நிலவரப்படி 59.63% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 75.91% வாக்குகளும் பதிவாகின. மாலை 5 மணி நிலவரப்படி 84.42% வாக்குகள் பதிவாகி உள்ளன. மாலை 6 மணி நிலவரப்படி அசாமில் 85.04 சதவீத வாக்குகள் பதிவாகின.

அசாமில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

வெப்ப அலை தாக்கம் காரணமாக, வாக்குச்சாவடிகளில் நிழற்குடைகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன. முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிக்கச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்று பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மற்ற மாநிலங்களுடன் சேர்த்து மே மாதம் 4-ம் தேதி வெளியாகவுள்ளன.

# சமூக நீதியை சிறுமைப்படுத்தும் அரசியல் சதி தொகுதி மறுசீரமைப்பைக் கொண்டு வர முயற்சி?

### பிரதமர் மோடிக்கு மு.க.ஸ்டாலின் கண்டனம்

**சென்னை, ஏப்.10:**

பிரதமர் மோடி தலைமையிலான என்டிஏ அரசு நாடாளுமன்றத்தின் அடிப்படை அமைப்பையே திட்டமிட்டுச் சீர்குலைக்கிறது. விவாதங்களுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பதில் கூறுவதற்குமான தளமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றமானது, உறுப்பினர்கள் தங்கள் தொகுதி, மாநில மக்களின் பிரச்னைகளைப் பேசுவதற்குக்கூட போதிய நேரமளிக்காத வெற்றுச் சம்பிராதய அவையாகச் சுருக்கப்பட்டு வருகிறது.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான முன் மொழிவு, "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற அவர்களின் சொந்த முழக்கத்துக்கே எதிரானதாக அமைந்துள்ளது. இந்த முடிவினால் செலவுதான் கூடும், மக்களின் வரிப்பணம் வீணாகும், நாடாளுமன்றச் செயல்பாடுகளின் தரம் குறையும்.

மேலும், இந்தியாவை மாநிலங் களின் ஒன்றியமாக வரையறுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1க்கும் இது எதிரானது. மாநிலங்களின் குரலைப் புறக்கணித்துவிட்டு, முறையான கலந்தாலோசனையும் செய்யாமல் தவிர்த்துவிட்டுச் செயல்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது. இது இந்தியாவின் பன்முக, கூட்டாட்சித் தன்மையைச் சிறுமைப்படுத்தும் ஒற்றைத்துவ எல்லை மீறலாகும்.

இதற்கெல்லாம் மேலாக, இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை யானது பா.ஜ.க. ஆதிக்கம் செலுத்தும் வட மாநிலங்களுக்கு ஆதரவாக வலுவூட்டி, தென்மாநிலங்களின் குரலை நெரிக்கும். மூத்த தலைவர் சித்தராமையா சீற்றத்தோடு கூறியதுபோல, இது நடுநிலையான நடவடிக்கை அல்ல, இது அரசியல் நோக்கம் கொண்ட திட்டமிட்ட கட்டமைப்பு மாற்றம்.

### தென் மாநிலங்களை தண்டிக்கும் செயல்

வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இருமடங்காகும். அதே வேளையில் தென்மாநிலங்களின் அளவு 24 விழுக்காட்டிலேயே தேங்கி நிற்கிறது. இது மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் தெலங்கானா போன்ற மாநிலங்களைத் தண்டிப்பதாகும். இந்த நடவடிக்கையால் கூட்டாட்சி சிதைக்கப்பட்டு, அதிகாரம் ஒருசில பகுதிகளில் மட்டுமே குவிக்கப்படும் என்று சித்தராமையா, பினராயி விஜயன், ரேவந்த் ரெட்டி ஆகிய தென் மாநில முதலமைச்சர்கள் மிகச்சரியாக எச்சரித்துள்ளனர்.

இது அவசரகதியில் தற்போது செய்யப்படுவதும் நம் அச்சத்தை அதிகமாக்குகிறது. பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் இத்தகைய முக்கிய நடவடிக்கையை மாநிலத் தேர்தல்களுக்கிடையே திணிக்க வேண்டிய அவசியம் என்ன? தேர்தல் சார்ந்த கதையாடல்களை வடிவமைக்கவும், பெண் வாக்காளர் களிடம் செல்வாக்கு பெறுவதற்காகவும் 2024 நாடாளுமன்ற மக்களைவைப் பொதுத்தேர்தலின்போது செய்த முந்தைய முயற்சிகளைப் போலவே இதுவும் அமைந்துள்ளது.

### பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு

பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாங்கள் முழுமன தோடு ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. ஆனால், பொறுப்போடு செயல்பட்ட மாநிலங்களைத் தண்டிக்கும்



வகையில் தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கோருகிறோம். அவர்களின் நோக்கம் உண்மையானதாக இருந்தால், இப்போதுள்ள தொகுதி அளவிலேயே மகளிருக்கான 33 இட ஒதுக்கீட்டை வழங்குவதை எதுவும் தடுக்கவில்லையே? இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்கு ஆதரவான சமூகநீதிக் காவலர் என்று மத்திய அரசு தங்களை அழைத்துக்கொள்வதும் வெற்று முழக்கம்தான்.

'வளர்ந்த இந்தியா' என ஒருபுறம் சொல்லிக்கொண்டே பல ஆண்டுகளாகக் கிரீமி லேயர் உச்சவரம்பை 8 லட்சம் ரூபாயில் இருந்து மாற்றாமல் வைத்திருந்து ஓ.பி.சி. மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கீடு கிடைக்காமல் வஞ்சித்தார்கள். இதர பிற்படுத்தப்பட்ட மகளிரின் பிரதிநித்துவத்துக்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

### வெளிப்படைத் தன்மை இல்லை

2027 மக்கள் தொகைக் கணக்கெடுப் பின் மூலம் முதல்முறையாக நாம் அறியவுள்ள சாதிவாரி எண்ணிக்கை முடிவுகளைக்கூட பரிசீலிக்காமல் அவசரமாக அவர்கள் செயல்படுவது. இதில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை அம்பலப்படுத்துகிறது. இது அதிகாரமளித்தல் அல்ல, புறக்கணிப்புக்கு மாறுவேடம் போட்டுச் சீர்திருத்தம் என்கிறார்கள். மேலும், தொகுதி மறுவரையறைக்கான அடிப்படையாகக் கொள்ளப்போவது எது என்பதிலும் கொஞ்சம் கூட வெளிப்படைத்தன்மை இல்லை. 2021 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா அல்லது மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முந்தைய காலமான 1971-ஆம் ஆண்டு எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா? மாற்றி மாற்றிப் பேசுவதும், வெற்று உத்தரவாதங்களும் நம் ஐயத்தை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன. மொத்தத்தில் இந்த நடவடிக்கை மாநிலங்களின் மீது பெரும் நிதிச்சுமையை ஏற்றும், சட்டமன்றங்களை விரிவாக்கம் செய்ய அல்லது புதிதாகக் கட்டும் நிலைக்குத் தள்ளும். இவை அனைத்தும் முறையான கலந்தாலோசனை எதுவுமின்றி நடக்க இருக்கிறது.

இது கூட்டுறவுக் கூட்டாட்சியியல் மீதான நேரடித் தாக்குதல் ஆகும். இவர்கள் செய்ய நினைப்பது சீர்திருத்தமே அல்ல, இது அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து, நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்தி, தென்னகத்தை விளிம்பு நிலைக்குத் தள்ளி, சமூகநீதியைச் சிறுமைப்படுத்து வதற்கான தன்னிச்சையான அரசியல் சதித் திட்டம்! ஏன் இந்த அவசியமற்ற அவசரம்? ஏன் மாற்றி மாற்றிப் பேசுகிறீர்கள்? இதனால் உண்மையாகப் பயனடையப் போவது யார்? எனும் கேள்விகளுக்கு நாட்டு மக்கள் முறையான விளக்கத்தைக் கோருகிறார்கள்". இவ்வாறு அதில் அவர் பதிவிட்டுள்ளார்.

# நாகர்கோவிலில் ஏப். 15-ல் பிரதமர் மோடி ரோடு ஷோ

**சென்னை, ஏப்.10:**

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாகர்கோவிலில் வரும் 15-ம் தேதி பிரதமர் மோடி, ரோடு ஷோ நடத்துகிறார். சட்டப்பேரவை தேர்தலையொட்டி பிரதமர் நரேந்திர மோடி வரும் 15-ம் தேதி குமரி மாவட்டம் வருகை தந்து, வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசுவதாக திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதற்காக, நாகர்கோவில் அருகே ஈத்தங்காட்டில் உள்ள மைதானம் ஆய்வு செய்யப்பட்டது.

# டியூஷன் அக்கா திட்டம்! காங்கிரஸ் தேர்தல் அறிக்கை வெளியீடு!!

**சென்னை, ஏப்.10:**

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தமிழக காங்கிரஸ் கட்சி சார்பில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் இன்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தலைவர் கார்த்தி ப. சிதம்பரம் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் முன்னிலையில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையில் 28 தொகுதிகளில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை, கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் வெளியிட்டார். 10 தலைப்புகளைக் கொண்ட தேர்தல் வாக்குறுதி வெளியாகியிருக்கிறது.

அதில், தமிழகத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள 3 லட்சம் அரசுப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.2 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

காவல்துறையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு டியூஷன் அக்கா திட்டம் செயல்படுத்தப்படும்.

முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2 ஆயிரம் ஓய்வூதியமாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.







# திருக்குறள் குறள்-585

**கடாஅ உருவொடு கண்அஞ்சா தியாண்டும்**
**உகாஅமை வல்லதே ஒற்று**



ஐயுற முடியாத உருவத்தோடு, பார்த்தவருடைய கண் பார்வைக்கு அஞ்சாமல் எவ்விடத்திலும் மனதிலுள்ளதை வெளிப்படுத்தாமல் இருக்க வல்லவனே ஒற்றன் ஆவன்.

## சிந்திக்க ஒரு நொடி



உன்னை தள்ளி விட ஆயிரம் கைகள் வரும். ஆனால் உன்னை தாங்கி பிடிக்க ஒரு கைதான் வரும் அதுதான் தன்னம்பிக்கை

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

# அணைக்கட்டு தொகுதி சோழவரத்தில் திமுக வேட்பாளர் நந்தகுமார் வாக்கு சேகரிப்பு!



**வேலூர், ஏப். 10:**

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மற்றும் திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் ஆசி பெற்ற, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர், வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார், அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, கணியம்பாடி தெற்கு ஒன்றியம், சோழவரம் கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வில் ஒன்றிய செயலாளர் என். கஜேந்திரன், சோழவரம் ஜேபி (எ) ஜெயப்பிரகாஷ், திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# சின்ன வெங்காயம் கிலோ ரூ.3



சின்ன வெங்காயம் மூன்று மாத கால பயிர் என்பதால் விவசாயிகள் வெயில், மழை என்று பாராமல் மிகவும் சிரமப்பட்டு தான் இந்த சின்ன வெங்காயத்தை விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது சின்ன வெங்காயத்திற்கு போதிய விலை கிடைக்காமல் பட்டறையில் சேமித்து வைத்திருக்கும் சின்ன வெங்காயங்கள் 3 மாதங்கள் மட்டுமே தாக்குப்பிடிக்கும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கடந்த சீசனில் கிலோ ரூ.13க்கு கொடுத்த வெங்காயம் தற்போது கிலோ ரூ.3க்கு வியாபாரிகளுக்கு கொடுப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# இரட்டை இலை சின்னத்திற்கு வேட்பாளர் S.இராமச்சந்திரன் வாக்குகளை சேகரித்தார்





திருவண்ணாமலை மாவட்டம் ஏப்ரல் 9 துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேப்பத்துறை ஊராட்சியில் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் S.இராமச்சந்திரன் அவர்கள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து வருகிறார். உடன் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# திட்டக்குடி தனி தொகுதியில் திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் தீவிர வாக்கு சேகரிப்பு: பொதுமக்கள் மலர்தூவி உற்சாக வரவேற்பு

**கடலூர், ஏப்.10:**



திட்டக்குடி தொகுதி திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் திட்டக்குடி தொகுதிக்கு உட்பட்ட வைத்திநாபுரத்தில் துவங்கி தொழுதூர் ராமநத்தம் பெரங்கியம் அரங்கூர் வாகையூர் ஆக்கனூர் கொரக்கை புதுநத்தம் பாளையம் இடைச்செருவாய் கீழ்ச்செருவாய் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவருக்கு வழிநெடுகிலும் திரண்டிருந்த திமுக, காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மலர் தூவியும், முழக்கங்களை எழுப்பியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து மாலை திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோடங்குடி எழுமாத்தூர் போர்த்திரமங்கலம் கொட்டாரம் நெய்வாசல் ஆவினங்குடி பட்டூர் கிராம பகுதியில் சி.வெ.கணேசன் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

பிரசாரத்தின் போது காங்கிரஸ் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் இறையூர் ஞானகிராமன், திட்டக்குடி தொகுதி செயலாளர்கள், தொகுதி திமுக மற்றும் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் பலர் உடனிருந்தனர்.

# சிலிண்டர் தட்டுப்பாடு



பெரிய அளவில் பேசப்படுவது. பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தி, உணவுப் பிரச்சினையாகியுள்ளது என்றால் மிகையில்லை.

சமீபத்தில் குடும்பத்தினர் பனிரெண்டு பேர் சேர்ந்து கொண்டு ஒரு விசேஷத்திற்காக பெங்களூரு சென்றோம். குளிர்சாதன வசதியுடன் கூடிய ஏசி வேன் வைத்துக்கொண்டு சென்றோம்.

ஏழரை முதலே காலை டிபனுக்காக ஹோட்டலை எதிர்பார்த்துப் போய்க்கொண்டிருக்கிறோம். மம்ஹூம். வழியெங்கும் அனைத்தும் மூடியிருந்தது. வயிற்றில் பெருச்சாளி புகுந்தாற்போல் உள்ளது. என்ன செய்ய? அரை முழுங்கு அரை முழுங்கு என ஒரு பாட்டில் தண்ணீர் குடித்தாயிற்று. அடுத்து இயற்கை உபாதை வேறு.

ஒரு கட்டத்தில் ஒரு மெஸ் திறந்திருக்க எல்லோர் கண்ணும் விரிந்தபடி கீழிறங்கினோம். இட்லி, பூரி என சாப்பிட்டு டீ குடித்தாயிற்று. போகும்போது இப்படி ஆனதால் வரும்போது உஷாராக கட்டுசாதத்தை மறக்காமல் எடுத்து வந்தோம்.

வரும்போது வழியில் சில ஹோட்டல்களில் டீ, காபி மட்டும் சாப்பிட்டோம். சில கரண்ட் அடுப்பில் இயங்கியது. ஹோட்டலுடன் கூடிய இடங்களில் சாப்பாடோ, டிபனோ இல்லை. டீ, காபி மட்டும் தான். காத்து வாங்குகிறது. முதலாளிகளின் மனக்குமுறல்கள் மனவேதனை அளித்தது.

இதனால் தெரிவிப்பது என்னவென்றால் தாங்கள் அனைவரும் தங்கள் வீட்டில் சமைத்ததையோ, ஹோட்டலில் சாப்பிடும் போதோ, விழாக்களில் சாப்பிடும் போதோ அந்தச் சாப்பாடு தங்கம் விலை கொடுத்து வாங்கப்பட்ட சிலிண்டரில் சமைத்தது. மிகவும் கஷ்டமான நிலையில் தயாரிக்கப்பட்டு கிடைக்கும் அரிதான உணவு என்பதை உணருங்கள். ஒரு துளி கூட ஒரே ஒரு பருக்கைக் கூட வீணாக்காதீர்கள். வேண்டும், சாப்பிட முடியும் என்பதை மட்டும் கேட்டு வாங்கிச் சாப்பிடுங்கள். வீட்டு உபயோகத்திற்கு சிலிண்டர்கள் தற்போது கிடைத்தாலும் எவ்வளவு நாட்கள் கிடைக்கும் என்பது கேள்விக்குறியே!

இந்நிலைமை நீடிக்கப் போகிறதே தவிர விரைவில் தீர்வு காணப் போவதில்லை என்பதை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள். நன்றி.

**வி.பிரபாவதி, மடிப்பாக்கம்**

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை



சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

# செஞ்சியின் மக்கள் செல்வாக்கு வேட்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்





விழுப்புரம் மாவட்டம் ஒருங்கிணைந்த கட்சி அமைப்பு ரீதியாக கழக மாவட்ட திமுக இருந்தபொழுது எண்பதுகளில் செஞ்சியார் திமுக என்று அழைத்தனர் அரசியல் நிர்வாக வசதிக்காக கழக மாவட்டத்தை மூன்று அல்லது இரண்டாக பிரித்தபொழுதும் அப்போதும் எப்போதும் இப்பொழுதும் விழுப்புரம் வடக்கு மாவட்டமாக வந்த செஞ்சி தொகுதி மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக செஞ்சி மஸ்தான் உள்ளதால் சட்டமன்றத் தொகுதி செஞ்சிக்கோட்டை தக்க வைக்க உள்ளார் எனவும் மீண்டும்அமைச்சர் பொறுப்புகிடைக்க வாய்ப்பு உள்ளதாகவும் அரசியல் நோக்கர்கள் பொதுமக்களின் கருத்தாக உள்ளது. அகரம் ராமதாஸ் செய்தியாளர்

# வேட்பாளர் கு.பிச்சாண்டி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து பிரச்சாரம்






திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கொளக்கரவாடி பகுதிகளில் வேட்பாளர் கு. பிச்சாண்டி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார். உடன் ஒன்றிய செயலாளர் V. P அண்ணாமலை அவர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பிரச்சாரத்தில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# கும்பாபிஷேக அழைப்பிதழ்

**தஞ்சாவூர், ஏப்.10:**



தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி பண்டாபீஸ் அக்ரஹாரத்தில் நேற்று (09.04.2026) வியாழக்கிழமை முதல் (12.04.2026) காலை வரை யாகசாலை பூஜைகள் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து (12.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 7.56 மணிக்கு மேல் 9.50 மணிக்குள் ரிஷப லக்னத்தில் புனரோத்தாரண அஷ்டபந்தன நூதன பரிவார மூர்த்திகள் சகித ஸ்ரீ கற்பக மூம்மூர்த்தி ஸ்ரீகனகதுர்கா மஹா கும்பாபிஷேக வைபவம் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ கற்பக விநாயகர் சபா, திருப்பணி & கும்பாபிஷேக குழு செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

# காலத்துக்கு ஏற்ற உணவுகள் !

**வந்தவாசி, ஏப்.10:**



கோடைக் காலத்தில் உடல் வெப்பம் அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் பித்தம் நிறைந்த, காரம், புளிப்பு, எண்ணெய் போன்ற உணவுகளை குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த உணவுகளால் பித்தமும், உடல் வெப்பமும் அதிகரிக்கும். இதனால், மூட்டுவலி, அரிப்பு, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், முகத்தில் கட்டி, உடல் வலி போன்றவை ஏற்படும்.

கோடைக் காலத்தில், குளிர்ச்சி தரக்கூடிய உணவுகளான கேழ்வரகு, பச்சைப் பயறு, பாசிப் பருப்பு, நீர்க் காய்கள், கீரைகள், இளநீர், இஞ்சி மற்றும் பச்சை மிளகாய் சேர்க்காத நீர் மோர் சாப்பிடலாம். குளிர் காலத்தில் செரிமான சக்தியின் ஆற்றல் அதிகமாக இருக்கும். பொங்கல், பூரி போன்ற எண்ணெய் நிறைந்த, செரிமானத்துக்கு நேரம் ஆகக்கூடிய உணவைச் சாப்பிட்டாலும் செரிக்கக் கூடிய ஆற்றல் உடலில் இருக்கும். நல்லெண்ணெய், பசு நெய் சேர்த்த உணவுகள் சாப்பிடலாம். இதனால் சரும வறட்சி இருக்காது. நீண்ட நேரத்துக்குப் பசிக்காத வகையில், நார்ச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடலாம்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# கோவில்பட்டி பள்ளியில் ஆசிரியர்களுக்கு பாராட்டு

**கோவில்பட்டி, ஏப்.10:**



கோவில்பட்டி நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நர்சரி மற்றும் பிரைமரி வகுப்பு ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

உறவின்முறை சங்க உப தலைவர் செல்வராஜ் தலைமை தாங்கினார். செயலாளர் ஜெயபாலன், பத்திரகாளி அம்மன் கோவில் தர்மகர்த்தா மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளிச் செயலர் அட்வகேட் செல்வம், பொருளாளர் பாஸ்கரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளி முதல்வர் பிரபு வரவேற்றார்.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு பாராட்டு நிகழ்வில் உறவின்முறை செயலாளர் ஜெயபாலன் பேசுகையில் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி மாணவர்கள் இந்த வயதில் புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள்.

அவர்களுக்கு ஆசிரியர்கள் சரியான வழிகாட்டுதல், திறமைகளை வளர்க்க முழுமையான முயற்சி, மாணவச் செல்வங்களின் கல்வி முன்னேற்றம் உள்ளிட்டது பற்றி பெற்றோர்களுடன் தொடர்பில் இருந்து அவர்களின் வளர்ச்சி பற்றி தெரிவிக்க வேண்டும். சமுதாயத்தில் நல்ல மனிதர்களாக வருவதற்கு ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.

தொடர்ச்சியாக ஆசிரியர்கள் ஐஸ்வரியம், அன்னலட்சுமி, அனிதா லட்சுமி, ஷர்மிளாதேவி, மாரியம்மாள், கீதா, அல்மிர்ஷாகனி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, கனகராணி, பிரியங்கா ஆகியோருக்கு உப தலைவர், சங்க செயலாளர், கோவில் தர்மகர்த்தா, பள்ளிச் செயலர் ஆகியோர் பரிசளித்து பாராட்டினர்.

பின்னர் பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்று, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. ஆசிரியர் காளீஸ்வரி நன்றி கூறினார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### தேமுதிகவிலிருந்து விலகிய மீசை ராஜேந்திரன் அதிமுகவில் இணைந்தார்



சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தேமுதிகவின் செய்தித் தொடர்பாளரும், மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் தீவிர விசுவாசியுமான நடிகர் மீசை ராஜேந்திரன் அக்கட்சியிலிருந்து விலகி, அதிமுகவில் இணைந்தார்.

தமிழ் திரையுலகில் வில்லன் மற்றும் குணச்சித்திர நடிகராக அறியப்படுபவர் மீசை ராஜேந்திரன். இவருக்குத் திரையுலகில் களம் அமைத்துக் கொடுத்தவர் மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த். அதன் காரணமாக, கடந்த 31 ஆண்டுகளாக விஜயகாந்தின் தீவிர விசுவாசியாக அவரது மன்றத்திலும், கட்சி தொடங்கப்பட்ட பின் கடந்த 21 ஆண்டுகளாக தேமுதிகவிலும் பயணித்து வந்தார்.

மேலும் அவருக்கு செய்தித் தொடர்பாளர் பதவியும் வழங்கப்பட்டிருந்தது. விஜயகாந்த் உயிருடன் இருந்தவரை கட்சிக்குள் முக்கியத்துவம் பெற்று வந்த ராஜேந்திரன், முன்னதாக நடந்த தேர்தல்களில் போட்டியிடவும் வாய்ப்பு பெற்றார். இருப்பினும், விஜயகாந்த் மறைவிற்குப் பிறகு கட்சியில் தனக்கான முக்கியத்துவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டதாக அவர் உணர்ந்தார். நடப்பு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட அவர் சீட் எதிர்பார்த்த நிலையில், தலைமை அவருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த ராஜேந்திரன், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்திற்குத் தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார். இதையடுத்து, நேற்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் மீசை ராஜேந்திரன் இணைந்தார்.

### திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருமாவளவன் 10ம் தேதி முதல் பிரசாரம்

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், எம்.பி., தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார் என திமுக தலைமைக் கழகம் அறிவித்துள்ளது. அதன்படி, 10ம் தேதி கடலூர் கிழக்கு குறிஞ்சிபாடி தொகுதியிலும், 11ம் தேதி விழுப்புரத்தில் வானூர் மற்றும் விக்கிரவாண்டியிலும், 12ம் தேதி காஞ்சிபுரம் தெற்கில் மதுராந்தகத்திலும், 13ம் தேதி காஞ்சிபுரம் வடக்கில் செங்கல்பட்டிலும், 14ம் தேதி திருவள்ளூர் கிழக்கில் கும்மிடிப்பூண்டியிலும் திருமாவளவன் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

### தமிழகத்தில் முதல்முறை வாக்காளர் விகிதம் 34% உயர்வு



தமிழகத்தில் முதல் முறையாக வாக்களிக்கும் இளம் வாக்காளர்களின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. 18-19 வயது உடைய வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த 2024 மக்களவைத் தேர்தலின்போது 10.9 லட்சமாக இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 14.6 லட்சமாக உயர்ந்துள்ளது. சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் 5.67 கோடி பேர் இடம்பெற்றிருந்தனர். அதன் பின்னர் மேலும் 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் படிவம் 6-ஐ சமர்ப்பித்தனர். அதன்படி, இந்த சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் எண்ணிக்கை 5.73 கோடியாக உள்ளது.அதில் பெண்கள் 2.93 கோடி பேர். ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2.80 கோடி. மூன்றாம் பாலினத்தவர் 7,728 பேர். முதல்முறை வாக்காளர்களைப் பொருத்தவரை கடந்த மக்களவைத் தேர்தலின்போது 1.8 சதவீதமாக இருந்தனர். தற்போது அந்த விகிதம் 2.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## "தேர்தல் ஆணையம் இப்போது பாஜகவின் கிளைக் கழகம்!": முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

திருவண்ணாமலையில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்த கூட்டத்தில் அவர் பேசியது: "திருவண்ணாமலை என்றாலே 'திமுக மலை!' என்ற அளவுக்கு கட்சி தொடங்கிய காலத்திலிருந்து இப்போது வரை திருவண்ணாமலை திமுகவின் கோட்டையாக விளங்குகிறது. திருவண்ணாமலையை முன்னாள் முதல்வர் கருணாநிதிதான் தனி மாவட்டமாக உருவாக்கினார். இப்போது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் திருவண்ணாமலையை மாநகராட்சியாக தரம் உயர்த்தி இருக்கிறோம். திகைக்கும் அளவுக்கு, சாதனைகளால் நிறைந்ததுதான் திராவிட மாடல் ஆட்சி. ஆனால், இதற்கு நேர் எதிராக, வேதனைகளால் நிரம்பியதுதான் பழனிசாமியின் ஆட்சி. நான் லிஸ்ட் போட்டு சொன்னது போன்று, அவரிடம் சொல்ல சாதனைகள் இருக்கிறதா?



அதனால்தான் ஊர் ஊராகச் சென்று மக்களை எப்படி ஏமாற்றலாம் என்று திட்டமிட்டு புலம்பிக் கொண்டிருக்கிறார்.

பழனிசாமியைப் பொறுத்தவரையில், அவரும் ஒன்றும் செய்யவில்லை; நாம் செய்யும் நல்லதையும் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் உரிமைத்தொகை கிடைக்கக் காரணமாக இருந்த, மருத்துவ காப்பீட்டுத் திட்ட அட்டை கிடைக்கக் காரணமாக இருந்த, பல ஆண்டுகளாக கிடைக்காத பட்டா கிடைக்கக் காரணமாக இருந்த, 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களை நடத்தக் கூடாது என்று கோர்ட்டுக்கு சென்று தடை கேட்டுச் சென்றார். ஆனால், என்ன ஆனது? கோர்ட்டில், பத்து லட்சம் ரூபாய் அபராதம் போட்டு அனுப்பிவிட்டார்கள்.

"இதற்கு மேலும் பேசினால் இருபது லட்சம் ரூபாய் ஃபைன் போடுவேன்" என்று நீதிபதி எச்சரித்து அனுப்பினார்கள். இப்போது சொல்கிறேன். ஆட்சிக்கு நாம்தான் வரப்போகிறோம். அதில் எந்த சந்தேகமும் கிடையாது. வந்ததற்கு பிறகு, மீண்டும் இனிமேல், இந்த ஸ்டாலின் முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும். முடிந்தால் அதை "மக்கள் துரோக" பழனிசாமி தடுத்துப் பார்க்கட்டும்.

பழனிசாமி அவர்களே... மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். ஏதாவது ஒரு விஷயத்திலாவது நீங்கள் டெல்லி ஓனர் பக்கம் நிற்காமல், தமிழ்நாட்டு மக்கள் பக்கம் நின்றிருக்கிறீர்களா? பாஜக அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் எதிராகச் செய்யும் ஒரு செயலையாவது ரோஷம் வந்து கண்டித்து இருக்கிறீர்களா?

உலகம் அனைத்திற்கும் பொதுவானவர் திருவள்ளுவர். அவர் மேல் காவி சாயம் பூசினார்கள். அதை எதிர்த்து பழனிசாமி ஒரு வார்த்தை பேசியிருப்பாரா? அதனால்தான் கடைசியில் மக்கள் திலகம் எம்ஜிஆர் சிலை மேலேயே காவி பெயிண்ட் ஊற்றும் அளவுக்கு, சங்கி கலவரக் கும்பல் இறங்கிவிட்டார்கள்.

இந்திக்கும், சமஸ்கிருத வளர்ச்சிக்கும் பாஜக அரசு பூசணிக்காய் அளவுக்கு நிதி ஒதுக்குகிறார்கள். ஆனால், தமிழுக்கு பட்டாணி அளவுக்கு கூட ஒதுக்குவது இல்லை. இந்தத் துரோகத்தை எதிர்த்து பழனிசாமி பேசவே மாட்டார். அவருக்கு சுயமரியாதையும் கிடையாது, தமிழுணர்வும் கிடையாது.

கீழடி அறிக்கையை ஏன் வெளியிடாமல் இருக்கிறீர்கள்? என்று நாம் எத்தனை முறை பாஜக அரசை பார்த்து கேட்கிறோம். பழனிசாமி ஒப்புக்காவது இதைப் பற்றி பேசி பார்த்திருக்கீறீர்களா?

மீண்டும் சொல்கிறேன் தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகள் எல்லாவற்றையும் கடந்து, நம்முடைய தாய்த் தமிழ்நாட்டைக் காக்க, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மக்கள் அனைவரும், நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைத்தான் ஆதரிக்க வேண்டும்" என்றார் முதல்வர் ஸ்டாலின்.

## உங்களில் ஒருவனாகச் சேவை செய்ய வாய்ப்பளியுங்கள்: கருணாஸ் வேண்டுகோள்



சிவகங்கைசட்டப்பேரவைத் தொகுதியில் மதச்சாா்பற்ற முற்போக்குக் கூட்டணி சாா்பில் போட்டியிடும் நடிகா் கருணாஸ் சிவகங்கை தெற்கு ஒன்றியத்தில் உள்ள பையூா், பழமலை நகா், வேம்பன்குடி, கீழக்கண்டனி, மேலக்கண்டனி உள்பட 45 கிராமங்களில் காலை 7 மணி முதல் இரவு 8.15 மணி வரை சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களிடம் வாக்கு சேகரித்தாா்.

சிவகங்கைசட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட பையூா் பழமலை நகரில் வசிக்கும் நரிக்குறவா் சமுதாய மக்களிடம் வாக்கு சேகரித்து பேசியதாவது:

பழமலைநகரில் வசித்து வரும் நரிக்குறவா் சமுதாய மக்களின் நீண்டகால கோரிக்கையான நிலம், இனம் சாா்ந்த வாழ்வாதார உரிமைகளை முறைப்படி அமைத்துக் கொடுப்பதே தனது முதல் வேலையாக இருக்கும். என்னைத் தேடி வரும்போது, இது நம் வீட்டுப் பிள்ளை என்று நீங்கள் கருதும் அளவுக்கு உங்கள் குடும்பத்தில் ஒருவனாக நான் இருப்பேன். தமிழக முதல்வா் அறிவித்துள்ள மக்கள் நலத்திட்டங்கள் முறையாகப் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் பணியாற்றுவேன். கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பதவியில் இருந்தவா்கள் செய்ததை விட, அடுத்த ஐந்து ஆண்டுகள் உங்களுக்கு உண்மையாகச் சேவை செய்ய எனக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றாா் அவா். இதில், நிா்வாகிகள் ஜெயராமன், அசோகன் உள்ளிட்டோா் கலந்து கொண்டனா்.

## அதிமுக அரசு அனைத்து தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றித்தரும் - பழனிசாமி உறுதி

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அதிமுகபொதுச்செயலாளர் பழனிசாமி மாவட்ட வாரியாக பிரச்சாரம் செய்து வருகிறார். சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில், தேசிய ஜனநாயக கூட்டணியில் 13 இடங்களில் அதிமுகவும், தலா ஒரு இடத்தில் பாஜக, பாமக, அமமுக ஆகிய கூட்டணி கட்சிகளும் போட்டியிடுகின்றன.

இவர்களை ஆதரித்துவேளச்சேரி தொகுதியில் பழனிசாமி நேற்று பிரச்சாரத்தை தொடங்கினார். அங்கு அவர் பேசியதாவது: வெயில் நேரத்தில் வந்திருக்கிறோம். வருண பகவான் நமக்கு வெயிலைக் குறைத்திருக்கிறார். இயற்கை நமக்கு சாதகமாக இருக்கிறது. இந்த தேர்தலில் திமுக எனும் தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும்.



திமுக ஆட்சிக்கு வந்த 5 ஆண்டுகளில் மக்கள் பட்டது துன்பம், வேதனை மட்டும்தான். அதிமுக ஆட்சி சட்டத்தின் ஆட்சியாக இருந்தது. மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்தார்கள். எங்கே தவறு நடந்தாலும், அதை தடுத்து, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் அரசாக அதிமுக அரசு இருந்தது.திமுக அரசுக்கு விலை ஏற்றம் பற்றியோ, மக்களை பற்றியோ கவலை இல்லை. எப்போது பார்த்தாலும் ஸ்டாலின் தனது குடும்பத்தைப் பற்றி மட்டும் தான் கவலைப்படுவார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர் கெட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் விற்பனை, பெரும்பாலும் கஞ்சா விற்பனைக்கு திமுக நிர்வாகிகள் துணை நிற்பதால் அதைகட்டுப்படுத்த முடியவில்லை. திமுக ஆட்சி இருக்கும் வரை கஞ்சா விற்பனையைத் தடுக்க முடியாது. திமுக ஆட்சியில் கருணாநிதியாக இருந்தாலும், ஸ்டாலினாக இருந்தாலும் குடும்ப ஆட்சி தான். 4 அதிகார மையங்கள். அவர்கள் தமிழகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டு, மக்களுக்கு துன்பத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, ஏழை மக்களுக்கான திட்டங்களை கொடுக்க அதிமுக அரசு அனைத்து தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றித்தரும். இவ்வாறு அவர் பேசினார்.

## விருதுநகரில் விஜயபிரபாகரனின் வெற்றி உறுதி செய்யப்படும்: மாணிக்கம் தாகூர்



கடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதிரும், புதிருமாக மாணிக்கம்தாகூர் (காங்கிரஸ்), விஜய பிரபாகரன் (தே.மு.தி.க.) களம் இறங்கினர். இதில் மாணிக்கம்தாகூர் சுமார் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பின்னர் அந்த தேர்தல் முடிவு தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் காங்கிரஸ், தே.மு.தி.க. கட்சிகள் இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் உள்ளன. விருதுநகர் தொகுதியில் போட்டியிடும் விஜயபிரபாகரன் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அவர், மதுரை திருநகரில் மாணிக்கம்தாகூர் அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்து வாழ்த்து பெற்றார். ஒருவருக்கு ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டனர்.

இதுகுறித்து மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

திருநகரில் உள்ள நமது அலுவலகத்தில், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இந்த மண்ணின் விருதுநகர் சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் மக்களுக்காகவே வாழ்ந்த 'கேப்டன்' விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் சந்தித்தார்.

அவர் வெற்றி பெற,இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்போடு செயல்பட்டு, அவரை மாபெரும் வெற்றி பெறச் செய்ய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டேன். நமது அன்புத் தலைவர் ராகுல் காந்தியின் ஆசியோடும், விருதுநகரில் விஜய்பிரபாகர் அவர்களின் வெற்றி உறுதி செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## "தமிழகத்துக்கு துரோகம் செய்பவர்களுக்கு ஒருபிடி மண்கூட கிடைக்காது" - கனிமொழி ஆவேசம்

தமிழகசட்டப்பேரவைதேர்தலை முன்னிட்டு ஜோலார்பேட்டை தொகுதியில் தூத்துக்குடி எம்.பி., கனிமொழி நாட்றம்பள்ளி அடுத்த புதுப்பேட்டையில் நேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது: கடந்த தேர்தலில் திமுக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதனால், இந்த தேர்தலில் நாங்கள் தைரியமாக வாக்கு கேட்டு வந்துள்ளோம். திமுக அரசின் நலத்த திட்டங்களால் ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொரு வீடும் பயனடைந்துள்ளது. திமுக ஆட்சியில் தமிழகம் வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆனால், எதிரணியில் இருப்பவர்கள் தேர்தலுக்கு, தேர்தல் மேடையில் கூடி வாக்கு கேட்கிறார்கள். தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யக்கூடிய அத்தனை பேரும் ஒரு அணியில் திரண்டு எதிரணியிலேயே நிற்கின்றனர். இந்த தேர்தல் தமிழ்நாட்டை எதிர்க்கக் கூடியவர்களுக்கும், தமிழ்நாட்டுக்குமான தேர்தல்.

தமிழ்நாட்டில் இருந்து நிதியை பெறும் மத்திய அரசு தமிழகத்துக்கு தேவையான நிதியை தராமல் பிஹார், மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் மாநிலங்களுக்கு ஒதுக்குகின்றனர்.



மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.3,600 கோடி நிதி தருவதாக கூறுகின்றனர்.

தண்ணீருக்கான திட்டத்துக்கு கூட பணம் தரவில்லை. பிரதமர் மோடி வடஇந்தியாவில் தேர்தல் நடக்கும்போது தமிழகத்தில் வடஇந்தியர்களை மோசமாக நடத்துகிறார்கள் என கூறுகிறார். தமிழ்நாட்டுக்கு வந்தால், நான் தமிழனாக இருக்க ஆசைப்படுகிறேன் என கூறுகிறார்.

ஒவ்வொரு தேர்தலுக்கும் தங்களது நிலையை, சாயத்தை மாற்றக்கூடியவர்கள் தான் எதிரணியில் இருப்பவர்கள். கடந்த மக்களவை தேர்தலில் பழனிசாமி பாஜகவுடன் கூட்டணி இல்லை எனக் கூறினார்.ஆனால், இந்த தேர்தலில் அதனை மறந்துவிட்டார். அவருக்கு தெரிந்தது துரோகம் ஒன்றுதான்.

தமிழ்நாட்டுக்கு துரோகம், தன்னை உருவாக்கிய கட்சிக்கு துரோகம், அவருக்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த ஓ.பி. எஸ்ஸை கட்சியில் இருந்து நீக்கிவிட்டார். இதையடுத்து அவர் தமிழ்நாட்டை காக்க நம்முடன் இணைந்துள்ளார். அவரிடம் இருந்து உண்மையை புரிந்துக்கொண்டு நம்மிடம் வந்து சேர்ந்தவர்கள் ஏராளம்.

துரோகங்களையே தொடர் கதையாக செய்யக்கூடியவர் பழனிசாமி. பாஜகவுடன் கூட்டணி வைக்கும் கட்சியை பாஜக எடுத்துக் கொள்ளும். இது பெரியார், அண்ணா, கலைஞரின் மண்.

தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்பவர்களுக்கு ஒருபிடி மண்கூட கிடைக்காது. திமுக வேட்பாளர்களுக்கு பொதுமக்கள் அமோக ஆதரவு தர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## காரைக்குடியில் விஜய் இன்று பிரசாரம்: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

**காரைக்குடி, ஏப்.10:**

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இன்று (வெள்ளிக்கிழமை) காரைக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் டி.கே.பிரபு உள்பட மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர் ஆகிய 4 தொகுதிகளின் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து காரைக்குடியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

காரைக்குடி தேவர் சிலை அருகே பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை தேர்தல் பிரசார கூட்டத்திற்கு அனுமதி கேட்கப்பட்டு உள்ளது. இதையொட்டி தேர்தல் கமிஷன் அதிகாரிகள், போலீஸ் அதிகாரி கள் ஆலோசனை நடத்தினர். இதை தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத், காரைக்குடி உதவி போலீஸ் சூப்பிரண்டு ஆஷிஷ் புனியா மற்றும் அதிகாரிகள் குழுவினர் பிரசாரத்திற்கு அனுமதி கேட்கப் பட்ட தேவர் சிலை பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

காரைக்குடி தொகுதி வேட்பாளர் டி.கே.பிரபுவிடம் பிரசார கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினர். சில நிபந்தனைகளுடன் விஜய்யின் பிரச்சார கூட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் என தமிழக வெற்றிக்கழக கழகத்தினர் தெரிவித்தனர். இந்த நிலையில், காரைக்குடியில் விஜய் நாளை பிரசாரம் மேற்கொள்ள உள்ள நிலையில், ரசிகர்கள் மற்றும் தொண்டர்கள் ஏறாமல் இருக்க டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், உயரமான மரங்களுக்கு பாதுகாப்பு தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விஜய் பிரசாரத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

## விஜய் பிரசாரத்தில் விபத்து: தவெகவினர் 11 பேர் மீது வழக்கு

தேர்தலையொட்டி, தவெக தலைவர் விஜய்யும் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் புதன்கிழமையில் விஜய் தலைமையில் தவெக பிரசாரம் நடைபெற்றது. இந்த நிலையில், விஜய் பங்கேற்ற நெல்லை, தூத்துக்குடி பிரசாரங்கள் சிறு விபத்துகளும் ஏற்பட்டன.

நெல்லை மாவட்டம், வாகைகுளம் பகுதியில் விஜய்யின் வாகனத்தை தவெக தொண்டர்கள் பின்தொடர்ந்து சென்றபோது, முந்திச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிள் கீழே விழுந்ததில், பின்வந்த வாகனங்களும் மோதியதில் 7 பேர் காயமடைந்தனர். தொடர்ந்து, பிரசாரம் நடைபெற்ற பகுதியில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்த நிலையில், சாலையைக் கடக்க முயன்ற ஒருவர் மீது அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், விஜய்யின் வாகனத்தை பின்தொடர்ந்து செல்ல முயன்ற வாகனங்களால் ஏற்பட்ட விபத்தில் மொத்தம் 16 பேர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து, விபத்துகள் தொடர்பாக, கட்சி நிர்வாகிகள் 11 பேர் வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# விருதுநகர் பராசக்தி மாரியம்மன் கோவில் தேரோட்டம்: பக்தர் தரிசனம்

**விருதுநகர், ஏப்.10:**



விருதுநகரில் பிரசித்தி பெற்ற பராசக்தி மாரியம்மன் கோவில் உள்ளது. ஆண்டுதோறும் இந்த கோவிலில் பங்குனி பொங்கல் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டு பங்குனி பொங்கல் திருவிழா கடந்த 29-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

நேற்று முன்தினம் அக்னி சட்டி மற்றும் கயிறு குத்து திருவிழா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனுக்கு 21 அக்னி சட்டி, 51 அக்னி சட்டி, பிள்ளைத்தொட்டில், கரும்பு தொட்டில், அலகு குத்தி ரதம் இழுத்தல் உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.

வெயிலுகந்தம்மன், பராசக்தி மாரியம்மன் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நேற்று மாலை நடைபெற்றது. தேரில் பராசக்தி மாரியம்மன், வெயிலுகந்தம்மன் சிறப்பு அலங்காரத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வடம்பிடித்து தேர் இழுத்தனர். நாளை மஞ்சள் நீராடலுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

# அருணாப்பேரி அழகுமுத்து மாரியம்மன் கோவிலில் பங்குனி திருவிழா

**பாவூர்சத்திரம், ஏப்.10:**



பாவூர்சத்திரம் அருகே அருணாப்பேரி அழகுமுத்து மாரியம்மன் கோவிலில் 97-ம் ஆண்டு பங்குனி மாத திருவிழா 2 நாட்கள் நடைபெற்றது. முதல் நாளான நேற்று முன்தினம் இரவு வில்லிசை, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

2-ம் நாளான நேற்று அதிகாலையில் அம்மனுக்கு சிறப்பு அபிசேகம், தீபாராதனை நடைபெற்றது. காலையில் அருணாப்பேரி அழகுமுத்து மாரியம்மனின் உடன்பிறந்த சகோதரரான மாயகண்ணன் வீட்டில் இருந்து அம்மனுக்கு பட்டு, வளையல் தாமரை மலர் உள்பட பூ வகைகள், மாலை பழ வகைகள், பலகாரங்கள் உள்ளிட்ட 201 சீர்வரிசைகள் எடுத்து வர, அம்மனுக்கு விரதம் இருந்த பெண்கள் முளைப்பாரி எடுத்து வர மேளதாளங்கள் முழங்க ஊரின் முக்கிய பகுதிகளில் ஊர்வலமாக வந்து அம்மனுக்கு படைத்தனர்.

பின்னர் அம்மனுக்கு 600 கிலோ எடையில் பழங்களால் செய்யப்பட்ட மாலை அணிவிக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜை நடைபெற்றது.

கோவில் தர்மகர்த்தா சிவன்பாண்டியன் அம்மன் போல் வேடமணிந்து அம்மனை அலங்கரிப்பது போல் மலர்கள், மாலை, ரிபன், வளையல் அணிந்து, பவுடர் பூசி சிறப்பு காட்சி அளித்தார்.

பின்னர் பக்தர்களுக்கு மலர்கள் பிரசாதமாக வீசப்பட்டது.

பக்தர்களுக்கு பழரசம், பானகம், மோர், வெள்ளரி மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருக்குவளை: கீழநாட்டிருப்பு அம்மன் கோவிலில் தீமிதி திருவிழா

**நாகை, ஏப்.10:**



நாகை மாவட்டம் திருக்குவளை அருகே உள்ள கீழநாட்டிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள சியாமளாதேவி மாரியம்மன், வீரமாகாளியம்மன் கோவிலில் பங்குனி பெருவிழாவின் முக்கிய நிகழ்வான தீமிதி திருவிழா நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை முதலே அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் அலங்காரங்கள் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது.

அதன்பின்னர் பூக்குழி இறங்கும் நிகழ்வு தொடங்கியது. விரதம் இருந்த பக்தர்கள் தீக்குழியில் இறங்கி தீமிதித்து அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர். முன்னதாக பால்குட ஊர்வலம், சாமி வீதி உலா உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

தீமிதி திருவிழாவை யொட்டி கோவில் வளாகம் முழுவதும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்ப ட்டிருந்தது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### சிவப்பு தண்டுக் கீரையின் சிறப்பு!

சிவப்பு தண்டுக்கீரையில் கால்சியம் சத்து அதிகம் இருப்பதால் எலும்பு, பல், தலைமுடிக்கு வலுவூட்டுகிறது. சிவப்பு தண்டுக்கீரையில் இரும்புச் சத்தும், கால்சியம் சத்தும் அதிகமாக இருப்பதால் ரத்த சோகை, மூட்டு வலி, முதுகு வலி போன்ற தொந்தரவுகள் இருப்பவர்கள் எடுத்துக் கொள்வது மிகவும் சிறந்தது.

அதிக உடல் பருமன் கொண்டவர்கள் மற்றும் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு சிவப்பு தண்டுக்கீரை ஒரு அருமருந்தாகும். இந்த கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வரும் பொழுது முதுமை தோற்றத்தை தடுத்து உடலை என்றும் இளமையாக வைத்துக் கொள்ள உதவும்.

கருவுற்ற பெண்கள், தினமும் அரை கப் சிவப்பு தண்டுக்கீரைச் சாற்றுடன், ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து அருந்தி வந்தால், மகப்பேறு எளிதாக நடக்கும். குழந்தையும் நல்ல வளர்ச்சியுடன் காணப்படும்.

சிவப்பு கீரையில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து, பெருங்குடலை சுத்தம் செய்து, குடல் இயக்கத்தை சீராக்க உதவுகிறது. சிவப்பு தண்டுகீரையில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கல் மூல நோய் போன்ற பிரச்சனை உள்ளவர்களுக்கு இது ஒரு அருமருந்தாகும்.

இக்கீரையை அடிக்கடி உணவில் தொடர்ந்து எடுத்துக் கொண்டால் இப்பாதிப்புகள் குறைய தொடங்கும். வாய் துர்நாற்றம் நீக்குவதில், சிவப்பு தண்டுக்கீரைக்கு பெரும்பங்கு உண்டு. சிவப்பு தண்டுக்கீரை வயிற்றுப் புண்ணை நீக்குவதன் மூலம், வாய் துர்நாற்றத்தையும் நீக்க வல்லது. சிவப்பு தண்டுக்கீரையை உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் எடுத்துக் கொண்டு வந்தால், ரத்த அழுத்தம் குறையத் தொடங்கும்.

சிவப்பு தண்டுக்கீரை ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் உற்பத்தியை அதிகரித்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடியது. பெண்களுக்கு கருப்பை தொடர்பான பிரச்சனைகளை குறைக்கும் தன்மை இந்த சிவப்பு தண்டுக்கீரையில் உள்ளது.

பித்தம், மிகுதியாக உள்ளவர்கள், சிவப்பு தண்டுக்கீரையை நன்கு பயன்படுத்தலாம். இதன் தண்டைச் சாப்பிட்டு வந்தால், சிறுநீர் நன்கு போவதால், உடலில் பித்தம் குறைந்து, உடல் நலம் மேம்படும்.

சிவப்பு தண்டுக்கீரை, கருப்பையில் தங்கி இருக்கக்கூடிய நச்சுக்களை முற்றிலும் வெளியேற்றி, கருப்பையை சுத்தமாக்கும். எனவே, நாளடைவில் பெண்கள் கருத்தரிக்கும் நிலை உண்டாகும். பெண்களுக்கு கருப்பை தொடர்பான பிரச்சனைகளை, குறைக்கக்கூடிய தன்மை, சிவப்பு தண்டுக்கீரையில் அதிகம் உள்ளது. நாள்பட்ட நோய்க்கு சிகிச்சையளிப்பதில் பீட்டா கரோட்டின் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சிவப்பு கீரையில் பீட்டா கரோட்டின் மிகுந்து உள்ளது மற்றும் ஆஸ்துமா வராமல் தடுக்கும் ஊட்டச்சத்துக்களும் உள்ளன. இது மூச்சுக்குழாய் குழாய்களில் உள்ள தடைகளை நீக்குகிறது.

# டோபமைன் ஃபாஸ்டிங் 2.0 ஒரு முழுமையான பார்வை: உங்கள் கவனமே உங்கள் சக்தி!




தொழில்நுட்பம் அதி விரைவாக வளர்ந்து வரும் இன்றைய டிஜிட்டல் உலகில் ஒவ்வொருவரின் கவனமும் (ATTENTION) சிதறடிக்கப்பட்டு மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தி உள்ளது. ஒரு வேலையை செய்து கொண்டிருக்கும்போதே நமது மூளை WHATSAPP நோட்டிபிகேஷன் பார்ப்பது, இமெயிலை சரி பார்ப்பது, ரீல்ஸ் ஸ்க்ரோல் செய்வது என எப்போதும் ஒரு தூண்டுதலுடன் தேடிக்கொண்டே இருக்கிறது. இதிலிருந்து விடுபட தற்போது ட்ரெண்ட் ஆகி வரும் டோபமைன் ஃபாஸ்டிங்' (DOPAMINE FASTING 2.0) என்ற புதிய முறை நடைமுறை குறித்து இப்பதிவில் காண்போம்.

### டோபமைன் ஃபாஸ்டிங் 1.0 VS 2.0

ஸ்மார்ட் ஃபோனையும் சமூக வலைதளங்களையும் (NO PHONES) பயன்படுத்தாமல் இருப்பது மட்டுமே ஆரம்பகாலங்களில் டோபமைன் ஃபாஸ்டிங்காக இருந்தது. ஆனால் டிஜிட்டல் உலகம் அதி விரைவான வளர்ச்சியை எட்டியுள்ளதால் இப்போது 2.0 பதிப்பு ஒரே நேரத்தில் ஒரே வேலையை மட்டும் முழுமையாக முழு கவனத்துடன் செய்யும் பழக்கத்தை வலியுறுத்தும் 'மோனோடாஸ்கிங்' (MONOTASKING) முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் 'யாரும் பர்பெக்ட் இல்லை' என்பதால் மூளையை ஒருநிலைப்படுத்த இந்த முறை மிகவும் அவசியமாக இருக்கிறது.

### மோனோடாஸ்கிங் (MONOTASKING) கவனக்குவிப்பின் ரகசியம்

நமது மூளை ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்யும்போது அதாவது மல்டிடாஸ்கிங் (MULTITASKING) முறையால் விரைந்து சோர்வடைந்ததால், இதற்கு மாற்றாக மோனோடாஸ்கிங் முறை வந்தது.

* ஒரு நேரத்தில் ஒரு வேலை மட்டும் பார்ப்பது

உதாரணமாக உணவு உண்ணும் போது உணவின் சுவையை மட்டும் ரசிப்பதற்காக டிவி பார்க்காமல் இருப்பது.

* ஆழமாக வேலை பார்த்தல் (DEEP WORK)

முக்கியமானவேலைகளை செய்யும்போது டிவி, மொபைல், டேப், லேப்டாப் போன்ற அனைத்து டிஜிட்டல் கருவிகளையும் சுவிட்ச் ஆப் செய்துவிட்டு முழுமையாக அந்த வேலையில் மூழ்கிவிடுவது.



### அசாதாரண பழக்கங்கள்

குறித்த நேரத்தில் எழவேண்டும் என்பதற்காக சிலர் 6:03, 6:12 என விசித்திரமான நேரங்களில் அலாரம் வைக்கும் சிறு மாற்றங்கள் கூட மூளையை விழிப்புடன் வைத்திருக்கும்.

### மாற்றத்தின் அவசியம்

தொடர்ந்து டிஜி ட்டல் கருவிகளை பயன்படுத்துவதால் நமது மூளையில் சுரக்கும் டோபமைன் அளவு சீரற்றதாக மாறி விரைவாக சலிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே உறவுகளிலும் வாழ்க்கையிலும் சுவையை கூட்ட அன்றாட செயல்களில் விசித்திரமான அல்லது 'பெய்ஜ் ஃபிளாக்' (BEIGE FLAG) போன்ற பழக்கங்களைச் சேர்ப்பது நல்ல பலன் அளிக்கும்.

### நடைமுறைப்படுத்தும் முறை

*திடீர் மௌனம்

ஒரு வார்த்தையில் பதில் அளிப்பது சிலருக்கு எரிச்சலை தந்தாலும், மன அமைதிக்கு தேவையற்ற பேச்சை குறைப்பது உதவிகரமாக இருக்கும்.

*திரை நேரத்தைக் குறைத்தல்

குறிப்பிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் போனை தொடாமல் இருப்பது.

* தனித்துவத்தைப் பாராட்டுதல்

சில 'மொக்கையான' பழக்கங்கள் உங்களது வாழ்க்கை துணையிடமோ அல்லது உங்களிடமோ இருந்தால் அதற்காக கோபப்படாமல் ரசிக்க ஆரம்பித்தால் அதுவே உங்களை தனித்துவமாக (UNIQUE) மாற்றிவிடும்.

இறுதியாக நீங்கள் செய்யும் ஒவ்வொரு சிறிய செயலோ அல்லது பெரிய செயலோ எதுவானாலும் அதில் முழுமையாக இருப்பதை குறிப்பதே, டோபமைன் ஃபாஸ்டிங் 2.0 ஆகும். இது உலகை தவிர்ப்பது அல்ல என அறிந்து கொண்டால் உங்களை ஒரு சிறந்த 'கிரீன்ஃபிளாக்' (GREEN FLAG) நபராக மாற்றிவிடும்.

# புரிந்துகொண்டாள் பூங்கொடி



வீடு அமைதியாக இருந்தது. திண்ணையில் உட்கார்ந்து தெருவை வெறித்துப் பார்த்தார் எழிலனின் அப்பா கந்தசாமி. வீட்டுத் தோட்டத்தில் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள் அம்மா கல்யாணி.
எழிலன் இசையருவி தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியில் ஒளிபரப்பான கலந்துரையாடலை ரசித்தபடி உட்கார்ந்திருந்தான்.
ஒரே மகனின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்ட கல்யாணியின் முகம் இன்றுதான் சற்று தெளிந்தது.
'கல்யாணி' என்று அழைத்தவாறு கந்தசாமி வீட்டிற்குள் நுழைந்து 'மருமக வரா' என மகிழ்சியாக சொன்னார்.
செய்திருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு, மருமகள் பூங்கொடியை ஆசையாக வரவேற்க வீட்டு வாசற்படியில் காத்திருந்தாள் கல்யாணி.
அண்ணன் மகள் பூங்கொடி தோலில் பேக்கை மாட்டிக்கொண்டு, களைத்த முகத்தோடு உள்ளே நுழைந்து, மின்விசிறி பட்டனைத் தட்டிவிட்டு கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்ததும் 'இந்தாம்மா' தண்ணீர் கொடுத்தாள் கல்யாணி.
வந்தவளை வா என்று கூட அழைக்காமல் இசையருவியில் ஓடிக்கொண்டிருந்த 'என்னவளே அடி என்னவளே என் இதயத்தை தொலைத்துவிட்டேன்' என்ற பாடலை முணுமுணுத்தவாறு தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்துக்கொண்டே இருந்தான் எழிலன்.
பூங்கொடி யாருடனும் பேசவில்லை. சமையல்கட்டுக்கு சென்று மாமியார் செய்து வைத்திருந்த சோத்தை தட்டில்போட்டு சாப்பிட்டுவிட்டு, பரணையில் இருந்தக் கோரப் பாயை எடுத்து காரத்தறையில் விரித்துப் போட்டு தலையணை இல்லாமல் கீழேப் படுத்தாள்.
கயிற்றுக் கட்டிலிருந்து தலையணையை எடுத்து, கல்யாணியின் தலைக்கு கீழே வைத்துவிட்டு வெளியே வந்தான் எழிலன்.
மூன்று மணிக்கு கூட்டுறவு மணி அடித்ததும், சில்வர் செம்பை எடுத்துக்கொண்டு பால் வாங்கச் சென்றார் கந்தசாமி.
அந்தி சாய்ந்தது.
தூங்கி எழுந்த பூங்கொடி, வீடு பெருக்கி கோலம் போட்டு, விளக்கேற்றி கோயிலுக்கு சென்றுவந்து, அடுப்பங்கரையில் சமையல் செய்யத் தொடங்கினாள்.
நிலவின் வெளிச்சத்தில் வீட்டிற்குமுன் உள்ள பூவரச மரநிழலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த மாமனார் மாமியாரை " வாங்க மாமா சாப்பிடலாம்' என்று அழைத்தாள்.
"ஏம்பா கைகழுவிட்டு வா சாப்பிடலாம்' கல்யாணி தனது மகனை அழைத்து, தண்ணீர் சொம்பை வந்து பக்கத்தில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.
பூங்கொடி அமைதியாக பரிமாறினாள். குறை சொல்லாமல் தொலைக்காட்சியில் செய்தியை பார்த்தபடி சாப்பிட்டு முடித்தனர் அனைவரும்.
மணி 9 ஆனது. உள்ளேயிருந்து கயிற்றுக் கட்டிலை வெளியே போட்டுப் படுத்தார் கந்தசாமி. தனது கணவன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலுக்கு கீழே பாய்விரித்து படுத்தாள் கல்யாணி.
'மாமா பக்கத்துல தண்ணி வச்சிருக்கேன். புரண்டு படுக்கும்போது சாய்ச்சிட போறீங்க. அதை கொஞ்சம் எடுத்துவச்சுட்டு படுங்க' என சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்த பூங்கொடி, கதவைத் தாழிட்டாள்.
அமைதியாகயிருந்த கணவனின் பக்கத்தில் உட்கார்ந்து, அவன் முகத்தை திருப்பி 'என் மேலக் கோபமா?' என கேட்டாள்.
'போடி' என்று செல்லமாய் கோபப்பட்டவனின் நேரில் உட்கார்ந்து, படபடவென பேசினாள். 'உனக்கு சொல்லத் தெரியலையா, இல்லை எனக்குப் புரிஞ்சுக்கிற தன்மை இல்லையா, எதுவுமே எனக்கு புரிய மாட்டேங்குது. என்ன நடந்தாலும் அமைதியாக இருக்கிற மாமா. டேய் விடுடான்னு உன்ன அதட்டி, என் பக்கம் உள்ள நியாயத்தை எடுத்து சொல்றது அத்த, எல்லாம் சரியா இருக்கு. ஆனா நீ மட்டும்தான் சரி இல்லை. உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியல. ஏன்?' எனக் கேட்டுவிட்டு பேச்சு நிறுத்தி, அவன் முகத்தை இரு கைகளால் பிடித்து திருப்பி, முறைத்து பார்த்துக் கேட்டாள் பூங்கொடி.
கொஞ்சம் அமைதியாக இருந்துவிட்டு,'வயசான காலத்துல உங்க அம்மா அப்பாவை விட்டுட்டு உங்க அண்ணா அண்ணி தனிக் குடித்தனம் போனா ஏத்துக்குவியா? அதே மாதிரிதான் எனக்கும் எங்க அம்மா அப்பா முக்கியம்.' என இறுக்கமான முகத்தோடு எழிலன் சொல்லி முடித்ததும்,
'ஏன் போன வேகத்தில திரும்பிவந்துட்ட, நீ போனதப் பாத்தா திரும்பி வரமாட்டேன் நினைச்சன். இன்னும் ஆறுமாசம் இருக்க வேண்டியதுதானே.'என அவளை உத்துபார்த்து கேட்டான்.
முகத்தை குழந்தைத்தனமாக வைத்துக்கொண்டு 'மரியாதையே இல்லங்க. யாரும் என்கூட பேசல. உங்க அக்காதான் என்கிட்ட அமைதியா சொன்னாங்க.
நீ போ உன்வீட்டுக்கு. உங்க அப்பா அம்மாவை நான் நல்லா பாத்துக்குறேன். என் அப்பா அம்மாவை குறை இல்லாம பாத்துக்கோ. நீ இங்க இருந்தா உனக்கு மரியாதையே இருக்காதுன்னாங்க' என்று அவள் சொல்வதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தவன், மனப்பூர்வமா சிரித்துக்கொண்டே ஜன்னலை சாத்திவிட்டு விளக்கை நிறுத்தினான்.
பொழுது விடிந்தது. தலைமுழுகி சமையல் அறையில் சுறுசுறுப்பாக வேலை செய்தாள் பூங்கொடி.
அலுவலகத்திற்கு செல்ல தயாராகி வாசலில் நின்றிருந்தான் எழிலன்.
வண்டி சாவியை கணவனிடம் கொடுத்து, சிரித்த முகத்தோடு 'மாமா வரும்பொழுது மல்லிகைகைப் பூ வாங்கிட்டு வா' என கையசைத்த அண்ணன் மகள் பூங்கொடியைப் பார்த்து கலைவாணி சிரித்தாள். கந்தசாமி கண்டும் காணாததுபோல் உட்கார்ந்திருந்தார் கயிற்றுக் கட்டிலில்.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# பிள்ளை பாசம்....



இத்தனை நாள் யாருக்காக கணவரை வெறுத்து ஒதுக்கி வந்தேனோ அவனின் செயலையும், பேச்சையும், போக்கையும், பார்த்து மன வருத்தமடைந்தாள் சந்திரா

கல்யாணம் நடந்த நாளில் இருந்து இது நாள் வரையும் நா சொல்வதை எல்லாம் கேட்டு நடந்ததோடு வேலைக்கு போனாலும் தனக்குன்னு எதுவும் வைத்துக் கொள்ளாமல் அப்படியே என்னிடம் கொடுத்து விட்டு வீட்டில் என்ன இருந்தாலும் அதை எடுத்து சாப்பிட்டு விட்டு அமைதியாய் போய் படுத்துக் கொள்ளும் கணவர் அவருக்கு என்ன வேணும் அவர் விருப்பங்கள் என்ன என எதுவுமே கேட்டதில்லை அவரும் கேட்பதில்லை குடியிருக்கும் வீடு ,நிலங்கள் எல்லாம் தன்னிடம் இல்லாமல் என் பெயருக்கு மாற்றி எழுதி வைத்ததை இன்று மகன் பெயருக்கு மாற்றி எழுதி தரச் சொல்லி கேட்டதும் தான் உணர்ந்தாள் சந்திரா

அம்மா...அம்மா...
என மகன் சிவநேசன் வந்தான் கட்டிலில் பல சிந்தனையில் இருந்த சந்திரா விடம் வந்து "நீ! உள்ளே இருக்கியா..
எங்கே அந்தாளு"" என கேட்க,மறு வினாடி பளார் ரென கன்னத்தின் அடி விழுந்ததும் அம்மா...என கத்தினான் சிவநேசன்
"யார்ரா அந்தாளு...
கொஞ்சங்கூட மரியாதை இல்லாம" என அம்மா கத்தவும்
"சரி சரி அப்பா..எங்கே ?"
என்றான்
எதுக்கு...
"பத்திரத்தில அப்பா கையெழுத்து போடனுமா "என்று சிவநேசன் சொல்லவும்
எங்கே போடனும் என்று பத்திரத்தை வாங்கியவள் சற்றும் தாமதிக்காமல் பத்திரத்தை கிழித்தாள் சந்திரா இதை எதிர்ப் பார்க்காத சிவநேசன் ஆவேசத்துடன் அம்மா.....ஆ.... வென கத்தினான்
கிழித்த பத்திரத்தை அடுப்பினில் போட்டு தீ வைத்தாள் சந்திரா
"நீ சொல்லித்தானே நா செஞ்சேன் என்னையே அடிக்கிறே" என்றான்
"உன் பேருல எழுதித் தர்றேன்னு சொன்னே இல்லையின்னு சொல்லல ஆனா நீ இப்பவே எழுதிக் கேட்டா கொடுக்க முடியுமா ? "என சந்திராவின் குரல் எதிரொலிக்க சுற்றும் முற்றும் பார்த்த சிவநேசன் தொலைக்காட்சி பெட்டிக்கருகை இரும்பால் ஆன கிளாம்பை எடுத்து அம்மாவை ஓங்கி அடிக்க முற்படும் போது படார் ரென முதுகில் அடி பலமாய் விழுந்ததைக் கண்டு திடுக்கிட்டு திரும்பினான் வெளிவரண்டாவில் படுத்திருந்த சுந்தரம் மகனின் குரல் கேட்டு வந்த போது மகனே அம்மா அடிக்க போனதைப் பார்த்து அவனைத் தாக்கினார் சுந்தரம்
"பார்த்திங்களா மகனின் காரியத்தை"
என அழுது கொண்டே கணவனிடம் சொன்னாள்
"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன் நீதா கேட்கல கல்யாணம் பண்ணும் வரைக்கும் தான் நம்ப புள்ளே அதுக்கப்பறம் உன் மகளோட புருசே நீதா பெத்தபுள்ளே மயக்கத்துல கழுத்துப்புருச நீ தேவையில்ல எனக்கு வயித்துப் புருசே இருக்கான்னு என்னை உதாசின படுத்தினே உன் வயித்து புருசே உன்னையே கொல்ல வந்துட்டான் பார்த்தியா" ன்னு சுந்தரம் சொல்லச் சொல்ல "புருசன மதிக்காம மகனுக்கு நேரேயே அவமரியாதை பண்ணினே இன்னிக்கு உன் முன்னாடியே என்னை மரியாதை இல்லாம பேசிட்டு உன்னையும் கொல்ல வந்துட்டான் பார்த்தியா "ன்னு சொல்ல தனிகுனிந்தபடி அழுதாள் சந்திரா அப்பாவின் அதிரடியை எதிர் பார்க்காத சிவநேசன் "அவசரப் பட்டோமே என எண்ணியபடி இனி என்ன செய்யலாம்" என யோசிக்க "நம்ம பிள்ளே மாறிட்டான் எதையும் அவசரப்பட்டு செய்யாதே என்று சொன்னேன் நீ கேட்கல உன் மகனின் திட்டம் என்ன தெரியுமா வீடுகள்,சொத்துக்களை எழுதி வாங்கிட்டு உன்னையும் என்னையும் சாப்பாட்டுல விஷத்த கலந்து கொல்றதுக்கு உன் மருமகளோட பேசிக்கிட்டு இருந்ததைக் கேட்டேன் உன்கிட்டே சொன்ன நீ நம்ப மாட்டே என்ன செய்யலாம் என யோசுச்சு
பத்திர ஆபீஸ்ல போய் என் கையெழுத்து இல்லாம,சொத்துக்கள் யார் பெயர்லையும் பத்திரம் பதியக் கூடாதுன்னு எழுதி போலீஸ் ஸ்டேசனிலும் கொடுத்துட்டு வந்தேன் இப்போ தெரியுதா "என்று மனைவி சந்திரா விடம் சொல்ல "நம்மபுள்ளே என்மேலே பாசமா இருக்கானேன்னு அவன் மேலே தப்ப நினைக்கலங்க நீங்க அவன ஒதுக்குறீங்களேன்னு உங்க மேலே தாங்க கோபம் அதனாலே தாங்க நா உங்கள மதிக்காம நடந்துகிட்டே "ன்னு குமுறி குமுறி அழுதால் சந்திரா வஞ்சகமா நல்லபிள்ள மாதிரி பேசி என்னையே கொல்ல துணிஞ்ச உனக்கு "இனி உனக்கு இங்கே இடமில்லே போடா வெளியே" என சந்திரா கத்தினாள்.



-நல.ஞானபண்டிதன்,
திருப்புவனம் புதூர்

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -6)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

கோபர்களின் தலைவனான நந்தகோபர் மற்றும் கோகுலத்தில் வாழும் மக்கள் எல்லோரும் ஒன்று கூடி கோகுலத்தின் நன்மையை பற்றி ஆலோசித்தார்கள் .தீய சக்திகளினால் ஏற்படும் துர் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதால் குழந்தைகளுக்கும், கோகுலத்தில் வாழும் மக்களுக்கும், ஏதாவது கெடுதல் நடந்து விடுமோ? என அஞ்சினர். ஆதலால் நாம் அதற்கு முன் நம் குடும்பங்களுடன் இவ்விடத்தை விட்டு சென்று விடுவோம். கூடவே ஆடு, மாடுகளையும் நம்முடன் அழைத்துக் கொண்டு செல்வோம் என முடிவெடுத்தனர். புதிய காடுகளையும், புண்ணியமான மலைகளையும், புல், பூண்டுகள் உடையதும், பசுக்களுக்கு மிகவும் பிரியமானதும், கோபர்கள் மற்றும் கோபியர்களுக்கு, தங்குவதற்கு மிகச்சிறந்த ஒரு இடம் உள்ளது. அதன் பெயர் பிருந்தாவனம்.' நாம் எல்லோரும் இன்றைக்கு அங்கு சென்று விடலாம்' என்று நந்தகோபர் கூறினார் .உங்கள் விருப்பத்தை சொல்லுங்கள் என்றார். உடனே கோபர்கள் ஒருமனதாக நல்லது ...நல்லது... உடனே புறப்படலாம் என்றனர். அப்படியானால் தாமதிக்க வேண்டாம், வண்டிகளை பூட்டுங்கள்; நமது செல்வங்கள் ஆகிய பசுக்கள் முன்னே செல்லட்டும். பின்னால் நாம் வண்டிகளை பூட்டிக்கொண்டு அதில் சாமான்களை ஏற்றிக் கொண்டும் செல்லலாம். எல்லோரும் புறப்பட தயாராகுங்கள்!! என நந்தகோபர் ஆணையிட்டார். உடனே அனைவரும் பிருந்தாவனம் நோக்கி புறப்பட்டார்கள். பிருந்தாவனத்தை அடைந்தவுடன் மாட்டு வண்டிகளை அரை சந்திர வடிவில் நிறுத்தினார்கள். எல்லோரும் தங்குவதற்கு ஏற்றார் போல் வீடுகளை அமைத்துக் கொண்டார்கள். பின் எல்லோரும் அங்கேயே தங்கினார்கள்.



பிருந்தாவனத்தின் இயற்கை அழகு, எல்லோர் மனதையும் ஈர்த்தது .மனம் குளிர செய்தது. பிருந்தாவனத்தில் உள்ள கோவர்தன மலையையும் ,யமுனை ஆற்றில் சல..சல..வென ஓடிய தண்ணீரையும், மணல் திட்டுகளையும், பார்த்து பலராமனுக்கும், கிருஷ்ணனுக்கும், அளவுக்கு அதிகமாக மகிழ்ச்சி பொங்கியது. குழந்தைகள் அனைவருக்கும்; 'பிருந்தாவனம்' மிகவும் பிடித்திருந்தது. புதிய இடத்தில் மிகுந்த சந்தோஷத்துடன் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பால லீலைகளாலும், மழலை சொற்களாலும், ஆயர்பாடிக்கு இன்பத்தை அளித்தார்கள் 'பலராமனும், கிருஷ்ணனும்'. நாளடைவில் அவர்கள் கன்று மேய்க்கும் பருவத்தை அடைந்தார்கள். பல விளையாட்டு சாமான்களை உடைய அவர்கள் மற்ற சிறுவர்களுடன் விளையாடினார்கள். ஆயர்பாடிக்கு அருகிலேயே கன்றுகளை மேய்க்க தொடங்கினார்கள். மற்ற சிறுவர்களுடன் ஓடி ஆடி விளையாடுவதையே கிருஷ்ணர் விரும்பினார். கிருஷ்ணர் எல்லா வீடுகளுக்கும் உள்ளே சென்று மறைந்து கொள்வார். கோபியர்கள் வேறு வேலைக்கு செல்லும்போது, வீட்டினில் உள்ள பானைகளில் இருக்கும் வெண்ணையை எடுத்து திருடி தின்பான். மற்ற குழந்தைகளுக்கும் கொடுப்பான். உயரத்தில் இருந்தால் மற்ற பிள்ளைகளை குனிய வைத்து, முதுகின் மேலே ஏறி, உரியில் இருக்கும் பானையில் உள்ள வெண்ணையை எடுத்து தின்பான். கோபியர்களுக்கு இந்த விஷயம் தெரிந்தவுடன் கிருஷ்ணனை பற்றி யசோதையிடம் குறை கூறுவார்கள். ஆனால், கிருஷ்ணனின் மேல் கோபம் கொள்ள மாட்டார்கள். இப்படியாக பலராமன் மற்றும் கிருஷ்ணனின் பாலபருவம் தொடங்கியது.

தொடரும்..

# முருகனின் அபூர்வ தரிசனம் தரும் தமிழகத்தின் 10 வித்தியாசமான திருத்தலங்கள்

ஆலயங்களில் சில, பக்தர்களை ஆச்சரியப்பட வைக்கும் அளவுக்கு அபூர்வமான திருக்கோலங்களைக் கொண்டிருக்கின்றன. பொதுவாக முருகன் என்றால் கையில் வேல், அருகில் வள்ளிதெய்வானை, மயில் வாகனம் என்ற திருக்கோலமே நமக்குள் தோன்றும். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள சில தலங்களில், நாம் எதிர்பார்க்காத விதமாக முருகன் பல்வேறு அரிய வடிவங்களில் காட்சி தருகிறார். அந்த ஒவ்வொரு திருத்தலமும் தனித்துவமான வரலாறுகளையும் தெய்வீக நிகழ்வுகளையும் கொண்டவை. முருக பக்தர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய அந்த 10 அபூர்வ முருகத் தலங்களை பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

### 1. கரும்பு ஏந்திய முருகன் செட்டிகுளம்

பெரம்பலூரிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலைக்குன்றின் மீது அமைந்துள்ளது செட்டிகுளம் ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோயில். பொதுவாக முருகன் கையில் வேல் ஏந்தியபடி காட்சி தருவார். ஆனால் இத்தலத்தில் முருகன் கையில் செங்கரும்பு ஏந்தியபடி அருள்பாலிக்கிறார்.

கரும்பு இனிமையை குறிக்கும் சின்னமாக கருதப்படுகிறது. பக்தர்களின் வாழ்க்கையில் இனிமையும் செழிப்பும் ஏற்பட வேண்டும் என்பதற்காக முருகன் கரும்புடன் காட்சி தருகிறார் என்று அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

### 2. மயில் மீது வள்ளி அமரும் அரிய தரிசனம் திருமங்கலம்

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள திருமங்கலம் சாமவேதீஸ்வரர் கோயில் மிகவும் வித்தியாசமான அமைப்பைக் கொண்டுள்ளது. இங்கு கருவறையில் கல்யாண சுப்பிரமணியர் தெய்வானையுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். ஆனால் வள்ளி மட்டும் தனித்த சன்னதியில் மயில் மீது அமர்ந்தபடி காட்சி தருகிறார்.

பொதுவாக முருகனே மயில் மீது அமர்ந்திருப்பார். ஆனால் இங்கு வள்ளி மயில் மீது காட்சி தருவது இந்த ஆலயத்தின் தனித்துவமாகும்.

### 3. பதினொன்று தலைகளுடன் முருகன் குண்டுக்கரை

ராமநாதபுரம் அருகே அமைந்துள்ள குண்டுக்கரை சுவாமிநாத சுவாமி கோயில் மிகவும் அபூர்வமான திருக்கோலத்திற்குப் புகழ்பெற்றது. இங்கு முருகன் 11 தலைகளும் 22 கரங்களும் உடைய அற்புதமான வடிவத்தில் காட்சி தருகிறார்.

இந்த வடிவம் முருகனின் பரம்பொருள் சக்தியை வெளிப்படுத்தும் தெய்வீக வடிவமாக கருதப்படுகிறது. மேலும் இத்தலத்தில் ஒரு அரிய காட்சி உள்ளது. முருகன் குன்றின் மீது அமர்ந்து பிரணவ மந்திரத்தின் அர்த்தத்தை கூற, சிவபெருமான் நின்றபடி கேட்பது போன்ற அரிய திருக்கோலம் காணப்படுகிறது.

### 4. வாழைமர முருகன் துலுக்கன்குறிச்சி

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள துலுக்கன்குறிச்சி வாழைமர பாலசுப்பிரமணியர் கோயில் 150 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது. இங்கு முருகன் வாழைமர முருகன் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார். இந்த ஆலயத்தின் தலவிருட்சம் வாழைமரம். அந்த மரத்துடன் இணைந்தே முருகன் காட்சி தருவது மிகவும் அபூர்வமானதாக கருதப்படுகிறது.

### 5. பூதகணங்கள் வணங்கும் முருகன் செய்யூர்

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே உள்ள செய்யூர் கந்தசுவாமி கோயில் மிகவும் மர்மமான வரலாற்றைக் கொண்டது. இங்கு 27 பூத வேதாள கணங்கள் முருகனை வணங்குகின்றன என்று நம்பப்படுகிறது. வள்ளி மற்றும் தெய்வானை தனித்தனி சன்னதிகளில் இருப்பதும் இத்தலத்தின் ஒரு சிறப்பாகும்.



### 6. ஒரே தலத்தில் மூன்று நிலைகளில் முருகன் வடசென்னிமலை

சேலம் அருகே உள்ள வடசென்னிமலை பாலசுப்பிரமணியர் கோயில் பக்தர்களுக்கு மூன்று விதமான முருக தரிசனத்தை வழங்குகிறது.

இங்கு முருகன்
* குழந்தை வடிவில்
* தண்டாயுதபாணி என துறவற கோலத்தில்
* வள்ளிதெய்வானையுடன் குடும்ப கோலத்தில்

மூன்று நிலைகளிலும் காட்சி தருகிறார்.

ஒரே தலத்தில் முருகனின் வாழ்க்கை நிலைகளை தரிசிப்பது மிக அரிய அனுபவமாக கருதப்படுகிறது.

### 7. திரும்பிய மயில் எட்டுக்குடி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி கோயில் மிகவும் புகழ்பெற்ற முருகத் தலங்களில் ஒன்று.

இங்கு முருகன் வள்ளி மற்றும் தெய்வானையுடன் மயில் மீது அமர்ந்திருக்கிறார்.

ஆனால் அந்த மயில் இடது பக்கம் திரும்பியபடி இருப்பது மிகவும் வித்தியாசமானதாக கருதப்படுகிறது.

### 8. அர்த்தநாரீஸ்வரர் அலங்காரத்தில் முருகன் கந்தாஸ்ரமம்

சேலம் அருகே உள்ள உடையார்பட்டி கந்தாஸ்ரமம் ஆன்மிக மையமாகப் புகழ்பெற்றது.

இங்கு முருகன் தண்டாயுதபாணி கோலத்தில் காட்சி தருகிறார். அவருக்கு எதிரே 18 கரங்களுடன் அம்பிகை அருள்பாலிக்கிறார்.

சிறப்பு நாட்களில் முருகனுக்கு அர்த்தநாரீஸ்வரர் அலங்காரம் செய்யப்படுகிறது. அதில் வலப்புறம் ஆண் வடிவமும், இடப்புறம் பெண் வடிவமும் இருக்கும். இது சக்தியும் ஞானமும் ஒன்றிணைந்த தெய்வீக உண்மையை வெளிப்படுத்துகிறது.

### 9. பன்னிரண்டு கைகளுடன் முருகன் செஞ்சேரிமலை

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள செஞ்சேரிமலை மந்திரகிரி ஸ்ரீ வேலாயுதசாமி திருக்கோயில் மிகவும் பழமையானது.

இங்கு முருகன் 12 கைகளுடன் அருள்பாலிக்கிறார்.

மூலவர் வேலாயுதசாமி உற்சவர் முத்துக்குமாரர்.

இந்த வடிவம் முருகனின் சக்தி மற்றும் பாதுகாப்பை குறிக்கும் வடிவமாக கருதப்படுகிறது.

### 10. சப்தகன்னியர்களுடன் முருகன் திருமலைக்குமாரசுவாமி

தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே அமைந்துள்ள திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில் மிகவும் விசேஷமானது. இங்கு முருகனுடன் சப்த கன்னியர்களுக்கும் தனி சன்னதி உள்ளது. பொதுவாக சப்தகன்னியர் சிவன் கோயில்களில் காணப்படுவர். ஆனால் முருகன் தலத்தில் அவர்கள் இருப்பது மிகவும் அபூர்வமானதாக கருதப்படுகிறது.

முருக பக்தர்கள் கண்டிப்பாக தரிசிக்க வேண்டிய தலங்கள் இந்த பத்து திருத்தலங்களும் முருக பக்தர்களுக்கு தனித்துவமான ஆன்மிக அனுபவத்தை வழங்கும் தலங்களாக கருதப்படுகின்றன.

முருகன் ஒரே வடிவில் மட்டுமல்ல; பல்வேறு தெய்வீக பரிமாணங்களில் அருள்பாலிக்கிறார் என்பதை இந்த ஆலயங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

வாய்ப்பு கிடைத்தால் இந்த அபூர்வ முருகத் தலங்களுக்கு சென்று தரிசனம் செய்து வருவது பக்தர்களுக்கு மறக்க முடியாத ஆன்மிக அனுபவமாக இருக்கும்.

**எம்.அசோக்ராஜா,**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி 620015

## தினம் ஒரு தலைவர்கள்

# சூரியா சென் வரலாறு

சூரியா சென் (22 மார்ச் 1894 - 12 சனவரி 1934) பிரித்தானிய இந்தியாவின் வங்காளத்தில் உள்ள சிட்டகாங் நகரத்தில் பிறந்த இந்திய விடுதலை இயக்க வீரர் ஆவார். பிரித்தானிய இந்திய அரசுக்கு எதிராக, 1930-இல் சிட்டகாங் ஆயுத கிடங்கை சூறையாடும் புரட்சியில் ஈடுபட்டதன் மூலம் அறியப்பட்டவர். சிட்டகாங் நகரத்தில் சூரியா சென் ஆசிரியராக பணியாற்றியவர். வங்காள மக்கள் சூரியா சென்னை மாஸ்டர் என்று மரியாதையுடன் அழைத்தனர். முர்சிதாபாத் மாவட்டத்தின் தலைமையிட நகரமான பெஹரம்பூரில் 1916-இல் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே இந்திய விடுதலை இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்.

இளமை வாழ்க்கை சூரியகுமார் சென் 22 மார்ச் 1894-இல் சிட்டகாங் பகுதியில் உள்ள நவபரா கிராமத்தில் பிறந்தவர். இவரது தந்தை இரமணிரஞ்சன் சென் பள்ளிக்கூட ஆசிரியர் ஆவார். சூரியகுமார் சென் கல்லூரி படிப்பின் போதே இளைஞர்களின் புரட்சிகர அமைப்பான அனுசீலன் சமிதியில் சேர்ந்தார். கல்லூரி படிப்பு முடிந்த பின் சிட்டகாங் மாவட்டத்தில் உள்ள நந்தன்கனான் பகுதியில் அமைந்த தேசியப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

சிட்டகாங் ஆயுத கிடங்கு சூறையாடல்
சூரியா சென் தனது புரட்சிகர குழுவினருடன் 18 ஏப்ரல் 1930 அன்று சிட்டகாங் நகரத்தில் உள்ள காவல்துறையினரின் ஆயுத கிடங்கை சூறையாட திட்டமிட்டார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற இவரது தலைமையிலான குழு ஒன்று முதலில் தொலைபேசி, தந்தி மற்றும் தொடருந்து வசதிகளை செயலிழக்க செய்தித் தொடர்பு அமைப்புகளை முற்றிலும் அழித்து விட்டனர். இதனால் சிட்டகாங் நகரம் நாட்டின் பிற பகுதிகளுடன் செய்தித் தொடர்பு வசதிகளை இழந்தது. சூரியா சென் குழுவினர் ஆயுத கிடங்கில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிய பின்னர் ஆயுத கிடங்கை








சூறையாடினர். பிரித்தானியக் காவல் துறையினருக்கும் புரட்சிகர குழுவினருக்கும் இடையே நடந்த மோதலில் பன்னிரண்டு இந்திய விடுதலை இயக்கத்தினர் இறந்தனர், பலர் கைது செய்யப்பட்டனர், சூரியா சென்னும் மற்றும் சிலரும் அங்கிருந்து ஓடி மறைந்து விட்டனர்.

சூரியா சென்னின் கைதும் மரணமும்
சூரியா சென் பிரித்தானிய காவல்துறையிடம் அகப்படாது தலைமறைவாக இருந்து கொண்டே இந்திய விடுதலை இயக்கத்திற்குப் புத்துணர்வு ஊட்டிக்கொண்டே இருந்தார். ஒரு முறை அவரது உறவினரான நேத்திரா சென் என்பவரின் வீட்டில் தலைமறைவாக இருந்த போது, பிப்ரவரி 1933 இல் பிரித்தானியக் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்.

சூரியா சென்னைத் தூக்கில் இடுவதற்கு முன்பாக, அவரது ஒவ்வொரு பற்களையும் குறடால் பிடுங்கி எறிந்தனர். பின்னர் கால்கள் மற்றும் கைகளில் உள்ள அனைத்து மூட்டெலும்புகளை சுத்தியால் உடைத்தனர். உணர்விழந்த நிலையில் இருந்த சூரியா சென்னை தூக்கு மேடையில் ஏற்றினர். அவரது இறப்பிற்குப் பின் சடலத்தை தடிமனான இரும்புப் பெட்டியில் வைத்து, பிரித்தானிய காவல் துறையினர், வங்காள விரிகுடாவில் எறிந்தனர்.

சூரியா சென்னை தூக்கிலிட்ட தூக்கு மேடை, சிட்டகாங், வங்காளதேச அரசு அதனை வரலாற்று நினைவிடமாக அறிவித்துள்ளது.

பிரபல கலாச்சாரத்தில் கருத்தோவியம் இந்திய திரைப்பட இயக்குநர் அசுதேஷ் கவுரிகர் 2010-ஆம் ஆண்டில் கேலின் ஹம் ஜி ஜான் சே எனும் திரைப்படத்தில் சூரியா சென்னின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இத்திரைப்படத்தில் அபிஷேக் பச்சன் சூரியா சென்னாக நடித்துள்ளார்.

சூரியா சென் நடத்திய சிட்டகாங் ஆயுதக் கிடங்கி சூறையாடல் நிகழ்வை விளக்கும் வகையில், 2012-ஆம் ஆண்டில் தேவவிரத பெயின் என்பவர் இயக்கிய சிட்டகாங் எனும் திரைப்படத்தில் மனோஜ் வாஜ்பாய் என்ற திரைப்பட நடிகர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# ஆகாய மார்க்கமாக ப்ரோமோஷன்




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி). இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ். ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர்.

நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து சென்னையில் இப்படத்தின் பிரீ-ரிலீஸ் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் படக்குழுவினர் பங்கேற்று தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிலையில், 'LIK' படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சி மதுரை மற்றும் திருச்சியில் இன்று நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக நடிகர், நடிகைகள் உள்ளிட்ட படக்குழுவினர் விமானம் மூலம் புறப்பட்டு சென்றனர். இதுதொடர்பான புகைப்படங்களை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து 'LIK' படத்தை நாளை முதல் திரையரங்குகளில் கண்டு மகிழலாம்.



லப்பர் பந்து படத்தில் நடித்து பாப்புலர் ஆனவர் சஞ்சனா க்ரிஷ்ணமுர்த்தி. அவர் அந்த படத்திற்கு பின் புகழின் உச்சிக்கே சென்ற நிலையில் தற்போது இன்ஸ்டாக்ராமில் மட்டும் அவரை 7 லட்சத்திற்கும் அதிகமானோர் பின் தொடர்கின்றனர்.
தற்போது நடிகை சஞ்சனா சூரியகாந்தி தோட்டத்தில் எடுத்த அழகிய போட்டோஷூட் இதோ.
"How pretty!!!" என நடிகை கீர்த்தி சுரேஷ் இந்த போட்டோக்களை பார்த்து கமெண்ட் செய்து இருக்கிறார்.

# கவனம் ஈர்க்கும் 'பப்பாளி பழமே'... 'மீசையை முறுக்கு 2' புதிய பாடல்



குஷ்பு சுந்தர் தயாரிப்பில், கடந்த 2017-ம் ஆண்டு ஹிப் ஹாப் ஆதி இயக்கி, நடித்திருந்த படம் 'மீசைய முறுக்கு'. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. தற்போது இப்படத்தின் இரண்டாவது பாகம் எடுக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தைப் போலவே இதையும் ஹிப்ஹாப் தமிழா ஆதியே இயக்கி, இசையமைத்துள்ளார்.

இப்படத்தையும் குஷ்பு சுந்தரின் அவ்னி மூவிஸ் மற்றும் ஏ.சி.எஸ் அருண்குமாரின் பென்ஸ் மீடியா இணைந்து தயாரித்துள்ளன. இப்படத்தில் ஆதியுடன் இணைந்து பிரபல யூடியூபர் ஹர்ஷத் கான், சைத்ரா ஜே. ஆச்சார், கேத்திகா சர்மா, ரம்யா ரங்கநாதன், நாசர், கருணாஸ், ஷாரா மற்றும் ஆடுகளம் நரேன் ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் கதை, தற்காலம் மற்றும் 80-கள் என இரண்டு காலகட்டங்களில் நடப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக், டீசர் மற்றும் ஃபர்ஸ்ட் சிங்கிள் ஆகியவை வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்ற நிலையில் நேற்று 'பப்பாளி பழமே' பாடல் வெளியாகி உள்ளது. ஆதி இசையமைப்பில் கே.ஆர். தரன் எழுதிய இப்பாடலை ஆதி, கானா வினோத், கானா தரணி உள்ளிட்டோர் பாடியுள்ளனர்.

# 'கெட்டமைன் ராணி'க்கு 15 ஆண்டுகள் சிறை



அமெரிக்காவின் பிரபலத் தொலைக்காட்சித் தொடரான 'பிரண்ஸ்' தொடரில் சாண்ட்லர் கதாபாத்திரத்தில் நடித்து உலகப் புகழ் பெற்றவர் மேத்யூ பெர்ரி.

கடந்த 2023 அக்டோபர் 28, தனது 54 வயதில் மேத்யூ பெர்ரி லாஸ் ஏஞ்சல்சில் அவரது வீட்டில் உள்ள நீச்சல் குளத்திலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

அவரது ரத்தத்தில் கெட்டமைன் [ketamine] எனப்படும் போதைப்பொருள் அளவுக்கு அதிகமாக இருந்தது பின்னர் நடந்த பிரேதப் பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

கெட்டமைன் என்றால் என்ன?

மனநலம் சார்ந்த பிரசனைகளுக்கு கேட்டமைன் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. மனஉளைச்சல் மற்றும் மனப் பதற்றத்தால் பாதிக்கப்பட்டிருந்த மேத்யூ அதை குணப்படுதவுவதற்காக கெட்டமைன் உட்கொளள்ளத் தொடங்கியுள்ளார். ஆனால் ஒரு கட்டத்தில் அவர் கெட்டமைனுக்கு அடிமையாகி உள்ளார்.


சூழ்ச்சியில் சிக்கிய மேத்யூ

இதனைப் பயன்படுத்தி இரண்டு மருத்துவர்களுடன் சேர்ந்து மேத்யூவின் உதவியாளர் அவருக்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் மதிப்பில் கெட்டமைன் போதைப் பொருளைத் தொடர்ந்து வழங்கி பணம் பறித்து வந்துள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக மேத்யூவின் உதவியாளர், அந்த இரண்டு மருத்துவர்கள் உட்பட 5 பேர் போலீசில் சிக்கினர்.

கெட்டமைன் ராணி

இவர்களுள் முக்கியமானவர் லாஸ் ஏஞ்சல்சின் கெட்டமைன் ராணி [Ketamine Queen] என்று அழைக்கப்படும் போதைப்பொருள் விற்பனையாளர் ஜாஸ்வீன் சங்கா [42 வயது] . ஹாலிவுட் பிரபலங்களும் பணக்காரர்களும் வாழும் லாஸ் ஏஞ்சல்ஸ் புறநகரில் ஜாஸ்வீன் சங்கா போதைப்பொருட்களை சப்பளை செய்து வந்துள்ளார்.

# சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் இயக்குனர் சுந்தர்.சி மீது மோசடி புகார்



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான சுந்தர்.சி, தற்போது 'மூக்குத்தி அம்மன்-2' படத்தை இயக்கி முடித்திருக்கிறார். விஷால், தமன்னா நடிப்பில் 'புருஷன்' படத்தை இயக்கி வருகிறார்.

சினிமா தாண்டி அரசியல் களத்திலும் தற்போது நுழைந்திருக்கும் சுந்தர்.சி., தற்போது மதுரை மத்திய தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் புதிய நீதி கட்சி வேட்பாளராக களமிறங்கி இருக்கிறார். தீவிர பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் சுந்தர்.சி மீது சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அப்போது படத்துக்கு ரூ.20 கோடி பட்ஜெட் என்றும், தனக்கு சம்பளமாக ரூ.5 கோடி என்றும் பேச்சுவார்த்தையில் இறுதி செய்யப்பட்டு சுந்தர்.சி. எங்கள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டார். இதையொட்டி அவருக்கு ரூ.50 லட்சம் முன்பணமாக கொடுக்கப்பட்டது. நடிகர், நடிகைகளுக்கும் ரூ.59 லட்சம் அளவில் முதற்கட்ட சம்பளம் வினியோகமும் செய்யப்பட்டது.

ஆனால் சொன்னபடி, சொன்ன தேதியில் இந்த படத்தை சுந்தர். சி இயக்கவில்லை. இந்த சூழலில் அவரது இயக்கத்தில் உருவான 'அரண்மனை-4'படம் வெளியாகி மிகப்பெரிய ஹிட் அடித்து விட்டது. வெற்றி வேகத்தில் இருந்த சுந்தர் சி எங்கள் படத்துக்கான பட்ஜெட் தொகையை ரூ.30 கோடியாக அதிகரித்ததுடன், தனக்கு சம்பளமாக ரூ.10 கோடி வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார். இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியும், உடன்பாடு ஏற்படாத நிலையில் 'கலகலப்பு-3' படம் எடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, வாங்கிய முன் தொகையை கொடுக்குமாறு சுந்தர் சி.யிடம் கேட்டுக் கொண்டோம். ஆனால் முன்பணத் தொகையையும் கொடுக்காமல் சுந்தர்.சி எங்களை மிரட்டி வருகிறார். அவர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுந்தர்.சி மீது புகார் கொடுக்கப்பட்ட விவகாரம் திரையுலகம் தாண்டி அரசியல் களத்திலும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.



கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சினிமாவில் பயணித்து, இன்று வரை முன்னணி நடிகையாக வலம் வருபவர் நயன்தாரா. இவர் கைவசம் தற்போது Hi, Patriot, ராக்காயி, மண்ணாங்கட்டி, சல்மான் கான் படம் என பல திரைப்படங்கள் உள்ளன.
இன்ஸ்டாகிராமில் தனது புகைப்படங்களை பதிவிடுவதை நயன்தாரா வழக்கமாக கொண்டுள்ளார். அந்த வகையில் தற்போது Black & White-ல் எடுத்துக்கொண்ட தனது சமீபத்திய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். நயன்தாரா வெளியிட்டுள்ள இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன.

# 'அந்தரன்' என்றால் என்ன?



பிரஜின், இவானா வருண், அதிரன், பத்மன், அனுபமா குமார் உள்பட பலர் நடித்துள்ள திரைப்படம், 'அந்தரன்'. தயாரிப்பாளர் மு.கி. சாம்ப சிவம், ரமேஷ் பாபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். சந்தோஷ் இராவணன் இயக்கியுள்ளார்.

'அடவி', 'மனிதர்கள்' படங்களைத் தொடர்ந்து ஸ்ரீ கிரிஷ் பிக்சர்ஸ் சார்பில் மு.கி.சாம்பசிவம் தயாரிக்கிறார். ஹரி எஸ்.ஆர். இசையமைக்கும் இப்படத்துக்கு கிஷோர் ராமச்சந்திரன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இப்படம் பற்றி இயக்குநர் சந்தோஷ் இராவணன் கூறும்போது, "அந்தரன் என்றால் வேடன் என்று பொருள். இந்தக் கதைக்குப் பொருத்தமாக இருந்ததால் அதைத் தலைப்பாக வைத்துள்ளோம். ஓர் இளம் பெண்ணைச் சுற்றி நடக்கும் பல மர்ம நிகழ்வுகளுக்கு என்ன காரணம், அதற்குப் பின்னால் இருப்பவர் யார் என்பதைக் கண்டுபிடிக்கக் காவல் அதிகாரி ஒருவர் களத்தில் குதிக்கிறார். பிறகு என்ன நடக்கிறது என்பது கதை.



க்ரைம் திரில்லர் கதையான இதில் ஐபிஎஸ் அதிகாரியாக பிரஜினும், இளம் பெண்ணாக இவானா வருணும் நடிக்கின்றனர். ஒரு த்ரில்லர் படத்துக்குத் தேவையான பரபரப்பான திரைக்கதை இதில் இருக்கிறது. பார்வையாளர்களை சீட் நுனிக்கு வரவழைக்கும் காட்சிகளும் இருக்கின்றன. இப்படத்தின் கதையை, 'நான் லீனியர்' முறையில் சொல்லி இருக்கிறோம்" என்றார்.

## Arya 40 ரொமாண்டிக் காமெடி அப்டேட்



நடிகர் ஆர்யா மற்றும் கவுதம் ராம் கார்த்திக் இணைந்து நடித்துள்ள திரைப்படம் "மிஸ்டர் எக்ஸ்." இந்தப் படத்தின் பணிகள் ஏற்கனவே முடிந்துவிட்ட நிலையில், இந்தப் படம் வருகிற 17-ஆம் தேதி வெளியாக இருக்கிறது. முன்னதாக இந்தப் படத்தின் டீசர் வெளியாகி படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில், நடிகர் ஆர்யா அளித்த பேட்டி ஒன்றில் நீண்ட இடைவெளிக்கு பிறகு காதல் கதையம்சம் கொண்ட படத்தில் நடித்துள்ளதாக தெரிவித்தார்.

இதுகுறித்து பேசிய அவர், "'ஆர்யா 40' திரைப்படம், நீண்ட இடைவெளிக்குப் பிறகு என் நடிப்பில் வெளியாகும் இதமான காதல் கதையாக அமையும்.

இது 'ராஜா ராணி' போன்ற ஒரு காதல்-நகைச்சுவை (Rom-Com) வகையைச் சேர்ந்த படமாக இருக்கும். அதே சமயம், இன்றைய தலைமுறை ரசிகர்களுக்காக இதில் கூடுதல் உணர்வுபூர்வமான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

என் படங்களில் எனக்கு பொருத்தமான கதாநாயகிகள் அமைவதில்லை என்று நான் நீண்ட காலமாகவே ஆதங்கப்பட்டு வந்தேன்.

அதனால், 'ஆர்யா 40' திரைப்படம் முழுவதும் அந்த இரண்டு கதாநாயகிகளுடன் மட்டுமே நான் உரையாடுவது போல கதையை அமைத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். படத்தின் பெரும்பாலான காட்சிகள் மற்றும் வசனங்கள் அனைத்தும் அந்த கதாநாயகிகளுடனேயே அமைந்திருக்கும். இந்தப் படத்தை நானே தயாரித்துள்ளேன்," என்றார்.



நடிகர் ராஜசேகரின் மகளும், பிரபல நடிகையுமானவர் சிவாத்மிகா. இவர் தமிழில் ஆனந்தம் விளையாடும் வீடு, பாம், அரோமலே ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சிவாத்மிகா அவ்வப்போது தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிடுவார்.

அந்த வகையில், தற்போது சேலையில் கலர்ஃபுல் போட்டோஷூட் நடத்தி அந்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்த நயன்தாரா -விக்னேஷ் சிவன்



இதனிடையே, நாளை 'LIK' படம் வெளியாவதையொட்டி இன்று அப்படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவன் தனது மனைவியும் பிரபல நடிகையுமான நயன்தாராவுடன் திருப்பதியில் சாமி தரிசனம் செய்தார். சிறப்பு தரிசனத்தில் ஏழுமலையானை தரிசனம் செய்த விக்னேஷ் சிவன் மற்றும் நயன்தாராவை கண்ட ரசிகர்கள் உற்சாகமடைந்தனர். ரசிகர்களுடன் இருவரும் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

'LIK' படம் கடந்த ஆண்டு காதலர் தினத்தன்று வெளியாகும் என முதன் முதலில் கூறப்பட்டது. அதன்பின், செப்டம்பர் 18, அக்டோபர் 17, டிசம்பர் 18 என வெளியீட்டு தேதிகள் மட்டுமே அறிவிக்கப்பட்ட நிலையில் படம் வெளியாகவில்லை. இதனிடையே நாளை 'LIK' வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூ.2 கோடி நஷ்ட ஈடு கேட்டு நாத்தனார் மீது ஹன்சிகா வழக்கு



தமிழ், தெலுங்கு, இந்தி திரை உலகில் பிரபல நடிகையான ஹன்சிகா சினிமாவில் பிசியாக நடித்துக் கொண்டிருந்த போதே சோகைல் கதூரியா என்பவரை திருமணம் செய்தார். இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு சமீபத்தில் பிரிந்தனர்.

இந்நிலையில் ஹன்சிகாவின் முன்னாள் நாத்தனாரும் சின்னத்திரை நடிகையுமான முஸ்கான் நான்சி ஜேம்ஸ் மீது மும்பை திண்டோசி அமர்வு நீதிமன்றத்தில் ஹன்சிகா அவதூறு வழக்கு தொடர்ந்து உள்ளார். ஹன்சிகா புகார் மனுவில் தனது நாத்தனார் சமூக ஊடகங்களிலும் பிற இடங்களிலும் என் பெயருக்கு களங்கம் விளைவிக்க முயன்றுள்ளார்.

இதையொட்டி அவர் எனக்கு ரூ.2 கோடி இழப்பீடும் பகிரங்க மன்னிப்பும் தெரிவிக்க வேண்டும். அவர் சின்னத்திரை நிகழ்ச்சிகளில் நடிக்கும் ஒரு மூன்றாம் தர நடிகை. அடிக்கடி விலை உயர்ந்த பைகள் மற்றும் வெளிநாட்டு பயணங்களில் படங்களை சமூக ஊடகங்களில் பதிவிடுகிறார்.



பிரதீப் ரங்கநாதனின் LIK படம் இந்த வாரம் ரிலீஸ் ஆகிறது. அதில் ஹீரோயினாக நடித்திருந்த க்ரித்தி ஷெட்டி. இந்த படமாவது அவருக்கு வெற்றிப்படமாக அமையுமா என்கிற எதிர்பார்ப்பும் எழுந்திருக்கிறது.

அந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சிகளிலும் அவர் தொடர்ந்து கலந்துகொண்டு வருகிறார்.

தற்போது ஹாட் உடையில் க்ரித்தி ஷெட்டி போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

## ரீ-ரிலீஸை ஒட்டி இணையத்தில் வைரலாகும் 'அமைதிப் படை' அரசியல் காட்சிகள்



1994-ம் ஆண்டு மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ், ரஞ்சிதா, கஸ்தூரி, சுஜாதா உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான படம் 'அமைதிப்படை'. இப்படத்தை இயக்கிய மணிவண்ணன் அதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இளையராஜா இப்படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இப்படத்தின் அரசியல் நையாண்டி வசனங்கள், மேடை பேச்சை கடந்து எதார்த்த அரசியல் களம் எப்படி இருக்கிறது என்பதை தோலுரித்த காட்டின. இந்த படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. 32 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்பேரோ சினிமாஸ் சார்பில் கார்த்திக் வெங்கடேசன், இந்த படத்தை 4K தொழில்நுட்பம் மற்றும் டால்பி ஒலியுடன் மீண்டும் வெளியிடுகிறார்.

## குழந்தைகள் குறித்து அவதூறு பரப்புவதா?



என்னுடைய இனஸ்டாக்ராமில் விக்னராஜ் என்பவர் என் ஒரு வயது குழந்தைகள் பற்றி தவறான ஒரு மெசேஜ் பதிவிட்டிருந்தார். அவர் மீது சைபர் கிரைம் போலீசில் புகார் செய்துள்ளேன். அதே சமயம் அவரது இன்ஸ்டாகிராம் ஐ.டி.யை முடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது சிவில் வழக்கு கிரிமினல் வழக்கு பதிவிடலாம். இவர்களுக்கு 2 வருடம் முதல் 5 வருடம் வரை சிறை தண்டனை கிடைக்கும். இனிமேல் போற போக்கில் சமூக வலைதளங்களிலோ, பொது இடங்களிலோ பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது அவதூறான கருத்துக்களை பேசி விட்டு எளிதாக தப்பித்து விட முடியாது.

நமது சட்டமும் அரசாங்கமும் பெண்களுக்கு எதிராக நடக்கிற பிரச்சனைகளுக்கு கடுமையாக குரல் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன். அரசியல் சார்ந்த விமர்சனம் பண்ணுவது நல்லது. அது நல்ல சொசைட்டியை உருவாக்கும். அதே சமயம் நாகரிகமாக உங்கள் விமர்சனம் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

எல்லோருக்கும் சமூக பொறுப்புகள் இருக்கிறது. அதுபடி நாம் நடந்து கொள்ள வேண்டும். விக்னராஜுக்கும் பெண் குழந்தை இருக்கிறது. அந்த குழந்தையின் பாதுகாப்பை இவரிடம் இருந்து அவரது மனைவி பார்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மீண்டும் தமிழ் சினிமாவில் நஸ்ரியா



நேரம், ராஜாராணி, நையாண்டி, திருமணம் எனும் நிக்கா போன்ற படங்களில் நடித்து தமிழ் சினிமாவில் பிரபலமானவர் நஸ்ரியா. நடிகர் பகத்பாசிலை திருமணம் செய்து கொண்ட நஸ்ரியா. சில ஆண்டுகள் சினிமாவில் இருந்து விலகி இருந்தார். 2018-ம் ஆண்டு 'கூடே' என்ற மலையாள படத்தின் மூலம் மீண்டும் சினிமாவுக்கு வந்தார்.

இதை தொடர்ந்து தமிழ் சினிமாவிற்கு நஸ்ரியா எப்போது வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. சுதா கொங்கரா இயக்கத்தில் புறநானூறு படத்தில் அவர் நடிப்பதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் படம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் நஸ்ரியா மீண்டும் தமிழில் நடிக்க இருக்கிறார். சூர்யா பிரதாப் இயக்கத்தில் உருவாகும் 'தி மெட்ராஸ் மிஸ்ட்ரி பால் ஆப்எ சூப்பர் ஸ்டார்' என்ற வெப் தொடரில் நடிக்க இருக்கிறார். இதில் நட்டி, சாந்தனு, பாக்யராஜ், நாசர், ஒய்.ஜி.மகேந்திரன் உள்பட பலர் நடிக்கின்றனர். இந்தியாவில் நிகழ்ந்த லட்சுமிகாந்தன் கொலை வழக்கை மையமாக கொண்டு இந்த தொடர் உருவாகி உள்ளது.






குடியிருக்கும் தலத்தையே
கொள்ளையடிப்பவர்
உண்டோ? திருடியதேனோ
என் இதயத்தை நிரந்தரமாய்
நீ–வாழும் இடத்தை!
*********
அறியாதோர் வயோதிகர்
உள்ளம் நாடுவர் முதியோர்
இல்லம் வழங்கியமைக்காக
வளமான வாழ்வாதாரம்
பெற்றோருக்கிது பிள்ளைகளின்
பிரதியுபகாரம்
********
கார்கால குடையொன்றின் கீழ்
நனைந்து செல்லும்
காதலர்கள் 'லப்–டப்'களின்
லயத்தில் இலயித்து
மணியோசையைக்கட்டுப்படுத்தும்
மௌனம்
*********
சில மான்சூன்
மாலைகளில் எதற்கோ
மழைவில் தோன்றுவதில்லை
என்னருகில் நீ பட்டாம்
பூச்சிகளுடன் விளையாடும்
நேரங்களா அவை?
**********
சொர்க்கத்தில்
பிரவேசிக்க இயலாமல்
வாசலை மறைக்கின்றன
வரதட்சணைகள் நரகத்தில்
நுழைந்து நாசமாகின்றன
திருமணப் பந்தங்கள்.
*********
வானம் பார்த்த பூமி
வாய்த்த ஏழை உழவன்
பொய்ப்பது மழைகள்
மட்டுமல்ல ஆட்சியாளர்களின்
வாக்குறுதிகளும்
*********
நூல் நிலையத்தை மூடியதும்
இருளில் மூழ்கிடும்
புத்தகங்கள் அந்தகாரமும்,
அமைதியும், பல்லிகளும்
அணிவகுத்துக்
காக்கின்றன
கிரந்தங்களை.
*********

## குறுங்கவிதைகள்

எந்த கவராயத்தால்
வரையப்படுகிறது வானவில்
என்னும் அரைவட்டம்?
மழை நாட்களுக்கு
உணர்விருந்தால்
இவ்வினாவுக்கு விடைச்
சொல்லட்டும்
********
மேற்குத் தொடர்ச்சி
மலைச்சாரல் இடைவெளி
விட்டவாறே மழைச்சாரல்
முகடுகளில் தவழ்ந்திடும்
முகிலினம் இயற்கை
அன்னையின் சீதனம்
**********
இந்த விலங்குரிமை ஆர்வலர்களை
'தெருநாய்கள்' ஏன்
கடிப்பதில்லை? உச்சநீதிமன்ற
'மனிதாபிமான' தீர்ப்பை
இவர்களேன் கடைப்
பிடிப்பதில்லை?
**********
காதல் தோல்வியும்
கார்காலமும்
உருவாக்குகின்றன
பாவலர்களை
சமூக அநீதியும்
சந்தர்ப்பவாதமும்
படைக்கின்றன
நாவலர்களை
*********



முனைவர்
வே.புகழேந்தி.
பெங்களூரு

---

ஒரு நல்ல மனிதன்
ஒரு நல்ல மனிதன்
முயற்சியால் உயர்ந்தவன்
நல்லவை பரப்புவான்
நாட்டுக்கே உழைப்பான்
கவலைஅலை
அவனையும் விடாமல்
துரத்தியது; திண்ணிய
மனத்தையும் கலக்க
முயன்றது; நடந்தான்,
நடந்தான் கடவுளை
வேண்டினான்; முடிக்கிற
திட்டங்கள் அவன்
மனத்திலே உதித்தன;
நடந்தான்; அலசினான்;
கவலைகளை அலசினான்;
ஆகாயத்திலே கவலையை
விட்டான்! அவன்மனம்
தெளிந்தது! சாத்தான்
தன்உணவாம்
கவலையைத் தின்றது!
வீடு திரும்பினான்
வேலையில் மூழ்கினா!



எஸ். சந்திரசேகரன்
அமுதா
செஞ்சிக்கோட்டை.

---

## பெருமிதப்படைப்பு.!

மனதின் நிறத்தை பிரதிபலிக்கும் மாயத்துகில் ஒன்றை...நேசமிக நெய்தான் இறைவன்... விரும்பி அணிபவர்களுக்கு.. வீரியப் புலமைகளும்.. விரும்பிய வரங்களையும் சேர்த்தே அளித்திட சித்தமென்றான்... 'அடப்போய்யா.. அணிந்திருப்பதையே அகற்றிவிட்டு அலையக்கூட சம்மதமென்றான்'.. தன் படைப்பே சக படைப்பை நிராகரித்த கடுப்பில் கசக்கி துகிலை தூர எறிந்தான் கடவுள்...காலில் இடறிய துணியில்.. கள்ளிக்காட்டில் கள்ளிப்பாலுக்கு தப்பிய குழந்தையை... முழம் கிழித்து பொத்தித்தூக்கிக் கொண்ட மருத்துவச்சி... மிஞ்சியதை ஆற்றில் எறிந்தாள்...ஒருகால பூசைக்கே கதியற்ற கோயிலுக்கென..குடம் சுமந்த பூசாரி..கஜம் கிழித்தார்... அதுபோதும் கடவுள் சிலை அந்தரங்கம் மறைக்க என்றார்... கரை ஒதுங்கிய கந்தலை கண்ட பொக்கிசமாய் பூரித்து எடுத்து போனான்.. சுடலைக்காவலன் ஒருவன்... ஆதரவற்ற பிணம் ஒன்றுக்கு ஆதரவு கோடியாக.. தன் உழைப்பு நிறம் மாறாத நிலைகண்டு நிம்மதி அடைந்தான் கடவுள்.!



க.குமாரகுரு, மயிலாடுதுறை

---

## "நதியின் இறுதி ஊர்வலம் லாரியில்"

நாளை கடலாக வேண்டிய
நதியொன்று இன்று
லாரியின் பின்பக்கத்தில்
மணலாய்ப்
பயணிக்கிறது!

கரையில் நின்ற மரங்கள்
கண்ணீரை இலைகளால்
துடைக்க, மண்ணின்
நெஞ்சில் மூச்சுத்திணறல்!

ஒரு காலத்தில் குழந்தைகள்
கால் விரலில் குறு...
குறுப்பூட்டிய நதியை
இன்று மண் வெட்டி அலகால்
கொத்திக் கொண்டிருக்கிறது
மணல் மாஃபியா பறவை!


மணல் மட்டுமல்ல,
நதியின் நரம்புகளும்
கிழிக்கப்படுகின்றன!
ஒவ்வொரு லாரியும்
ஒரு சடலம் ஏந்தும்
சவ ஊர்வலம்!

அரசின் கண்கள்
மூடப்பட்டதால் அதிகாரத்தின்
காதுகள் செவிடானதால் நதி
மட்டும் தன் இறுதி பாடலை
மௌனத்தில் பாடுகிறது!

ஒப்பாரி வைக்கின்றன
மரங்கள் சங்கை
ஊதுகின்றன
பறவைகள்! சேகண்டி
அடிக்கின்றன மீன்கள்!

அள்ளிச் செல்லாதே
என்று நீரலைகள்
கெஞ்சினாலும் அந்த ஓசை
டீசல் எஞ்சின் முழக்கத்தில்
மூழ்கிப் போகும்!

ஒரு நாள் இந்த நிலம்
தண்ணீர் கேட்டு அலறும்
அப்போது உணர்வோம்,
லாரியில் சென்றது
மணல் அல்ல...
நம்முடைய நாளைய
வாழ்க்கையென்று!



முகில் தினகரன்
கோயமுத்தூர்

---

1. ஒரு நாள் தவறான தேர்வு
ஐந்து வருட தண்டனை
வாக்குச் சாவடியும் ஒரு
நீதிமன்றம் தான்
நீங்களும் அன்று ஒரு நாள்
நீதிபதி தான்

2. எந்த விவாதமும்
இரண்டாம் நபரை
திருப்திப்படுத்தாது
ஆனால் மூன்றாம் நபருக்கு
நிறைய தகவல்களை
சொல்லும்

3. பறவைகள்
பாடுவது யாருடைய
அங்கீகாரத்திற்காகவும்
அல்ல தன்னுடைய
மகிழ்ச்சிக்காக மட்டுமே

4. உங்களிடம் குணம்
இல்லை என்றால் உங்கள்
குடும்பம் மட்டும் வெறுக்கும்
ஆனால் பணம் இல்லை
என்றால் இந்த உலகமே
உங்களை வெறுக்கும்

5. நாய் நன்றியுள்ளது
என்பது பெரிய அதிசயம்
இல்லை இத்தனை காலம்
மனிதர்களோடு
இருந்தும் அது
இன்னமும்
நன்றியோடு
இருப்பது
தான்
அதிசயம்



நடேஷ்
கன்னா
கல்லிடைக்குறிச்சி

---

## ஜோடி

நொந்து போன
உள்ளத்துடன் கடவுளை
வணங்க சென்றேன்
புதுச் செருப்பு தொலைந்தது
மனது சங்கடத்தை
உணர்ந்தது மறுநாள் அதே
கோவிலில் என் செருப்பு
பார்த்து இளித்தது
ஒரே மாடல் என்பதால்
தெரியாமல்அணிந்திருக்கலாமோ?
திருட்டு எனில் மீண்டும்
அதே காலணியுடன் வரும்
வாய்ப்பில்லைஇப்போது
அதை
அணிவதா
வேண்டாமா
குழப்பம்
நீடித்தது



பி. பழனி,
சென்னை.

---

## நிமிர்தலே நுட்பம்...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
நேர் கொண்ட பார்வையில்
நெளிவு சுளிவுக்கு
அவசியம் இல்லை
சராசரிக் குடுவையில்
சமரசமாகிச் சரிந்து
அந்தஸ்து இழக்கும்
அவஸ்தையும் இல்லை...
நேர்மைக் களத்தில் நின்றால்
தான் நெஞ்சம் நிமிர்த்தி
நேர்த்தி காட்ட முடியும்
அட்சரம் பிசகாத
ஐம்பூதத் தொகுப்பாம்
உடலியல் கருத்தின்
உட்பொருளும் இதனுள்
அடங்கும்... முதன்மை
உறுப்புப் பட்டியலில்
முதல் ஐந்து இடத்தில்
முத்தாய்ப்பாய்த் திகழும்
முதுகெலும்புக்கும்
முழுமையாய் இது மாசின்றி
பொருந்தும்.. முதுகெலும்பு
என்பது வெறும் பின்புறச்
சுவர் தானே என்றெண்ணி
பின்தள்ளி விடாதே...
நீடித்த வாழ்வுக்கும்
நிம்மதி நலனுக்கும்
நேரடியாய் வழி நடத்தி
ஒளி காட்டும் நீண்ட
நெடுஞ்சாலை அது...
அதனால் தான்
உட்காரும் போதே
உறுதியாய் நிமிர்ந்து
உயரம் கூட்டுவதே
தியானத்தின் முதல்படி
என்றார் முத்தான நம்
முன்னோர்... சாய்வு என்பது
சரிவின் அடையாளம்
தாழ்வும் தவிப்பும்
தழைக்கும் அதனால்!
இயற்கை என்னும்
அறிவியல் அன்னைக்கு
அபத்த இரக்கம்
அணுவளவும்
கிடையாது காண்...
இந்தக் கறார்க்குண
சூத்திரத்தால் தான்
கோடிக் கோடி ஆண்டுகள்
கழிந்தும் யூகிக்கவே முடியாத
யுகங்கள் தாண்டியும்
பிரபஞ்சம் இங்கே
பிரளயம் கடந்தும்
பிசிறு ஒட்டாமல்
பிழைத்து நிற்கிறது...
ஆகவே இளைஞனே!
அசைக்க முடியாத
அறிவியல் அன்னையை
அலட்சியப் படுத்தாமல்
ஆறறிவால் தரிசித்து
ஆண்டவனாய் எண்ணி
ஆராதனை பண்ணு...
கிளர்ந்தெழும் காமத்தையும்
கடும்பகை காட்டாமல்
கனிவாய் எதிர் கொள்...
விஞ்ஞானத்தின்
விஸ்வரூப வித்தை என்று
வித்தக உணர்வால்
வெறுப்பாய் இல்லாமல்
விருப்பாய் வசமாக்கு
கீழ்மை இல்லை கிழக்கான
மேன்மை என்பதை இனிதாய்
உணர்வாய்... ஏற்றம் பல
காண்பாய் வேர்களை
வீணடித்து கிளைகளுக்கு
வண்ணம் பூசும் வக்கிரத்தை
வாழ்வே போனாலும்
விலை கொடுத்து ஆற்றாதே!
உன் உன்னத உள்ளுக்குள்
வைரச் சுரங்கம் வற்றாத
ஊற்றாய்வளம் வளமாய்
மண்டிக் கிடக்கும் போதில்
நிமிர்தல் மகத்துவம் மறந்து
வெறும் மணல் கல்லுக்காய்
கூனிக் குறுகலாமோ?
செறிவூட்டல் என்பது
யுரேனியத்துக்கு மட்டும்
சொந்தமில்லை...
செழிக்க வேண்டிய
உன் சிந்தனைக்கும்
செயலுக்கும் தான்!



நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்

---

போராடி தோற்றுவிட்டேன்
போராட்டம் ஓய்ந்துவிட்டது
அமைதியாகி விட்டேன்
இனி ஒன்றுமில்லை
என்றில்லை அமர்திங்கு
சிந்திக்க வேண்டும்
தோற்றுத்தான் போனேனோ
தோற்கடிக்கப் பட்டேனோ
மீண்டு வர வேண்டும்
மீண்டு வருவேன்
இலக்கு மாறாது
இலட்சியங்கள் தோற்காது
வென்று வருவேன் ஓர் நாள்
அன்று சொல்வாய்
வாழ்த்துகள்

ஓம் குமார் P N

---



## முதலெழுத்து..!

(பெண்மையின் உரிமையை
மீட்ட.. ஒரு பெண்ணின்
உண்மைக் கவிதை.!)
** *** **
கணவனைப் பிரிந்து
தனிமையில் வாழ்ந்தாள்..
அந்தப் பெண்ணம்மா!

மண வாழ்வினில் மகிழ்ச்சி
யில்லை! பிரிந்தாள் அந்தப்
பெண்ணம்மா!

தனிமை தனிமை..
தனித்து வாழ்வதில்
சலிப்புற்றாள் அந்தப்
பெண்ணம்மா..!

தனக்கென வேண்டும்
தனக்கொரு குழந்தை..
அதற்கென்ன செய்தாள்
அந்தப் பெண்ணம்மா?

நவீன மருத்துவம்
அழைப்பினை ஏற்று
விந்துக் கொடை வழியே
பிள்ளையொன்றைப் பெற்றாள்!

அருமை மகனை அள்ளி
எடுத்து.. கண்ணைப்
போல் வளரத்தாள்.. அந்தப்
பெண்ணம்மா!

பள்ளியில் சேர்க்க..
விண்ணப்பித்திலே..
தன் பெயரை முன்
சேர்த்தாள்..!

தவறு.. தவறு..
குழந்தையைச்
சேர்க்கதந்தை பெயர் தான்
வேண்டு மென்றார்!
இருந்தும் இல்லா ஆண்மகன்
பெயரை சேர்க்க அவளோ
மறுத்து விட்டாள்.!

நீதிமன்றத்து படிகள் ஏறி..
வாதம் தனை வைத்தாள்..
தன்னுரிமையை மொழிந்தாள்.

நீண்டது வாதம்.. கடந்தது
காலம்.. ஒருநாள் தீர்ப்புத்
தந்தார் நீதியரசர்..!

தந்தை இருந்தும் பிரிந்து
போனான்.. அவன் பெயர்
எதற்கு இங்கே.!?

விந்துக் கொடைத் தந்தவன்
பெயரும் தேவையில்லை
இங்கே...

தாயின் பெயரின்
முதலெழுத்தை.. குழந்தைக்கு
சேர்த்திடலாம்..!

பெண்ணின் உரிமை..
பெண்ணின் அருமை
பெண்பெற்ற குழந்தைக்கு
உண்டு!

அன்றுமுதல்.. அந்தக்
குழந்தைக்கு தாயின்
பெயர்தான் முதலெழுத்து..!

தாய்மை வென்றது..
உரிமை கிடைத்தது..
வரலாற்றில் இது இனி
ஆகா.. பொன்னெழுத்து!



வே.கல்யாண்குமார்.

---

# நூல் விமர்சனம்

**இறகைத் தேடும் சிறகுகள்**
**நூல் ஆசிரியர் : கவிஞர் நாகை ஆசைத்தம்பி !**
**நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !**
**நூல் வெளியீடு : கவிக்குடில், கோவை. அலைபேசி : 87548 79990**




'இறகைத் தேடும் சிறகுகள்' நூலின் பெயரே வித்தியாசமாக உள்ளது. பெற்றோரைத் தேடும் குழந்தைகள் என்றும் பொருள் கொள்ளலாம். நூல் ஆசிரியர் கவிஞர் நாகை ஆசைத்தம்பி அவர்களின் 16ஆவது நூல். ஹைக்கூ வரிசையில் 4ஆவது நூல். இவரது முந்தைய ஹைக்கூ நூல்களுக்கு மதிப்புரை எழுதி உள்ளேன்.

இந்த நூலின் புதுமை என்னவென்றால் பன்மொழி ஹைக்கூ நூல் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் என 4 மொழி ஹைக்கூ கவிதைகளும் ஒரே நூலில் வந்துள்ளன. 4 மொழிகளில் ஹைக்கூ கவிதைகள் வந்துள்ள முதல் நூலும் இதுவே. 4 மொழிகளும் நூலாசிரியருக்குத் தெரியுமா? என்பது தெரியவில்லை. தெரிந்து இருக்கலாம். அல்ல பிறமொழி மட்டும் மொழிபெயர்ப்பாளரிடம் பெற்று படைத்து இருக்கலாம்.

உலகின் முதல் மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம், வடஇந்திய மொழி இந்தி, அண்டை மாநில மொழி மலையாளம் நான்கு மொழிகளிலும் ஹைக்கூ யுத்தியுடன் மூன்று வரிகளிலேயே படைத்து இருப்பது சிறப்பு. தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழி மட்டும் நான் அறிந்தது. எனவே இருமொழி சிறப்பை மட்டும் எடுத்து இயம்பி உள்ளேன். பதச்சோறாக சில ஹைக்கூ கவிதைகள்.

பாலுக்கு அழும் குழந்தை குடம் பாலை குடிக்கிறது சாமி சிலை BABY CRYING FOR MILK THE JUG DRINKS MILK GOD STATUE இந்த ஹைக்கூவின் மூலம் பகுத்தறிவு சிந்தனையை விதைத்து உள்ளார். ஏழைக்குழந்தை பசியால் வாடும் போது, கடவுள் சிலைக்கு பாலாபிசேகம் செய்வதில் பயனில்லை என்பதை நன்கு உணர்த்தி உள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பும் பொருத்தமாக உள்ளது.

நிறங்களை நகலெடுப்பதில்லை நிழல்கள் COLORS NOT COPYING SHADOWS நிழல் என்பது கருப்பாகவே இருக்கும். நிழல் கண்ணாடி போல வண்ணத்தை எதிர்பார்க்க முடியாது. காட்சிப்படுத்தல் ஹைக்கூவின் மூலம் சிந்திக்க வைத்துள்ளார்.

அம்மா தாயே என்றார் பிச்சைக்காரர் அவசரமாய் வந்து போட்டேன் கதவின் தாழ்பாள். SAID THE MOTHER BEGGER I SAME IN A HURY DOOR LATCH ஹைக்கூ கவிதையில் மூன்றாவது வரி எதிர்பார்த்தது இல்லாமல் வேறாக இருக்கும். அவசரமாக வந்து பிச்சை போடுவார்கள் என்று எதிர்பார்த்தால் கதவிற்கு தாழ்பாள் போடுகிறார்கள். இன்றைய மனிதர்களும் பலர் பிச்சை போட மனமின்றியே தன்னல வாழ்வே வாழ்கின்றனர்.

தொழிற்சாலை புகை வேகமாய் பரவுகிறது தொற்று நோய்கள் INDUSTRIAL POLLUTION SPEREADS FAST INFECTIOUS DISEASES இந்த ஹைக்கூ கவிதையினைப் படித்தபோது தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டமே நினைவிற்கு வந்தது. அநியாயமாக 13 உயிர்கள் பலியானது. ஒருவழியாக மூடப்பட்ட நச்சுஆலை, இன்னும் உயர் , உச்ச, உயர்நீதிமன்றங்களில் மேல்முறையீடு செய்வதும் திறக்க முயற்சி செய்வதும் வேதனை.

இரண்டு பெரிய லாரிகள் மோதல் இரண்டின் முகப்பிலும் அம்மன் துணை. TWO TRUCKS COLLIDE ON THE FACE OF BOTH GODDESS SUB அம்மன் துணை என்று எழுதி இருந்தாலும் கவனக்குறைவாக ஓட்டினால் விபத்து நடக்கத்தான் செய்யும் என்ற விழிப்புணர்வை விதைக்கும் விதமான ஹைக்கூ நன்று. எளிமையான ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தி இருப்பது எளிதாக புரிந்துகொள்ள உதவுகின்றது. நோய்விட்டுப்போக வாய் விட்டு சிரிக்க முடியல வாடகை வீடு!

GET SICK CAN'T LAUGH OUT RENTED HOUSE உண்மை தான். வாடகை வீட்டில் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. எப்போது வேண்டுமானாலும் காலியாக்கச் சொல்வார். வாடகை கூட்டிக் கொடு என்பார். ஆணி அடிக்காதே என்பார். சொந்த வீட்டின் மகிழ்ச்சி, வாடகை வீட்டில் இருப்பதில்லை என்ற உண்மையை உணர்ந்து வடித்த ஹைக்கூ நன்று. உடைந்த பலூனுக்கு இரங்கல் தீர்மானமோ குழந்தைகள் கண்ணீர் FORA BROKEN BALLOON CONDOLANCE RESOLUTION CHILDREN TEARS கையில் வைத்திருக்கும் பலூன் உடைந்து விட்டால் குழந்தை உடன் அழத்தொடங்கி விடும். சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விடும். குழந்தையின் அழுகையை இரங்கல் தீர்மானம் என்று சொல்வது நல்ல சொல்லாட்சி. ஆங்கில ஹைக்கூவும் எளிதில் புரியும் வண்ணம் எளிமையாக இருக்கின்றன, சிறப்பு.கட்டி முடிந்தது வீடு முடியாமலே இருக்கிறது அசலுக்கான வட்டி!


THE HOUSE IS FINISHED IT IS IMPOSSIBLE INTEREST ON THE ORIGINAL இதில் ORIGINAL என்ற சொல்லிற்குப் பதிலாக CAPITAL என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். கொரோனா காலத்தில் வருமானமின்றி மக்கள் தவித்தபோது மாதத்தவணை கட்டமுடியாமல் வேதனைப்பட்டனர். வட்டிக்கு வாங்கி வீடு கட்டுவதை விட வாடகை வீடே மேல் என்று உணர்த்தி விட்டனர். தவணை கட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டு தற்போது கூட்டு வட்டிப் போட்டு வசூல் செய்து வாட்டி வருகின்றனர். மக்கள் சொல்ல முடியாத துயரத்தில் வாடி வருகின்றனர். ஆயிரம் கோடிகளைக் கொள்ளையடித்த கொள்ளையர்களை வெளிநாடுகள் தப்பிச்செல்ல விமானத்தில் வழியனுப்பி வைக்கின்றனர், அவல நிலை. முகம் தெரியாவிட்டாலும் மனம் ரணமாகிறது அவசர ஊர்தியின் அலறல்!

EVEN IF THE FACE IS NOT VISIBLE THE MIND DIES THE SCREAM OF AN AMBULANCE அவசர ஊர்தியின் சத்தம் கேட்டால் மனதிற்குள் படபடப்பு வந்துவிடும். வழியில் சென்று கொண்டு இருந்தால் ஊர்திக்கு வழி விட்டுவிட்டு உள்ளே இருப்பவர் முகம் தெரியாவிட்டாலும் யாரோ, எவரோ? என்ன ஆனதோ? உயிருக்கான போராட்டம், உயிரோடு போராட்டம். இப்படி பல நினைவுகள் வந்து இளகிய மனம் ரணமாகி விடும். அந்த மனிதாபிமானத்தை ஹைக்கூ ஆக்கி உள்ளார்.

4 மொழிகளில் வந்துள்ள முதல் ஹைக்கூ நூல். ஆசிரியர் கவிஞர் நாகை ஆசைத்தம்பி அவர்களுக்கு பாராட்டுகள்.

கவிஞர் இரா.இரவி
மதுரை



## பிரிவெனும் தொடக்கம்

தாய் மரத்தின் கிளை பிரிந்து
மண்ணுக்குள் விதை
புதையாவிடில் வளருமோ
வானம் தொடும் விருட்சம்!

வான் மேகத்தின் தேகம்
பிரிந்து மண்ணில் மழைத்துளி
வீழாவிடில் உருவாகுமோ
தாகம் தீர்க்கும் நதிகள்!

பாதுகாத்த கூட்டைப் பிரிந்து
வெளிவர கம்பளிப்பூச்சி
விரும்பாவிடில்
சிறகடித்திடுமோ
மலர்களை சுற்றி
வண்ணத்துப்பூச்சி!

தாய் மடியாம் மலையைப்
பிரிந்து உளி தந்த வலிகளைத்
தாங்காவிடில் மாறிடுமோ
சிறு கல்லும் கருவறை
தெய்வமாக!


முத்தமிடும் இமைகள் பிரிந்து
விழிகள் ஒளியில்
நனையாவிடில் சிறைப்படுமோ
சிந்தைக்குள் உலகம்!

கருவறையைப் பிரியும்
கருவின் பயணமே
உயிரின் தொடக்கம்..
கூட்டைப் பிரியும்
பறவையின் பயணமே
ஆகாயத்தை அளக்கும்..

பிரிவுகளுக்கு பயந்திருந்தால்
கல்பனாவுக்கு
சாத்தியமாயிராது
விண்வெளி விழுதுகள்..
சுனிதாவுக்கு வழி விட்டிராது
நட்சத்திர பாதைகள்..

பிரிவுகள் எல்லாம் காயம்
அல்ல – அவை உதிர்ந்த
இறகுகளை எருவாக்கி
வானம் தொட விரிந்த
சாதனை சிறகுகள்!
பிரிவுகள் எல்லாம் முடிவு
அல்ல – அவை
இந்த வையகத்தை
வசமாக்கும் முத்திரை
பயணத்தின் முன்னுரை!

**ஸ்டெஃபி காட்பிரே-**
நாகர்கோவில்



1. பேனா தவறாக
எழுதியதற்காக யாரும்
பேனாவை உடைப்பதில்லை
அப்பாவிகாகிதத்தை தான்
கிழித்து எறிகிறோம்
இப்படித்தான் சில
மனிதர்களையும்

2. கோபம் நேசிப்பவர்களை
கூட வெறுக்க வைக்கும்
அன்பு வெறுப்பவர்களை கூட
நேசிக்க வைக்கும்

3. கல்வியில் வியர்வை
கசப்பாக இருக்கலாம் ஆனால்
அது தரும் கனிகள்
இனிப்பானவை

4. எல்லாவற்றையும் தெரிந்து
கொள்ள ஆசைப்படாதீர்கள்
சிலவற்றை புரிந்து கொள்ள
முயற்சி செய்யுங்கள்
தெரிதலுக்கும் புரிதலுக்கும்
இடையில் தான் உணர்வுகள்
பிறக்கின்றன

5. வாய்ப்பு என்பது வடை
மாதிரி நாமதான் காக்கா
மாதிரி போய் தூக்கி
கொள்ளணும் பீட்சா மாதிரி
வீடு தேடி வரும் என்று
எதிர்பார்க்கக் கூடாது
--------------------



1. ஒரு கொசு நம்ம ரத்தத்தை
குடித்துஅது குட்டி போட்டால்
அது நம்ம குட்டி தானே

2. சாவியை போல
உண்மையாக இருங்கள்
அது ஒருபோதும் இன்னொரு
பூட்டை திறக்காது

3. ராஜ மரியாதை
கிடைத்தாலும் மாமியார்
வீட்டில் தங்க நினைக்காத
கணவன்அவமரியாதை
கிடைத்தாலும் மாமியார்
வீட்டில் வாழும் மனைவி
இதுதான் வாழ்க்கை

4. உன்னுடைய குரலை
உயர்த்துவதற்கு பதிலாக
உன்னுடைய தகுதியை
உயர்த்திக் கொள்

5. பணம் கண்டிப்பாக
சம்பாதிக்க வேண்டும்
ஆனால் அதைவிட நாம்
வாழும் காலங்களில்
நமக்காக கண்ணீர் சிந்த
10 பேரையாவது சம்பாதிக்க
வேண்டும் இதுதான் அளிக்க
முடியாத பெரிய சொத்து
--------------------



1. அருமை தெரியாதவனுக்கு
புல்லாங்குழலும் விறகு தான்

2. மரியாதை வேண்டுமா
தூரமாக இருந்து பழகு
நிம்மதி வேண்டுமா
எளிமையாக இருந்து பழகு
வெற்றி வேண்டுமா
பொறுமையாக இருந்து பழகு
அமைதி வேண்டுமா
எல்லாவற்றையும் நம்பி
விடாதே

3. தேவைகளுக்கு ஏற்ப
வாழ்க்கையை வாழுங்கள்
ஆசைகளுக்கு ஏற்ப அல்ல
ஏனெனில் தேவைகள்
பிச்சைக்காரனுக்கு கூட
கிடைக்கிறது ஆசைகள்
பேரரசனுக்கு கூட
பூர்த்தியாக கிடைப்பதில்லை

4. ஹிட்லர் மாதிரி புருஷன்
கிடைத்தாலும் அவனையும்
பாத்திரம் கழுவ வைக்கிறவள்
தான் தமிழ் பொண்ணு

5. கூட்டத்தோடு கூட்டமாக
ஆட்டு மந்தையில் இருப்பதை
விட தனித்து நின்று
சிங்கமாக இருப்பதே மேல்



6. தேவைக்கு
தேடுவோரை
தொலைப்பதில்
தவறில்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## கோடையின் சிறப்பு

பருவங்கள் மாறுவதால்
வெயில் காலம் சில காலம்
உழைப்பவர் கூட்டத்துக்கு
வியர்வையே பரிசாகும்


பருவமங்கை முகத்தினிலே
பருக்களாய் வடிவெடுக்கும்
பள்ளிகள் விடுமுறையால்
வீதியெங்கும் விளையாட்டே

பழங்களைக் கொடுத்திடும்
மாங்காய்க்கும்
வெயில்வேண்டும்
தினசரி சமையலில்
புளிக்கும் வெயில்வேண்டும்

காய்கறிகள் கிடைக்காவிடில்
வாடாத்திற்கும்
வெயில்வேண்டும்
சுத்தமான வீட்டிற்கும்
வெள்ளையடிக்க ஏதுவாகும்

இயற்கையில் கிடைத்திடும்
ஏற்றமிகும் சக்தியே
எலும்புகள் வலுவாகச்
செய்திடும் கதிர்களே

இளநீர்நுங்கு மாபலாச்சுளை
தித்திக்கும் பதார்த்தங்கள்
படைத்திடும் இக்காலங்களே
கடவுளாய்ப் போற்றுதுமே



மனம் என்னும்
மேடையிலே
வெயில் மழை
ஒருநினைவே
நீர்வீழ்ச்சிகள்
யாவும்
சப்தமிடுமே
நெஞ்சமும்
மறக்க நினைப்பதில்லையே...

**கே பானுமதிநாச்சியார்**
சிவகிரி

## வேண்டும் அமைதி

திசை மாறி போனால்
நிலையாவதில்லை
மலைபோல நின்றால்
ஒன்றும் முடிவதில்லை

ஆடுகின்ற கால்கள்
அடங்க மறுக்கும்போது
நிலை மாறி போகும்
தரம் தாழ்ந்து போகும்

சிந்திக்காத செயல்கள்
செயழிலந்து போகும்
ஆழ சிந்தித்தால்தானே
அமைதி நிலவி வளரும்

சினம் கொண்ட ஒருவன்
சீரமைப்பு செய்வதில்லை
நிந்திக்கின்ற மனிதன்
உலகை ஆளுவதில்லை

போதுமடா சாமி
பூமியில் வாழ்ந்த வாழ்க்கை



அனைவருமே
இங்கே
காட்டுவது
வேடிக்கை...!!


**பொன். கருணா**
நவி மும்பை

## குருவை வணங்கிடக் கூறு!

நேரிசை வெண்பா!

நல்லறிவு நல்ஞானம்
நல்லொழுக்கம் பல்லறிவு
பாங்கான..வல்ல
திருவான கல்வி
தெளிந்திட நல்கும்
குருவை வணங்கிடக் கூறு!

வாழ்வின் வழிகாட்டி
வண்ண அறிவூட்டி
சூழ்ந்த பலதுறை
சொல்லிடும்..ஆழ்ந்த



அருமையான
கல்வி
அளித்தே
வருவார்
குருவை
வணங்கிடக்
கூறு!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## காதல் கடத்தல்

நாரதர் கலகம் எப்பொழுதும்
நன்மையில் முடியும்
என்பதைத் தெரிந்து
வைத்துக் கொண்டுதான்
நீ அவரை உனது
குருவாக்கிக் கொண்டாயா?
நீ என்னைப்பற்றிக்
கயிறு திரிக்கும்
கலகங்கள் கூட
என்னைத் தீமையிலிருந்து
மீட்டெடுத்து விடுகிறது!
உனக்கு ஏக்கர் கணக்கில்
கொழுப்பிருந்தாலும்
நாம் சந்திக்கும்
போதெல்லாம் நீ
அதைக் கொஞ்சமாவது
எனக்கு எழுதி வைக்க
நினைப்பது நம் காதலை
நாடு கடத்த முயற்சிப்பது
போன்ற வன்மையான
கண்டிக்கத்தக்க செயல்!
நீ இதையெல்லாம்
நினைத்து மீண்டும்
மீண்டும் முறுக்கேறாதே!
கொழுப்பைக் கரைக்கும்
அரிய வகை மருத்துவம்
என் ஒவ்வொரு
முத்தத்திலும் இருக்கிறது!
சிகிச்சைக்கு ஒப்புதல்




அளிக்க
வேண்டிய
மட்டுமே
இப்பொழுது
உன் பதில்!

**முத்து ஆனந்த்**
வேலூர்




அவள் காதில் ஊஞ்சலாடி
கொண்டிருக்கும்
கம்மலிற்கும் , எனக்கும்
சற்று வாக்குவாதம்
ஏற்பட்டது. அவள்
காதோரத்தில் என்றும் நானே
முத்தமிட வேண்டும் என்று.
அதில் கம்மலே வென்றது.
கம்மலுக்கு தெரிவதில்லை
தினம் அவள் காதோரத்தில்
முத்தம் இடுவாதல் அதன்
மதிப்பு, என்றோ ஒரு நாள்
அவள் காதோரத்தில்
முத்தமிடும் எனக்கு மட்டுமே
தெரியும் அதன் மதிப்பு
என்னவென்று!!!
அவள் காதோர கம்மல் .....



மதியை விழுங்கும்
கோபமொன்றில்...

தடை செய்து விட்டேன்...
இணையத்தில்...

சொல்லெணாத் தவிப்புடன்...
அலைமோதுவாய் நீ...



என்பதை...
உணராமல்...

பிரிவின்
வேதனையை
இருவரும்..
பகிர்ந்து
கொள்ளாவிடினும்...

இணைவை நோக்கியே...
நடைபோடுகின்றன..
நினைவுகள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## மனதால் விலக்கி வளமாய் வாழ்

" தீயவைகளை விலக்கி
வாழ்வோம் கெடுதல்
செய்தோருக்கு
மனதால் விலகி பாடம்
புகட்டுவோம்...."

நேர்ந்த அநீதி கண்டு
கொதித்து அதில்
மனதை செலுத்தி
காலம் வீண் போவதை
தவிர்ப்போம்..."

மனதால் விலக்கி
வைத்துவிட்டு புது
வேகம் விவேகம்
முயற்சி எடுத்து

எட்டா உயரத்தை
எட்டிப் பிடிப்போம்
ஏற்றி விடும் ஏணியாக
உயர்ந்துடுவோம் ...."

மனதை தைத்து
உடலை வதைத்துக்
கொண்டு இருக்கும்
எதிராளியின்
உறவினர்களின்

செயல்களை குப்பை
நினைத்து மனதை
பெருக்கி அகற்றிவிட்டு
வாழ்க்கையை

நிறைவாய் வளமாய்
உயர்வாய் வாழ
புதுப்புது அவதாரம்
எடுத்து முயற்சி

பயிற்சி என உழைத்து
இலக்கை எட்டுவோம்
வா மனிதா உன்



கரங்கள் சேர்
வலிமை
காட்டவே
புறப்படு ...."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



## வாழ்க்கை

எழுதிக்கொண்டேயிரு
எப்போதும் ஒரு கவிதையை
உன் மனதில்.
அது உனக்கே உனக்காக.
நீ சோர்வுறாதிருக்க.
தடுமாற்றங்களைத் தவிர்க்க.
உனக்கு உற்சாகமூட்ட.



நீ வாழ்வை
மேலும் ரசிக்க.
அளிக்கப்
பட்டவற்றுக்கு
நன்றி சொல்ல.


**கே. பி. ஜனார்த்தனன்**

## எது இல்லை?

பணத்தில் கொழிக்கும்
போதோ பணம் ஒன்றும்
பெரிதில்லை என்பார்கள்;
பணம் கொஞ்சமும்
குறையாமலிருக்கத்
துணிந்திடுவார்கள் எதையும்
செய்ய!

பதவியில் திளைக்கும்
போதோ இதுஒன்றும்
பெரிதில்லை என்பார்கள்;
பதவியில்லாத போதோ
இராப்பகலும் அதுவே
குறியென்று இயங்குவார்கள்!

புகழ்எனச் சொல்வது
இன்றோ முகஸ்துதி
சொல்வோர் கூட்டத்தை
மிகவும் கவனமாக
வளர்ப்பது;தன் முகத்தைத்
தினமும் செய்தித்தாளில்
புகைப்படமாகப் பார்ப்பது!
தொலைக்காட்சியில்



ஒருநிமிடம்வர
அலைந்து
ஆட்களைப்
பிடிப்பது!

குணம்
வேண்டும்
என்று
தேடுவோர் உண்டோ?

குணமுடையவர்க்கு
மற்றவை வேண்டுமோ?

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை



## என்னவைத்தோம்


முன்னோர்கள் தூய்மையாக
வைத்திருந்
மூச்சிழுக்கும் காற்றினிலே
நஞ்சை சேர்த்தோம்
முன்நின்று காற்றிலுள்ள
அசுத்தம் நீக்கும்
முதலுதவி மரங்களினை
வெட்டிச் சாய்த்தோம்
பொன்கதிரை வடிகட்டி ஒளிய னுப்பும்
பொற்கவச ஓசோனை ஓட்டை செய்தோம்
என்னவைத்தோம் எச்சத்தார்க்குத் தன்ன லத்தால்
எல்லாமும் கலப்படத்தால் கெடுத்து வைத்தோம் !

ஆயிரமாம் ஆண்டுகளாய் சேர்த்து வைத்த
அடிநீரைக் குழாய்வழியே காலி செய்தோம்
பாய்மரம்போய் கடல்நீரில் எண்ணெய் குண்டால்
பரிதவிக்க மீன்களினைச் சாக டித்தோம்
தாய்மண்ணில் உரங்களினைப் போட்டுப் போட்டுத்
தரும்விளைச்சல் எனஉறிஞ்சி சக்கை செய்தோம்
சேய்களுக்கே என்னவைத்தோம் தன்ன லத்தால்
செழித்திருந்த இயற்கையினைக் கெடுத்து வைத்தோம் !



அரணாக நமைக்காத்த காட்டை வெற்பை
அழித்துடைத்தே மழைவளத்தை மலடு
செய்தோம் வரமாகப்பெற்றவயல் தோப்பை
வீடாய் வடிவமைத்து விளைச்சலுக்கு முடிவு
செய்தோம் கரமாக உதவிவந்த ஆற்று
நீரில் கழிவுசேர்த்து மணலெடுத்து
முடமாய்ச் செய்தோம் சிரமிழந்த உடலாக எச்சத்தார்க்கே
சீர்இயற்கை தனைமாய்த்தே இருளை வைத்தோம் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## புனித வெள்ளி

மனிதனை கடவுளாய்...
மூடர்கள் சொல்லும்
இந்த உலகில்
நீர் தான் ஐயா
மனித வடிவில்
மண்ணிற்கு வந்த கடவுள்!

உலகத்தின்... பாவத்திற்குாய்
தன் ஜீவனையே
பலி கொடுத்த இறைவா
உமைக் காட்டிலும்
உயர்ந்த தியாகம்
உலகத்தில் ஒன்றுமில்லை!

மனம் திரும்பா... மக்களின்
வாழ்க்கை இன்றும்
சிறை இருப்பில் தான்
இருக்கிறது சிலுவை சுமந்து
நீ நடந்த வீதிகளிலும்
இன்றும் பலர் பாவத்தை
சுமந்து கொண்டு
பரிதவிக்கிறார்கள்!

இறந்தவர்...மறுபடியும்
மண்ணுக்கு திரும்பாத
மனித வாழ்வில்
இறந்த மூன்றாம் நாளே
உயிர்த்தெழுந்த
தேவன்
நீர் ஒருவரே!

இறைவா... தன்னை
காட்டிக் கொடுக்கும்
யூதாஸின் கால்களை
கழுவிய உமை விட
தாழ்மையுள்ள கடவுள்
தரணியில் யில்லை!

உமது மரணத்தில்...
தொடங்கிய முப்பது
வெள்ளிக்காசு மோகம்தான்
வாட்டி வதைக்கிறது
இன்று வரை பணம்
பணமென்று வாழும்
மக்களை!

தியாகம்...
அன்பு கிருபை என்று
மனித குலத்திற்கு
நீர் தந்த வாழ்வியலை சுற்றி
துரோகங்கள்
நிறைந்திருக்கிறது!

மண்ணான மனுசன்...
நீ மறுபடியும் மண்ணுக்கே
திரும்புவாய் என்று நீர்
உரைத்த சத்தியத்தை
யுணராத மானுட சமூகத்திற்கு
சங்கடங்கள் நேர்கிறது!

உமது முதல்... வருகையின்
போது கிழக்கு வானில்
நட்சத்திரம் தோன்றி
அடையாளப்படுத்தியது
நீர் பிறந்த திசையை!

தவறு செய்யும்
மனிதர் யாவரும்
சட்டத்தின் ஓட்டை வழியில்
தண்டனையிலிருந்து
தப்பித்தாலும்
விதியின் வினையால்
எதிர்வரும் நிந்தனையை
இயேசுவே உம்மை விட்டால்
ஒருவராலும்
மாற்றி அமைக்க முடியாது!

புனித வெள்ளியில்...
சிலுவை சுமந்து



உயிர் நீத்த உத்தமரே
நீர் மறுபடியும்
உயிர்த்தெழுந்து வரும்
இரண்டாம்
வருகையின் நாளே
எங்களுக்கு விடிவெள்ளி!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்



## "கிளிப் பேச்சில் நம்பிக்கை"

மர நிழலில் கிளிப் பெட்டி
மஞ்சள் நூல் தேடும்
கன்னிச் சிட்டு.
கண்களில் நாணம்
மனதினில் ஏக்கம்!

எப்படி வருவானென்
ராஜகுமாரன்?

கூட்டிலிருந்து வந்த கிளி
கொத்தியதோர்
அட்டையை!

அதில் வந்தது
நல்லவன் வருவானென்று!
அந்த ஒரு வரியிலே
அவள் உலகம் மலர்ந்தது!

வெயில் காய்ந்த
பாதையிலும்
விழிகள் குளிர்ந்தன!
காணாத
மனிதனொருவன்
கனவுலகில் உலவினான்!

தனிமைச் சிரிப்புக்கள்
தடையின்றி வந்தன!
தணியாத தாகங்கள்
தகராறு செய்தன?


கிளியின் அட்டை
உண்மையா? பொய்யா?
தெரியாமலே நம்பிக்கையை
இதயத்தின் ஆழத்தில்
பதியன் போட்டிருந்தாள்?

கிளி எடுத்த காகிதம்
திரையாய் நின்றிருக்க



அந்தப்
பக்கத்தில்
அவள்
எதிர்காலம்
அரைகுறையாய்த்
தெரிகின்றது!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்


Happy
Birthday!
Wishing you the happiest and brightest day ever! May you have all the happiness your heart can hold
MURUGESAN


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
REAL ESTATE
Call:7871617005


HAPPY
BIRTHDAY
101
BIRTHDAY
WISH YOU ALL THE BEST
திருநாவுக்கரசு


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



•WANTED•
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
✓ Salary: ₹10,000 - ₹15,000
✓ Attractive Incentives
✓ Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No : 11/16, Gandhi Nagar, E.H Road, Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com



Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009








Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601







WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106







செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539
















# பல்சுவை களஞ்சியம்




# தீக்குச்சி எப்படி எரிகிறது

ஒரு தீக்குச்சியை தீப்பெட்டியின் இருபக்கங்களில் உள்ள சொர சொரப்பான பகுதியில் ஏதாவது ஒரு பக்கத்தில் உரசினால் தீப்பெட்டி எரிவதில்லை.தீக்குச்சிதான் எரிகிறது. ஏன் என்றால் தீக்குச்சிக்கு மண்டைக்கனம். இது ஒரு கடி ஜோக்.

இப்போது மேட்டருக்கு வருவோம். ஒரு தீக்குச்சியை தீப்பெட்டியின் இருபக்கங்களில் உள்ள சொர சொரப்பான பகுதியில் ஏதாவது ஒரு பக்கத்தில் உரசினால் தீக்குச்சி பற்றி எரிகிறது.
இதன் பின்னே உள்ள சுவாரசியமான விஞ்ஞான உண்மைகளைப் பார்ப்போம்.



இப்போது தீக்குச்சியின் மண்டையில் என்ன இருக்கிறது,தீப்பெட்டியின் இரு பக்கங்களிலும் என்ன இருக்கிறது என்று பார்ப்போம்.

தீப்பெட்டியின் இரண்டு பக்கங்களிலும் 'சிவப்பு பாஸ்பரஸ்'( Red Phosphorus) என்ற ரசாயனப்பொருளும் கண்ணாடிப்பொடியும் கலந்த கலவை தடவப்பட்டுள்ளது. இது வரிசையாக புள்ளி புள்ளி யாக இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

தீக்குச்சியின் மண்டையில் பொட்டாசியம் குளோரேட் மற்றும் (Potassium Chlorate) கந்தகம் (Sulphur) கலந்த கலவை இருக்கிறது.

ஒரு தீக்குச்சி எரிவதற்கு தேவையானவை:

எரிபொருள்+வெப்பம்+ஆக்ஸிஜன்=தீ

நாம் தீக்குச்சியை தீப்பெட்டியின் சொரசொரப்பான பக்கத்தில் உரசினால் முதலில் வெப்பம் உண்டாகிறது.எந்த இரண்டு திடப் பொருள்களை உரசினாலும் வெப்பம் வெளிப்படும் என்பது நாம் அறிந்ததே. இந்த வெப்பத்தால் புள்ளி புள்ளியாகத் தெரியும் சிவப்பு பாஸ்பரஸின் ( Red Phosphorus) மிகச் சிறு பகுதி வெள்ளை பாஸ்பரஸாக மாறுகிறது. இதுதான் தீக்குச்சியை உரசும்போது நடைபெறும் முதல் இரசாயன நிகழ்ச்சி.

இந்த வெள்ளை பாஸ்பரஸ் காற்றில் உள்ள ஆக்ஸிஜனோடு சேர்ந்து இன்னும் அதிகமான வெப்பமடைகிறது.
இந்த வெப்பத்தால் தீக்குச்சியின் மண்டையில் உள்ள பொட்டாசியம் குளோரேட் சூடாகி மிகுந்த அளவில் ஆக்சிஜன் வெளிவருகிறது.இதனால் சூடான வெள்ளை பாஸ்பரஸ் தீப்பிழம்பாக எரிகிறது. தீக்குச்சி தொடர்ந்து எரிவதற்கு உதவுவது தீக்குச்சியில் மண்டையில் இருக்கும் கந்தகம் , தீக்குச்சியின் முனையில் தடவப்பட்டிருக்கும் மெழுகு( wax) மற்றும் குச்சி.(wood)

இதை சேஃப்டி மேட்ச் என்று ஏன் சொல்கிறார்கள் என்றால் எரியக்கூடிய சிவப்பு பாஸ்பரஸ் தீப்பெட்டியின் பக்கங்களிலும் ( அதாவது தீப்பெட்டியின் வெளியேயும்) அதன் மேல் உரசும் தீக்குச்சிகளை தீப்பெட்டியின் உள்ளேயும்,அதாவது தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளன.அதனால் யாராவது தீக்குச்சியை தீப்பெட்டியிலிருந்து வெளியே எடுத்து தீப்பெட்டியின் சொரசொரப்பான பக்கத்தில் உரசினால் ஒழிய தீ பிடிப்பதற்கான சாத்தியம் இல்லை. இன்னொரு விஷயம் என்னவென்றால் வெள்ளை பாஸ்பரஸ் பாட்டிலில் இருந்து வெளியே எடுத்து வைத்தாலே காற்றில் உள்ள ஆக்சிஜனுடன் சேர்ந்து உடனே எரிய ஆரம்பித்து விடும் .அதனால்தான் தீப்பெட்டியில் சிவப்பு பாஸ்பரஸ் உபயோகிக்கப்படுகிறது.சிவப்பு பாஸ்பரஸ் சூடு படுத்தினால்தான் எரியும்.அதனால் ஒரு சேஃப்டி.

தீக்குச்சிகள் பீ தணக்கன் அல்லது பீ நாறி அல்லது பீய்யமரம் என்று அழைக்கப்படும் மென்மையான மரத்திலிருந்து தயாரிக்கப் படுகின்றன.

# மீம்ஸ்







# திருமணம்...சில நம்பிக்கைகள்

## சடங்குகள் நம்பிக்கைகள்

**அம்மி மிதிப்பது**
அம்மி போன்று மன வலிமை கிடைக்குமென்று.
**அரிசி தூவி வாழ்த்துவது**
உணவிற்கு பஞ்சமின்றி வாழ்வீர்கள் என்பதற்காக
**மூன்று முடிச்சு**
அறம்,பொருள், இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருளில் நிற்பதற்காக
**வாழை மற்றும் தென்னங்கிற்று தோரணம்**
_வாழை தென்னை அழியாத பயிர்கள். இவை எல்லா காலங்களிலும் வளரும் அதன் எல்லா பாகங்களும் நமக்கு பயன்தரும். அதுபோல் மணமக்கள் வாழ வேண்டும் என்பதற்காக
**மெட்டி அணிவிப்பது**
வாழ்வின் பொறுப்புகளை சுட்டிக்காட்டும் | கால்கட்டின் அடையாளம்



**கெட்டி மேளம் கொட்டுவது**
அனைவரையும் திருமணம் பத்தி மட்டுமே சிந்திக்க வைக்க. அமங்கலமான அபசகுணமான வார்த்தைகளை கேளாதிருக்க*
**மாலை மாற்றுதல்**
உள்ளத்தால் ஒன்றுபட மன மாற்றம் தேவை. அதை உணர்த்த மாலை..
**பத்து பொருத்தங்களைப் பார்த்து.**
ஒன்பது கோள்நிலைகளை அறிந்து. எட்டு திசையிலிருந்தும் உறவை அழைத்து, ஏழு அடி எடுத்து வைத்து. அறுசுவை உணவு படைத்து. பஞ்ச பூதங்கள் சாட்சியாக, நான்கு வேதங்கள் முழங்க. மூன்று முடிச்சுகளால், இரு மனங்கள் ஒன்று சேரும். _ஓர் அற்புத பந்தத்தின் உறவே. "திருமண உறவு"



# விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |

# ஜோக்ஸ்



"சார் உங்க பொண்ணு என் மேலே பைத்தியமா இருக்கா, அவளையே நான். . .
(அப்பா குறுக்கிட்டு)

"அவ ஒரு சரியான பைத்தியம்னா"


"அதான் சார் என் மேல பைத்தியம்"

"அதான் எப்படீன்னு புரியல"

--------------------

அம்மா : "ஏண்டீ டெய்லி வேற வேற பையன்களோட சுத்தரியே உனக்கு ஒரு கல்யாணம் நடக்க வேண்டாமா?"
மகள் : "ஒரு" கல்யாணம் நடக்காதும்மா.

--------------------



பெண் : "நான் நல்லாயிருக்கேன்னு பீட்டர் சொல்றான், ஆனா கோரமா இருக்கேன்னு ஜோசப் சொல்றான், நீ என்ன சொல்ற?"
ஆண் : "இரண்டுமா இருக்க. அதாவது 'நல்லகோரமா' இருக்க"

--------------------

பையன் : "நான் பெரிய பணக்காரன் கிடையாது, அல்லது என் நண்பன் பிரண்ட் கோபி மாதிரி என்கிட்ட பெரிய காரோ வீடோ கிடையாது, ஆனா நான் உன்ன லவ் பண்றேன்"

பெண் : "நானும்தான், ஆனா உங்க நண்பர் கோபின்னு யாரையோ சொன்னீயே 'அவர்' எங்க இருக்கார்?"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## கங்கையின் தவத்தில் மகிழ்ந்த பரமன்

பழங்காலத்திலே புட்கரம் என்ற நகரத்தில் தருமாகரன் என்ற ஒருவன் இருந்தான். அவன் கடுந்தவம் இயற்றினான். அதையறிந்த இந்திரன், தன்பதவிக்கு கேடு வரும் என்று பயந்து சூழ்ச்சி செய்தான்.

தேவலோக அரம்பையர் முதலியோராலும் இத்தருமா கரன்மனம் மாற மாட்டான் என்று துணிந்தான். பூவுலகத்தில் யவன நாட்டில் சதமாயை என்ற ஓர் பெண் பிரமன்பால் வரம் பெற்றதால் அழகு மிகப் படைத்தவளாய்த் திகழ்ந்தாள்.

அவளிடம் தான் இன்னொரென்று அறிவித்துத்தன் வேண்டுகோளை நிறைவேற்றுமாறு இந்திரன் வேண்டினான். அவளும் தருமாகரனிடம் வந்து அவனை மயக்கி அறிவிழக்கச் செய்து அவனைத்தன் வயப்படுத்தி நாட்கள் பல கழித்தாள்.

சதமாயையுடன் பல நாட்களை வீணாக கடத்தி விட்டமைக்காக வருந்திய தருமாகரன், திருந்தி தான்கற்ற கல்வித்திறத்தால், இறைவனை உள்ளத்தில் உறுதியாக பற்றித் திருநீறும் கண்டிகையும் பூண்டு சிவகீதை பாராயணம் செய்தான். அதனால் அவன் பாவம் அகலப் பெற்று உய்ந்தான்.



சிவகீதையிலுள்ள விபூதி அத்தியாயம், விசுவரூப அத்தியாயம், இரண்டுமே மிக உயர்ந்தவைகள். அவைகளால் தருமாகரன் உயர்ந்தது. அவனுடைய பாவங்களை அவ்விரு அத்யாயங்களே போக்கின. ஆதலால் அவை, அவன் பாவங்களையேற்று மாசடைந்தன. எனவே அவை, காசியை அடைந்து கங்கையில் மூழ்கித் தம் பாவங்களைப் போக்கிக் கொண்டன.

அந்தப் பாவங்கள் தன்னிடம் கழுவப்பெற்றதால் தூய்மையற்றவளாகிய கங்கை வருந்தி வாட்டமுற்று இருந்தாள். தேவரிஷி நாரதர், கங்கையின் வருத்தத்தைக்கேட்டறிந்து திருப்பாதிரிப்புலியூரின் மேன்மையையும், சிவகர தீர்த்தத்தின் சிறப்பையும் கூறினார். அவர் கூறிய வண்ணமே, கங்காதேவி, திருப்பாதிரிப்புலியூர் வந்து சிவகர தீர்த்தத்தில் நீராடித் தூய்மையுற்றுப் பாதிரியின் நிழலிலுள்ள இறைவனைப் பூஜித்துத் தவம் புரிந்தாள்.

கங்கையின் தவத்திற்காக மகிழ்ந்த பரமன், அவள்முன் தோன்றி, மாசி மாதத்தில் நடக்கும் பெருவிழாவினைத் தரிசித்து, மக நட்சத்திரமும், பவுர்ணமியும் சேர்ந்த நாளிலே சிவகர தீர்த்தத்திலும், பின்னர் கடலிலும் நடைபெறும்

தீர்த்த வாரியில் மூழ்கிப் பாவங்களை அகற்றிக்கொள்ளுமாறும், தன் கலைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கை சிவகரத் தீர்த்தத்தில் விட்டுச் செல்லுமாறும், அங்ஙனமே ஆண்டுதோறும் மாசி மாதம், மக நட்சத்திரமும் கூடிய பவுர்ணமி சேர்ந்து வரும் நாளில் என்றென்றும் நீராடி வருமாறும் பரமன் கங்கைக்கு அருளினார்.

கங்கையும் அவ்வாறே செய்து தனக்குற்ற மாசினை அகற்றிக் கொண்டு, இப்போதும் ஆண்டுதோறும் வந்து மூழ்கித்தன் கலைகளில் ஒரு கலையை விடுத்திச்செல்கிறாள்.

## மயிலம் முருகன் திருக்கோயில் சிறப்புகள்



மயிலம் கோவிலில் மலை ஏறும் படிக்கட்டுகள் செங்குத்தாக இல்லாமல், வயதானவர்களும் சிரமம் இல்லாமல் ஏறும் விதமாக அமைந்திருக்கிறது. இது சிறப்பானது ஆகும். இந்த கோவிலுக்கு பதினோரு தீர்த்தங்கள் இருப்பதாக ஐதீகம். இவற்றுள் ஒன்று அக்னி தீர்த்தம். இது மலைக்குத் தென்கிழக்கில் உள்ளது.

இதில் நீராடியோ, அல்லது இதன் நீரைத் தலையில் தெளித்து சுந்தர விநாயகரை வழிபட்டு மலையேறுவது வழக்கம். தைப்பூச விழாவின்போது பக்தர்கள் இந்தக் குளக்கரையில் இருந்துதான் காவடி எடுப்பார்கள்.

அப்போது பக்திப் பெருக்கோடு பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி என தோளில் விதவிதமான காவடிகளைச் சுமந்தபடி நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆடிப்பாடி மலையேறுவது கண்கொள்ளாக் காட்சி மலை உச்சியை அடைந்தால் ஒருபுறம் ராஜகோபுரம், இன்னொரு பக்கம் பெரிய மண்டபம் என கோவிலுக்குள் செல்ல 2 வழிகள் உள்ளன.

முருகனுக்குத் திருமணம் நடந்த தலம் மயிலம். அதனால் இந்தக் கோவிலில் திருமணம் செய்து கொள்வது விசேஷம் என்று கருதப்படுகிறது. இதை ஒரு வேண்டுதலாகவே செய்கிறார்கள். இதனால் முகூர்த்த நாட்களில் இங்குள்ள மண்டபத்தில் ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன.

## இந்துக் காவல் தெய்வங்கள்



மொத்தம் 3 தெய்வங்கள் ஒரு குடும்பத்துக்கு வரும். அதாவது ஊருக்குள் இருக்கும் மூல தெய்வம். அது பெருமாளாக இருக்கலாம், சிவனாக இருக்கலாம், அம்மனாக இருக்கலாம். அடுத்து குலதெய்வம். பிறகு காவல் தெய்வமாக ஒரு தெய்வம் - அது ஆண் தெய்வமாக இருக்கலாம் அல்லது பெண் தெய்வமாக இருக்கலாம்.

மொத்தத்தில் 18 ஆண் காவல் தெய்வங்களும் 18 பெண் காவல் தெய்வங்களும் இருக்கின்றனர். அய்யனார், மதுரை வீரன், காத்தவராயன், ஒண்டிக் கருப்பன், கருப்பண்ண சாமி, வீரனார், சங்கிலிக் கருப்பன், ஆகாய கருப்பன், ஆத்தடி கருப்பன், நொண்டிக் கருப்பன், மார்நாட்டு கருப்பன், மண்டக் கருப்பன், முன்னடிக் கருப்பன், சமயக் கருப்பன், பெரிய கருப்பன், சின்னக் கருப்பன் உள்ளிட்ட கருப்பசாமிகள் உள்ளனர்.

அதேபோல வீரமா காளி, குலுமாயி அம்மன், மகமாயி, எல்லைப் பிடாரி, பெரியாச்சி, எல்லை மாரி, பேச்சியம்மன், பூவாடைக்காரி, செல்லியம்மன், கன்னிமார், சீலைக்காரி, பச்சையம்மன், துலக்கானத்தம்மன், வனதுர்கை, செல்லாயி அம்மன், காட்டேரி அம்மன், அம்முச்சியார், மாசாணியம்மன் உள்ளிட்ட பெண் தெய்வங்கள் உள்ளனர். இந்தக் காவல் தெய்வங்கள் அந்தந்த பகுதிக்கு ஏற்ப வேறு வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

## 3 ஆயிரம் குலதெய்வ கோவில்கள்

பங்குனி உத்திரத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறப்பு வழிபாடு.

திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளில் பங்குனி உத்திரம் அன்று குல தெய்வ வழிபாடு செய்வது விசேஷமாக நடைபெறும். இதற்காக அன்று இந்தப் பகுதிகளில் உள்ளூர் விடுமுறை வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குல சாஸ்தா கோவில் இருக்கும், அந்தக் குடும்பத்திற்கென ஒரு குலதெய்வமும் இருக்கும். பெரும்பாலும் சாஸ்தா கோவில்கள் ஒவ்வொரு சாஸ்தா பெயரிலும் தனித் தனியாக இருக்கும்.

குல தெய்வங்கள் அந்த சாஸ்தா கோவில்களில் பரிவார தெய்வங்களாக வீற்றிருந்து அருள்பாலிக்கும்.

சில குடும்பங்களுக்கு எல்லை காவல் தெய்வங்கள் குல தெய்வமாக இருக்கும். சில குடும்பங்களுக்கு அந்த ஊரின் பிரதான தெய்வங்களான சிவன், முருகன், அம்பாள், விஷ்ணு போன்ற தெய்வங்கள் குல தெய்வங்களாக இருக்கும்.

பெரும்பாலும் இந்த சாஸ்தா கோவில்களும், குல தெய்வ கோவில்களும் ஊருக்கு வெளியே எல்லைப்பகுதியிலும், ஆற்றங்கரையிலும், குளத்தங்கரையிலும், மலை அடிவாரத்திலும், மலைமீதும், வனப்பகுதியிலும் என அமையப்பெற்றிருக்கும்.



பங்குனி உத்திரம் அன்று தவறாமல் இப்பகுதி வாழ் மக்கள் அனைவரும் இந்தக் குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்கிறார்கள்.

இந்த மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் பணிநிமித்தம் காரணமாக வெளியூர் சென்று குடியிருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறை பங்குனி உத்திரம் அன்று குல தெய்வ வழிபாடு செய்யத் தவறாமல் தங்கள் சொந்த ஊருக்கு வந்துவிடுகிறார்கள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாஸ்தா கோவில்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதோடு குல தெய்வங்கள் கோவிலையும் சேர்த்து கணக்கிட்டால் கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோவில்களுக்கு மேல் இருக்கும் என கூறப்படுகிறது.

## பாவங்களை நீக்கும் நேர்த்திக்கடன்

ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய காலத்தில் அந்தந்த தலைமையான ஊர்களை சார்ந்த எல்லைப்பகுதிக்குள் செல்வாக்கும் அதிகாரமும் சேர்ந்து விளங்கிய பெருந்தனக்குடியை சேர்ந்தவர்கள் அந்தந்த பகுதிகளில் வரிவசூல் செய்து தாலுகா தலைமை இடத்தில் சென்று செலுத்தும் அதிகாரம் வழங்கப்பெற்றிருந்தனர்.

கால வளர்ச்சியில் அவர்கள் மிட்டா மிராசுகளாக திகழ்ந்தனர். குன்னத்தூரை தலைமை இடமாக கொண்டு, சுற்றிலும் இரு எல்லைப் பகுதியில் வரிவசூல் செய்யும் அதிகாரம் பெருந்தனக்காரர் வீரசந்திர முதலியார் என்பவருக்கு, கோவை கலெக்டரான ஆங்கில அதிகாரியால் வழங்கப்பட்டிருந்தது.


இவர் இப்பகுதியில் செல்வாக்கும் ஆதிக்கமும் மிக்கவராக விளங்கினார். இவர் வரிவசூல் செய்து தலைமை இடமான பல்லடம் தாலுகா அலுவலகத்தில் செலுத்தி வந்தார். பல்லடம் அலுவலகம் செல்லும் போது குதிரை மீது ஏறி குதிரை வீரர்கள் புடைசூழ செல்வார்.

ஒரு முறை பல்லடம் சென்று மீண்டும் வரும்போது பெருமாநல்லூர் கொண்டத்துக்காளியம்மன் கோவில் அருகில் உள்ள ஆலமரத்தடியில் குதிரைகளை இளைப்பார விட்டு அவரும் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தார். அப்போது கொண்டத்துக்காளியம்மன் கோவில் திருவிழா நடைபெற்று கொண்டிருந்தது.

தாரை தப்பட்டை மேளவாத்தியங்கள் முழங்கின. இவ்வொலிகளால் வீரசந்திர முதலியாரின் குதிரைகள் பெரிதும் மிரண்டு, கயிற்றை அறுத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடின. இதனை கண்ட வீரசந்திர முதலியாருக்கு கோபம் உண்டாயிற்று.

உடனே வீரமக்களையும் மேளதாளம் முழங்குவோரையும் கடுமையாகக் கண்டித்து கொட்டு முழக்கத்தை நிறுத்த உத்தரவு இட்டார். கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் பெரிதும் அஞ்சினர்.

சிறிது நேரம் கழித்து வீரசந்திர முதலியார் குன்னத்தூரை நோக்கி புறப்பட்டார். பெருமாநல்லூர் எல்லையை தாண்டும் போது உடல் நலக்குறைவு ஏற்பட்டு உடல் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகி மிக துன்புற்றார். உடனிருந்த பிற அதிகாரிகள், “முதலியாருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதற்கு தெய்வக்குற்றமே காரணமாகும்.



குண்டம் இறங்க வந்த வீரமக்களையும், பக்தர்களையும், மேளக்காரர்களையும் கண்டித்து விரட்டியதால் காளியம்மன் கோபித்து இவ்வாறு தண்டித்தாள் போலும்” என்று பணிவுடன் கூறினர்.

இதனால் வீரசந்திர முதலியார் தன் குற்றத்தை உணர்ந்து வருந்தி இக்குற்றத்திற்கு 2 காளியம்மன் கோவிலுக்கு நேர்த்திக் கடன்கள் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.


முதலில் பக்தர்களை அச்சுறுத்தியதற்காகப் பெரிதும் வருந்தி, அப்பாவம் நீங்கவேண்டும் என்பதற்காகத் தன் உருவம் செதுக்கிய ஒருகல்லை கொண்டத்துக்காளியம்மன் கோவிலின் அர்த்த மண்டபத்தின் வாயிற் படியாக அமைக்கச் செய்தார்.

ஒவ்வொரு நாளும் அம்மனுக்கு ஆராதனை செய்யும் பூசாரிகள் தன் உருவம் அமைந்த கல்லை மிதித்து கொண்டு கருவறை சென்று பூஜைகள் செய்தால் தான் தான் செய்த பாவங்கள் நீங்கும் என்று நம்பி இவ்வாறு செய்தார்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் அம்மன் ஆலயத்துக்கு வந்து அபிஷேக ஆராதனைகளை நேர்த்திக்கடனாக செய்வதாக வேண்டிக்கொண்டார். இப்பொழுதும் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று அவர் வழிவந்தவர்கள் இந்நேர்த்தி கடனை தவறாது நிறைவேற்றுகின்றார்கள்.

வீரசந்திர முதலியார் வழிவந்தவர்கள் ‘குன்னத்தூரான் கூட்டம்’ என்று அழைக்கப்படுகின்றனர். இக்கூட்டத்தார் தற்போது அன்னூருக்கு அருகில் உள்ள குன்னத்தூரிலும், தேவராயம்பாளையத்திலும் வாழ்ந்து வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## பல்லவ உற்சவம்



காஞ்சி ஸ்ரீ வரதன் சன்னதி பல்லவ உற்சவம் நான்காம் நாள் காலை ஸ்ரீ ப்ரணதாத்ர்திஹரவரதர் ஸ்ரீ பெருமாள் 100 கால் மண்டபத்திற்க்கு எழுந்தருளுதல்.

## யானை வாகனம்



நேற்று மாலை நமது ஸ்ரீகேசவர் பிரம்மோற்சவ நாள்6 யானை வாகனம்

## சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி யில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.



திருவாடனை சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டனியில் காங்கிரஸ் வேட்பாளராக மீண்டும் போட்டியிடும் கரு மாணிக்கம் பனைக்குளம் இரு முஸ்லீம் ஜமாத் தலைவர்களிடம் ஆதரவு கேட்டார்.

# ரவுசு மணி

நேசித்தால்
தவறுகளை
பார்க்கமாட்டான்
வெறுத்தார்
நல்லதை
பார்க்க
மாட்டான்
இதுதான்
மனித
இயல்பு



ராஜகோபாலன்.J
பெங்களூரு

# "ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி" தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு

**சென்னை, ஏப்.10:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (09.04.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி ஜெ.குரு அவர்களின் மகள் குரு. விருதாம்பிகை மற்றும் திருமிகு. குரு.விருதாம்பிகை அவர்களின் கணவரும் - ஜெ.குரு அவர்களின் மருமகனுமான காடுவெட்டி மனோஜ், பொருளாளர் ஆர்.பாலமுருகன், இணைச் செயலாளர் குடியாத்தம் பிரேம்குமார் ஆகியோர் நேரில் சந்தித்து, "ஜெ. குரு பாட்டாளி மக்கள் கட்சி" நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் - தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.



அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

# சோழவந்தான் தொகுதியில் இறுதி வேட்பாளர் பட்டியல் : 14 பேர் போட்டி

**வாடிப்பட்டி, ஏப்.10:**

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி தேர்தலுக்கு நேற்று 9 ந்தேதி வேட்பு மனு தாக்கல் செய்தவர்கள்திரும்ப பெற அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால் மனு தாக்கல் செய்தவர்கள் யாரும் திரும்பப் பெற வரவில்லை. அதனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒதுக்கப்பட்ட சின்னங்கள் தவிர்த்து சுயேச்சை வேட்பாளர்களுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சண்முக வடிவேல் சின்னங்கள் ஒதுக்கினார்.

அதன் பின் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது அதன் விவரம் வருமாறு :-

வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் பெயர் விவரம் வருமாறு :-




1.நாம் தமிழர் -நாகலட்சுமி
2.அ.தி.மு.க. - மாணிக்கம்,
3.தி.மு.க. - வெங்கடேசன்,
4.த. வெ.க. - கருப்பையா
5. வாழ்வுரிமைக் கட்சி -தங்கப்பாண்டி,
6.புரட்சித்தலைவர் எம்ஜிஆர் மக்கள்முன்னேற்ற கழகம் -டாக்டர் க. பாலமுருகன்.
7.புதிய தமிழகம் - ரகு ,
8.ராமதாஸ் (சுயே)
9.அஜய் சுபாஷ். (சுயே)
10.கிருஷ்ணசாமி (சுயே)
11.குணசேகரன் (சுயே)
12. ச. பாலமுருகன் (சுயே)
13.ரா. பாலமுருகன் (சுயே)
14.ரஞ்சித்குமார் (சுயே)

ஆகியோர் போட்டியிடு கின்றனர்.

உடன் உதவி தேர்தல் அலுவலர் தாசில்தார் ராமச்சந்திரன், மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார், தேர்தல் தாசில்தார் கருப்பையா, வருவாய் ஆய்வாளர் ரகுபதி ஆகியோர் இருந்தனர்.

# வெகு விமரிசையாக நடந்த செய்யாறு இந்தோ - அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளி ஆண்டு விழா!




**செய்யாறு, ஏப். 10 :**

செய்யாறு இந்தோ-அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடந்தது. இப்பள்ளி உள்ள டாக்டர் ராமதாஸ் அப்பாய் அரங்கில் நடந்த விழாவிற்கு அறக்கட்டளையின் துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன் அப்பாய் தலைமை தாங்கினார்.

மெட்ரிக் பள்ளியின் முதல்வர் அ.ப.சையத் அப்துல் இலியாஸ் முன்னிலை வகித்தார். மாணவப் பிரிதிநிதி மு.அஸ்வின் கிருஷ்ணா வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக செய்யாறு வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் எ.சி.ஷர்மிளா, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

சி.பி.எஸ்.இ., பள்ளியின் முதல்வர் சுதா கார்த்திக், மெட்ரிக் பள்ளியின் துணை முதல்வர் க.கோவேந்தன், ஆசிரியர் பி. திவ்யா பரிசு பெற்ற மாணவர்களை வாழ்த்தி பேசினார். ஆசிரியர்கள் அகல்யா, சக்திவேல், லட்சுமி, கவிதா, ஜமுனா, சரண்யா, திவ்யலட்சுமி மற்றும் அனைத்து ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

நிகழ்ச்சியை வெ.நிவேதா தொகுத்து வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவப் பிரதிநிதி பால.காமாட்சி நன்றி கூறினார்.

# வந்தவாசி சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

**திருவண்ணாமலை,ஏப்10:**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜாகிர்உசேன் அவர்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. வந்தவாசி அஇஅதிமுக சட்டமன்ற வேட்பாளர் ராணி பெருமாள் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தல் பணிகளை குறித்தும் வெற்றி அடைவதற்கான வியுகங்கள் குறித்தும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. வந்தவாசி அஇஅதிமுக அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் டி. கே.பி .மணி, ஒன்றிய செயலாளர்கள் லோகேஸ்வரன், அர்ஜுனன், முனுசாமி, பச்சையப்பன், தனசேகரன், செல்வராஜ், நகர செயலாளர் பாஷா, பேரூராட்சி செயலாளர்கள் மூர்த்தி, பன்னீர்செல்வம் உட்பட அனைத்து நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை






## ஸ்ரீ செல்வகணபதி முதலாம் ஆண்டு வருஷாபிஷேகம்



**ஈரோடு ஏப்.10:**

ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் கன்னிமூல ஸ்ரீ செல்வகணபதி கும்பாபிஷேக முதலாம் ஆண்டு விழா காலை 5.30 மணிக்கு பவானி சென்று தீர்த்தம் எடுத்து வந்தனர். காலை 9 மணிக்கு கோமாதா பூஜை, கணபதி ஹோமம்,சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது . ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் வருஷாபிஷேகத்தில் கலந்து கொண்டு வாசவி அம்மனையும்ஸ்ரீ செல்வகணபதியையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. உபயதாரர்: ஆர்ய வைஸ்ய சபா ஸ்ரீவாசவி நித்தியா பூஜா கமிட்டி ஈரோடு.தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# காட்பாடி சட்டமன்றத் தொகுதியின் திமுக வேட்பாளர் துரைமுருகன் கோரந்தாங்கல் கிராமத்தில் வாக்கு சேகரிப்பு!



**வேலூர், ஏப். 10:**

திமுக பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சரும் , காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளருமான துரைமுருகன் கோரந் தாங்கல் கிராமத்திற்கு வருகை தந்து வாக்குகளை சேகரித்தார். திமுக வேட்பாளர் துரைமுருகனுக்கு முன் னாள் காட்பாடி யூனியன் கவுன்சிலர், முன்னாள் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் கோரந்தாங்கல் ஏ. .குமார், துரைமுருகனுக்கு ஆளுயர சாக்லெட் மாலை அணிவித்து வரவேற்றார். அவருடன் கிளைக் கழக செயலாளர்கள் ஜி.மணி, எம். வேலு, என்.கபில்தேவ், என்.குமரன், எம். ராதாகிருஷ்ணன், எம். சிவஞானம், ஏ. ஏகாம்பரம், சுப்பிரமணி, சிவக்குமார், இ. ஏழுமலை, வி. யுவராஜ், எம்.ராஜாமணி, ஏ. சண்முகம், ஜி. அண்ணாமலை,குபேந்திரன், என். சுசீலா மற்றும் திமுகவினர், ஊர் பொதுமக்கள் திரளாக வந்து உதய சூரியனுக்கு வாக்குகளை சேகரித்தனர். கோரந்தாங்கல் கிராமம் விழாக்கோலம் பூண்டது குறிப்பிடத்தக்கது

# தன்முனைக்கவிக்கோ விருது



தமிழ் இலக்கியத்தில் தடம் பதித்துள்ள முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களின் இலங்கைப்பயணத்தில் யாழ்பாணத்து தன்முனைக் கவிஞர்களுக்கு தன்முனைக்கவிக்கோ விருதுகளை அளித்தார். கவிஞர்கள் மா.ஞானசம்பந்தன், யாழிசை தடாகம் நிறுவனர் உடுவிலூர் கலா, தயாளனி சிவநாதன் சிவநாதன் ஆகியோருக்கு தன்முனைக் கவிக்கோ விருதுகள் ஜாப்னா டில்கோ விடுதியில் அளிக்கப்பட்டன. விழாவில் கவிஞர்கள் யாழ்பாவாணன் மற்றும் ஈழத்துக் கவிஞர்கள் பலர் கலந்துகொண்டனர். தன்முனை கவிதைகளின் பிதாமகனார் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் இலங்கைக் கவிஞர்கள் பெருமளவில் அமெரிக்க முத்தமிழ்ப்பல்கலை கழகத்தில் தன்முனை பட்டயப்படிப்பு படித்து பட்டயம் பெற்றுள்ளது தன்முனைக்கவிதைகள் குழுமத்திற்கு பெருமை எனக்கூறி யாழ்ப்பாணக் கவிஞர்களுக்கு புகழாம் சூட்டினார்.




**திருவண்ணாமலை ஏப்.10:**

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொது பார்வையாளராக நியமிக்கப்பட்ட திரு. அபிஷேக் கிருஷ்ணா இ. ஆ.ப. அவர்கள் (செங்கம், கலசப்பாக்கம்) திரு. ரவிக்குமார் சர்பூர் இ. ஆ. ப. அவர்கள், (திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர்) திரு சதேந்திர சிங் இ. ஆ.ப. அவர்கள், (போளூர், ஆரணி) திரு ராமகிருஷ்ணா சித்தூரி இ. ஆ. ப. அவர்கள், (செய்யார், வந்தவாசி) ஆகியோர் தலைமையில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் முன்னிலையில் தேர்தலில் ஈடுபடுத்தப்படவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களை கணினி மூலம் இரண்டாம் சமய வாய்ப்புக்குட் படுத்துதல்(second Randomization) பணி நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சூர்ணாபிஷேகம்



திருநின்றவூர் ஸ்ரீமத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் - விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 ஆறாம் திருநாள் காலை சூர்ணாபிஷேகம் வேணுகோபாலன் திருக்கோலம்

## பல்லவ உற்சவம்



காஞ்சி ஸ்ரீ வரதன் - அவதார கட்டம் பல்லவ உற்சவம் மூன்றாம் நாள் புராண படணம்.

## திருநாங்கூர் திவ்ய தேசம்



ஸ்ரீ புருசோத்தம நாயகி சமேத ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் ப்ரம்மோற்சவம் ஐந்தாம் நாள் மாலை ஹம்சா வாகனம் திருவீதி புறப்பாடு.

# முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் இட்டை இலைக்கு வாக்கு சேரிப்பு



**விழுப்புரம், ஏப்.10:**

மயிலம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் இட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்து சூறாவளி சுற்றுப் பயணம் செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதியின் தேசிய ஜனநாயக் கூட்டணி கட்சி அதிமுக வேட்பாளர் சிவி.சண்முகம் எம். பி வல்லம் வடக்கு ஒன்றியம் வீரணாமூர், மேல் களவாய், நெகனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இரட்டை இலை சின்னத்திற்கு. வாக்கு சேகரித்தார் அதனைத் தொடர்ந்து வாக்கு சேகரிக்கும் கிராமங்களில் விவசாயிகள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்து நீங்கள்தான் வெற்றிப் பெற்று எங்கள் தொகுதியிக்கு அமைச்சராக வரவேண்டும் என்றும் பொதுமக்கள் கூறுவது கழக தொண்டர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பெருத்த உற்சாகத்தை அளிப்பதாக கூறுகின்றனர் உடன் வல்லம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விநாயகமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள்.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

# சுற்றுலா: கோடை விடுமுறையில் செல்ல வேண்டிய இடங்கள்!

மிக ரம்மியமான மலை வாசஸ்தலங்கள் தமிழ்நாட்டின் தனித்துவமான வசீகரம் . கோடை விடுமுறை நெருங்கி வருவதாலும், வெப்பம் அதிகமாகி வருவதாலும், இதமான வானிலை, இயற்கைப் பசுமை, தூய மற்றும் புதிய மலைக் காற்று மற்றும் ஏராளமான இயற்கை அழகு ஆகியவற்றைக் கொண்ட இந்த மயக்கும் மலைவாசஸ்தலங்கள் கோடை வெயிலில் இருந்து விடுபட்டு, புத்துணர்ச்சியூட்டும் விடுமுறைக்கு சரியான தேர்வாக அமைகின்றன. இயற்கை அன்னையின் அரவணைப்பில் ஒரு மறக்கமுடியாத விடுமுறையைக் கழிப்பதற்கும், ஓய்வெடுக்கவும், தமிழ்நாட்டின் பல அழகான மலைவாசஸ்தலங்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்போமா?



1. 1.வால்பாறை

தமிழ்நாட்டின் மிகவும் அமைதியான மற்றும் கண்கவர் மலைவாசஸ்தலமான வால்பாறை, பசுமைமாறா காடுகளால் சூழப்பட்டது அதன் அழகிய தேநீர் மற்றும் காபி தோட்டங்கள், ஓய்வெடுக்கும் குளிர்ந்த காலநிலை, மாசுபடாத காற்று மற்றும் முடிவில்லாத மலையேற்றங்கள், காட்டுப் பாதைகள் ஆகியவற்றால் பார்வையாளர்களை மகிழ்விக்கிறது.

2. 2.கொல்லிமலை

அழகிய கொல்லிமலை அதன் இயற்கைஅழகுடன்,இதுவரைசுற்றுலா பயணிகளால் கைப்பற்றப்படாத, ஆராயப்படாத, கறைபடாத மற்றும் மாசுபடாத மலைவாசஸ்தலமாகும். உள்ளூர்வாசிகளுக்கு மத்தியில் தமிழ்நாட்டின்நாமக்கல்மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையானது “மரண மலை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



3. 3.கொடைக்கானல்

கொடைக்கானல் முழுமையான புத்துணர்ச்சியூட்டும் ஒரு அற்புதமான இடமாகும். கோடைவெப்பத்தைத் தணிக்க கண்டிப்பாக பார்க்க வேண்டிய மலைவாசஸ்தலம். இந்த அழகிய மலைவாசஸ்தலம் பச்சை நிற சரிவுகளின் வசீகரிக்கும் கம்பளம், மூடுபனி மலை உச்சிகள், மாய பள்ளத்தாக்குகள் மற்றும் உருளும் மேய்ச்சல் நிலங்கள் நிறைந்த அழகிய நிலப்பரப்பால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

4. 4.பொள்ளாச்சி டாப் ஸ்லிப்

தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கும் பொள்ளாச்சியில் உள்ள டாப் ஸ்லிப் தமிழ்நாட்டின் மற்றொரு அழகிய மலைவாசஸ்தலமாகும். இது மயக்கும் இயற்கை அழகு மற்றும் ஓய்வெடுக்க அமைதியான சூழலை வழங்குகிறது. அற்புதமான வனவிலங்குகள்நிறைந்தபசுமையான மழைக்காடுகள், மலைகள் வழியாக சலசலக்கும் நதி நீரோடைகள் மற்றும் அழகிய பள்ளத்தாக்குகள் கொண்ட இந்த இடம் மிகவும் வளமானது. இந்த இடத்தின் அமைதி நம்மை வருடி மகிழ்விக்கும்.

5. 5.ஊட்டி

நீலகிரியில் உள்ள ஊட்டி தமிழ்நாட்டின் மனதைக் கவரும் மலைவாசஸ்தலங்களில் ஒன்றாகும் , இது கண்களுக்கு கவர்ச்சியானது, மனதிற்கு புத்துணர்ச்சி மற்றும் ஆன்மாவிற்கு ஊக்கமளிக்கிறது. பசுமையான பள்ளத்தாக்குகள், உயரமான மலைகள், அழகான தேயிலை தோட்டங்கள், பரந்த நிலப்பரப்புகள் மற்றும் அழகிய இடங்கள் ஆகியவற்றின் அற்புதமான இருப்பிடம் ஊட்டி. குறிப்பாக கோடைக்காலத்தில் சுத்த, ஆனந்தமாக இருக்கும். இயற்கையின் கலப்படமற்ற அழகை நீங்கள் அனுபவிக்கக்கூடிய தூய்மையானமற்றும்மிகவும்அழகிய மலைவாசஸ்தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் புதிதாக கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பதவி தோற்றுவிப்பு



சென்னை: அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் புதிதாக கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பதவி தோற்றுவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய பதவிக்கான சிறப்பு கல்வித் தகுதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் உள்துறை செயலர் தீரஜ்குமார் வெளியிட்டுள்ள அரசாணையின் விவரம்: மாவட்ட நீதிமன்றங்களில் கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பதவி புதிதாக தோற்றுவிக்கப்படுகிறது. இந்த பதவி நேரடி நியமன முறை வாயிலாகவும், பணிமாற்றல் முறையிலும் நிரப்பப்படும்.

மாவட்ட முதன்மை நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி பணிநியமன அதிகாரியாக இருப்பார். தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணியில் சேர்க்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பதவிக்கான நேரடி நியமனத்துக்கு கல்வித் தகுதி பிஎஸ்சி கம்ப்யூட்டர் அல்லது பிசிஏ பட்டப்படிப்பு ஆகும். மேலும் கம்ப்யூட்டர் பயன்பாட்டில் டிப்ளமா பெற்றுள்ள பிஏ, பிஎஸ்சி, பிகாம் பட்டதாரிகளும் இதற்கு தகுதியுடையவர் ஆவர். அடிப்படை கல்வித் தகுதியான பட்டப்படிப்புடன் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டியது அவசியம் என்று அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பதவிக்கு அடிப்படை சம்பளம் ரூ.20,600 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த பதவியானது டிஎன்பிஎஸ்சி குரூப்-2 ஏ தேர்வு மூலம் நிரப்பப்படும். டிஎன்பிஎஸ்சியின் 2026 வருடாந்திர தேர்வு கால அட்டணைவியின்படி, ஒருங்கிணைந்த குரூப்-2 மற்றும் குரூப்-2 ஏ முதல்நிலைத்தேர்வுக்கான அறிவிப்பு வரும் ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டு தேர்வு அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்காசி: பனை தொழிலாளி மீது துப்பாக்கி சூடு நடத்திய எஸ்.ஐ. இசக்கி ராஜா சஸ்பெண்டு

**தென்காசி, ஏப். 10:**

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே மருதம்புத்தூர் பகுதியை சேர்ந்த பனை தொழிலாளி மணிகண்டன். இவர் பனை மரத்தில் இருந்து கள் இறக்கி விற்பனை செய்வதாக கூறி நேற்று சப் இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் பனை தொழிலாளியைசப்இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

வாக்குவாதத்தின்போதுபனை தொழிலாளி தாக்க முற்பட்டதால் தற்காப்புக்காக துப்பாக்கி யால் சுட்டதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இந்த துப்பாக்கி சூட்டில் காயமடைந்த பனை தொழிலாளி தென்காசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும், பனை தொழிலாளி தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக எஸ்ஐ இசக்கி ராஜாவும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, பனை தொழிலாளியை சாதி பெயரை கூறி எஸ்ஐ இசக்கி ராஜா அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதையடுத்து, எஸ்ஐ இசக்கி ராஜா மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆலங்குளம் பொதுமக்கள் நேற்று முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, பனை தொழிலாளி தரப்பில் அளித்த புகாரின் அடிப்படையில் எஸ்ஐ இசக்கி ராஜா உள்பட 3 போலீசார் ஆலங்குளம் போலீசில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பனை தொழிலாளி மீது துப்பாக்கி சூடு நடத்திய போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தொடர் போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் இசக்கி ராஜாவை சஸ்பெண்டு நெல்லை சரக டிஐஜி நடவடிக்கை எடுத்துள்ளார்.

## தேர்தல் ஆணையம் அதிகார வரம்பை மீறி செயல்படுகிறது: ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.10:**



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக இருந்த முருகானந்தம் மாற்றப்பட்டு, சாய்குமாரை தேர்தல் ஆணையம் நியமனம் செய்துள்ளது. அதேபோல் தமிழக அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை டிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதம் மாற்றப்பட்டு, அந்த இடத்தில் சந்தீப் மிட்டல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தேர்தல் ஆணையத்தின் அதிரடி நடவடிக்கைக்கு ஆளும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் கடும் கண்டனத்தை பதிவு செய்து வருகின்றன.

அந்த வகையில், காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் கூறியதாவது: தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தத்தை தேர்தல் ஆணையம் பணிமாற்றம் செய்திருப்பது அதிகார வரம்பை மீறிய செயல். தேர்தல் ஆணையத்தின் செயல் கடும் கண்டனத்திற்குரிய செயல்தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்திற்கு வரம்பிருக்கிறது. தன்னிச்சையான (arbitrary) நியாயமற்ற (unfair) செயல் அதிகார வரம்பை மீறிய செயல்தேர்தல் ஆணையத்திற்கு மேல் மக்கள் இருக்கிறார்கள், அந்த மக்கள் கைகளில் வாக்கு என்ற சக்தி இருக்கிறது என்பதைத் தேர்தல் ஆணையத்திற்கு நினைவு படுத்த வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களுக்கு உள்ளது” என்று கூறியுள்ளார்.

## எங்களை சீண்டும் வேலையை தவெக தலைவர் விஜய் உடனடியாக நிறுத்த வேண்டும்; காங்கிரஸ்

**சென்னை, ஏப்.10:**

தமிழக காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில், தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கான பரப்புரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், இன்று நடிகர் விஜய் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துகள் முற்றிலும் ஆதாரமற்றவை, தவறானவை மற்றும் அரசியல் உள்நோக்கத்துடன் திரித்துக் கூறப்பட்டவை என்பதை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கம் என்பது நூற்றாண்டு பாரம்பரியமும், இந்திய சுதந்திரத்திற்காக தியாக வரலாறும் கொண்ட ஒரு ஜனநாயக இயக்கமாகும். இந்தக் கட்சியை பணம் அல்லது அதிகாரத்தின் மூலம் யாராலும் ‘கட்டுப்படுத்த” முடியாது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி, அதன் கொள்கைகளுக்கும், மக்களின் நலன்களுக்கும் ஏற்ப செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி வைப்பதற்கு த.வெ.க. எத்தகைய திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டது என்பதை அனைவரும் அறிவார்கள். காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை, நடிகர் விஜய்க்கு என்ன கொள்கை என்று புரியாத நிலையில் அந்த முயற்சிகள் தொடக்கத்திலேயே நிராகரிக்கப்பட்டன. தி.மு.க.வை அரசியல் எதிரியாகவும், பா.ஜ.க.வை கொள்கை எதிரியாகவும் அறிவித்த நடிகர் விஜய், கரூர் சம்பவத்திற்கு பிறகு கொள்கை எதிரி என்று அறிவிக்கப்பட்ட பா.ஜ.க.வை எதிர்த்து எந்தவித கருத்தும் கூற துணிவற்ற நிலையில் இருந்தார்.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை தி.மு.க.வோடு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு கொள்கை கூட்டணியாக செயல்பட்டு வருகிறது. 2019, 2021, 2024 ஆகிய அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்று வருகிறது. இந்நிலையில், த.வெ.க.வோடு எந்த வகையிலும் கூட்டணி வைப்பதற்கான வாய்ப்புகளே இல்லை. ஆனால், காங்கிரசில் ஆள்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட த.வெ.க. விற்கு விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர் தான் சிக்கினார்கள். ஒட்டுமொத்த காங்கிரஸ் கட்சியும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தீவிரமாக பணியாற்றி வருகிறது. இந்நிலையில், உண்மையான காங்கிரஸ் கட்சியினர் த.வெ.க.வுடன் இருப்பதாக கூறுவதை விட ஒரு அப்பட்டமான பொய் வேறு எதுவும் இருக்க முடியாது. இது அரசியல் உள்நோக்கம் கொண்ட விஷமத்தனமான, ஆதாரமற்ற அவதூறு குற்றச்சாட்டு. எனவே, காங்கிரஸ் கட்சியை சீண்டிப் பார்க்கின்ற வேலையை த.வெ.க. தலைவர் விஜய் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கூட்டணி, மதச்சார்பின்மை, சமூக நீதி மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்து வருகிறது. ஆனால், பொதுமக்களை தவறாக வழிநடத்தும் விதமாக த.வெ.க. தலைவர் விஜய் அவதூறு கருத்துகளை வெளியிடுவது பொறுப்பற்ற செயலாகும். காங்கிரஸ் கட்சியினரிடமும், பொதுமக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என காங்கிரஸ் கட்சி சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலைப்பாதையில் கேட்ட பயங்கர சத்தம்: உலா வந்த ஒற்றை யானையால் பொதுமக்கள் அச்சம்

**பழனி, ஏப். 9:**

பழனி அருகே மலையடிவாரத்தில் உள்ள அண்ணாநகர், தேக்கந்தோட்டம், புளியமரத்துசெட் பகுதியில் கடந்த சில நாட்களாக ஒற்றையானை வனத்தில் இருந்து வெளியேறி மலைப்பாதையில் உலா வருகிறது.

அவ்வாறு வரும்போது சாலையின் நடுவில் நின்று வாகனங்களை மறித்துவிடுகிறது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்துள்ளனர். இதற்கிடையில் மலைப்பாதையில் உலாவந்த ஒற்றையானை அண்ணாநகர் பகுதியில் உள்ள ஒரு மளிகைகடையின் கதவை சேதப்படுத்துகிறது. பின்பு சிறிதுநேரம் அங்கேயே நின்று அதன்பிறகு சென்றுவிடுகிறது. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

எனவே மலைப்பாதையில் உலா வரும் காட்டுயானையை வனப்பகுதிக்குள் விரட்ட வேண்டும். அதற்கான தண்ணீர், இரை வசதியை செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் அவை வனத்தில் இருந்து வருவது தடுக்கப்படும். இதற்கு சம்பந்தப் பட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சென்னை எழும்பூர்-மங்களூரு இடையே சிறப்பு ரெயில் - தெற்கு ரெயில்வே அறிவிப்பு

**சென்னை, ஏப்.10:**

பயணிகளின் வசதிக்காக மங்களூருவில் இருந்து எழும்பூருக்கு சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. இது தொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

“மங்களூருவில் இருந்து வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு எழும்பூருக்கு சிறப்பு ரெயில் (வண்டி எண்-06128) இயக்கப்படுகிறது. அதே போல, எழும்பூரில் இருந்து நாளை (வெள்ளிக்கிழமை) மதியம் 2.30 மணிக்கு மங்களூருவிற்கு சிறப்பு ரெயில் (06153) இயக்கப்படுகிறது. மங்களூருவில் இருந்து வருகிற 15-ந் தேதி மாலை 4 மணிக்கு எழும்பூருக்கு சிறப்பு ரெயில் (06154) இயக்கப்படுகிறது.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்ப்புத்தாண்டையொட்டி கோவையில் இருந்து 100 சிறப்பு பஸ்கள் இயக்கம்

**கோவை, ஏப்.10:**

தமிழ்ப்புத்தாண்டு தினமான வருகிற 14-ந்தேதி செவ்வாய்க்கிழமை, விடுமுறை நாள் என்பதால் , கோவையில் இருந்து வெளியூர்களுக்கு 100 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, தேனி, நாகர்கோவில் உள்பட பல பகுதிகளுக்கு கோவையில் இருந்து இந்த பஸ்கள் 10-ந்தேதி இரவு முதல் இயக்கப்படுவதாகவும், விடுமுறை முடிந்து வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு வசதியாகவும் பஸ்கள் இயக்கப்பட இருப்பதாகவும் அரசு பஸ் போக்குவரத்து கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# விஜய்யை பின்தொடர்ந்து சென்ற வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் 16 பேர் காயம்: வாகைகுளம், வண்ணார்பேட்டை உட்பட 4 இடங்களில் விபத்து

**தூத்துக்குடி, ஏப்.10:**

தூத்துக்குடி, திருநெல்வேலியில் தவெக தலைவர் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானதில் 16 பேர் காயமடைந்தனர்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் போட்டியிடும் தனது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய, தவெக தலைவர் விஜய் நேற்று சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையத்துக்கு வந்தார்.

காலை 11.45 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்த அவருக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர், பிரச்சார வேனில் ஏறி திருநெல்வேலி நோக்கி விஜய் புறப்பட்டார். அவரது



வேனை மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்து சென்ற இளைஞர்களை போலீஸார் ஆங்காங்கே தடுத்து நிறுத்தினர். வாகைகுளம் சந்திப்பு பகுதியில் சென்றபோது, அங்கு திரண்டிருந்த தொண்டர்கள் விஜய்க்கு வரவேற்பு கொடுத்தனர்.

பின்னர் மீண்டும், திருநெல்வேலி நோக்கி புறப்பட்டபோது, வாகைகுளம் பகுதியில் இருந்து தொண்டர்கள் மோட்டார் சைக்கிள்களில் விஜய் சென்ற பிரச்சார வேனை பின்தொடர்ந்து சென்றனர். ஒருவரையொருவர் முந்திச் செல்ல முயன்றபோது, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து ஏற்பட்டது.

கீழே விழுந்த மோட்டார் சைக்கிள் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 7 பேர் லேசான காயமடைந்தனர். திருநெல்வேலி பாளையங்கோட்டை கேடிசி நகரில் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடை அருகே விஜய்யின் வாகனம் திரும்பியபோது கட்சி தொண்டர்கள், தடுப்புகளை மீறி வாகனத்தின் பின்னால் ஓடினர். அப்போது, காவல் துறையினர் சாலையில் தடுப்புகளை வைத்து மறித்தபோது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்த கூட்டத்தில் ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் மாட்டிக்கொண்டு வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை பகுதியில் விஜய் பிரச்சாரம் செய்தபோது, சாலையின் இரு புறமும் மக்கள் கூட்டம் அலைமோதியது. அப்போது, சாலையை கடக்க முயன்ற பெட்ரோல் நிலைய ஊழியர் ஒருவர் மீது எதிர்பாராத விதமாக அரசு பேருந்து மோதியது. இதில் அவரது தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனே அங்கிருந்த இன்ஸ்பெக்டர் கோகிலா அவரை மீட்டு தனது சொந்த வாகனத்தில் ஏற்றி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். விஜய்யின் வேனை பின்தொடர்ந்த இருசக்கர வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் பொட்டல் பகுதியில் 6 பேர் காயமடைந்தனர். நாரணம்மாள் புரத்தில் 2 பேர் காயமடைந்தனர். இதன்படி மொத்தம் 16 பேர் காயமடைந்தனர்.

# க்ரைம் கார்னர்

## யூடியூபர் சவுக்கு சங்கர் மீண்டும் கைது

**சென்னை, ஏப்.10:**

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர் மோசடி வழக்குகளில் மீண்டும் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார். இருப்பினும், அவரது தாயார் தொடர்ந்த வழக்கில் அவருக்கு மருத்துவ காரணங்களுக்கு நிபந்தனை ஜாமீனை வழங்கப்பட்டது. அத்துடன், வழக்கு தொடர்பாக பேட்டி அளிக்கக் கூடாது எனவும், வழக்கில் தொடர்புடைய நபர்களை சந்திக்கக் கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது. எனினும் சவுக்கு சங்கர் ஜாமீன் நிபந்தனைகளை மீறுவதாக போலீஸ் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. இதற்கிடையே, அவரது இடைக்கால ஜாமீன் முடிந்த நிலையில், சவுக்கு சங்கர் சரண் அடைய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால், சவுக்கு சங்கர் தலைமறைவு ஆனதோடு தொடர்ந்து வீடியோக்களை பதிவிட்டு வந்தார். அவரை போலீசார் தீவிரமாக தேடி வந்த நிலையில், ஆந்திராவில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையை மதிக்காமல் முடிந்தால் கைது செய்யுங்கள் என போலீஸுக்கு சவால் விட்டதாக சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டார் ஆந்திராவில் உள்ள ஒரு விடுதியில் வைத்து சென்னை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். தற்போது அவரைப் போலீசார் சென்னைக்கு அழைத்து வந்து கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ரெயில் நிலையங்களில் ஒரே நாளில் 36 கிலோ கஞ்சா பறிமுதல்

**சென்னை, ஏப்.10:**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ரெயில்வே பாதுகாப்புப் படையினர் நேற்று தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஒடிசா மாநிலம் புவனேஸ்வரிலிருந்து சென்னை வழியாக புதுச்சேரி நோக்கி சென்ற விரைவு ரெயில் எழும்பூர் வந்தடைந்தது.

அந்த ரெயிலில் ஆர்.பி.எப். குழுவினர் ஏறி சோதனை நடத்தினார்கள். ரெயிலின் 3-ம் வகுப்பு ஏ.சி. பெட்டியில் சோதனையிட்டபோது அங்கு கேட்பாரற்று கிடந்த பையில் 31 கிலோ கஞ்சா பொட்டலங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு சுமார் ரூ.16 லட்சம் இருக்கும் என போலீசார் தெரிவித்தனர். பின்னர் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு இன்ஸ்பெக்டர் ராமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதை போன்று சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் குற்றப்பிரிவு போலீசார் நடத்திய சோதனையில் புருலியா எக்ஸ்பிரஸ் ரெயிலின் பொதுப் பெட்டியில் கேட்பாரற்று இருந்த பையில் 5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.2.5 லட்சம் ஆகும். பின்னர் கஞ்சா திருவல்லிக்கேணி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## வருமான வரி மோசடி: தொழில் அதிபருக்கு ரூ.24.80 கோடி அபராதம்; 2 ஆண்டு சிறை

**கோவை, ஏப்.10:**

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் பகுதியை சேர்ந்தவர் பயாஸ்அகமது, தொழில் அதிபர். இவர் கடந்த 2015-16-ம் ஆண்டு வருமான வரியாக ரூ.24 கோடியே 80 லட்சத்தை செலுத்த வேண்டியது இருந்துள்ளது. ஆனால் ரூ.2 லட்சத்தை மட்டும் செலுத்திவிட்டு முறைகேடாக பல்வேறு ஆவணங்களை தாக்கல் செய்து மீதி தொகையை பயாஸ்அகமது செலுத்தவில்லை.

இதுதொடர்பாக வருமானவரித்துறை அதிகாரிகள் அளித்த புகாரின்பேரில், சி.பி.ஐ. அதிகாரிகள் பயாஸ்அகமது மீது கடந்த 2019-ம் ஆண்டு வழக்குப்பதிவு செய்தனர். மேலும் அவரது வங்கி கணக்கும் முடக்கி வைக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணை கோவை சி.பி.ஐ. வழக்குகளை விசாரிக்கும், தலைமை குற்றவியல் கோர்ட்டில் நடந்து வந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி சிவக்குமார், குற்றம் சாட்டப்பட்ட பயாஸ்அகமதுவுக்கு, அவர் வருமானவரித்துறையிடம் மோசடி செய்த தொகையையே அபராதமாக விதித்தார். மொத்தம் ரூ.24 கோடியே 80 லட்சம் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், 2 ஆண்டு சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பு கூறினார்.

# விளையாட்டு செய்திகள்

## ஆயுஷ் ஷெட்டி அபாரம்; சிந்து முன்னேற்றம்

**பெய்ஜிங், ஏப்.10:**

சீனாவில் நடைபெறும் ஆசிய பாட்மின்டன் சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, பி.வி.சிந்து ஆகியோர் 2-ஆவது சுற்றுக்கு புதன்கிழமை முன்னேறினர். ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில், உலகின் 25-ஆம் நிலையில் இருக்கும் ஆயுஷ் ஷெட்டி 21-13, 21-16 என்ற கேம்களில், உலகின் 7-ஆம் நிலையில் இருக்கும் சீனாவின் லி ஷி ஃபெங்கை வீழ்த்தி அசத்தினார். இந்த ஆட்டம் 51 நிமிஷங்களில் நிறைவடைந்தது. ஹெச்.எஸ். பிரணய் 24-22, 21-12 என்ற கணக்கில், வியத்நாமின் குயென் ஹாய் டாங்கை 47 நிமிஷங்களில் வென்றார். எனினும் லக்ஷயா சென் 12-21, 19-21 என்ற நேர் கேம்களில், ஹாங்காங்கின் லீ செயுக் யுவிடம் தோல்வியுற்றார். அதேபோல், கே.ஸ்ரீகாந்த் 21-18, 9-21, 11-21 என்ற வகையில், சிங்கப்பூரின் லோ கீன் யுவிடம் தோல்வி கண்டார்.

சிந்து வெற்றி: இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், பி.வி.சிந்து 15-21, 21-11, 21-19 என்ற கேம்களில், மலேசியாவின் வாங் லிங் சிங்கை போராடி வீழ்த்தினார். இந்த ஆட்டம் 1 மணிநேரம், 7 நிமிஷங்கள் நீடித்தது.

இதர ஆட்டங்களில், தன்வி சர்மா 19-21, 14-21 என்ற கணக்கில், மலேசியாவின் லெட்சனா கருப்பதேவனிடமும், மாளவிகா பன்சோத் 10-21, 19-21 என தாய்லாந்தின் புசானன் ஆங்பம்ரங்பானிடமும் தோல்வியுற்றனர்.

மகளிர் இரட்டையர்: முதல் சுற்றில் இந்தியாவின் ஸ்ருதி மிஸ்ரா/பிரியா கொன்ஜெங்பம் கூட்டணி 21-15, 17-21, 21-13 என்ற கேம்களில், வியத்நாமின் தி டியு லி பாம்/தி கான் பாம் இணையை வீழ்த்தியது.

எனினும் அஸ்வினி பாட்/ஷிகா கௌதம் ஜோடி 10-21, 10-21 என்ற நேர் கேம்களில், தாய்லாந்தின் நபாபகோன் துங்கசடான்/ஹதாய்திப் மிஜாத் கூட்டணியிடம் தோற்றது.

## இணை முன்னிலையில் திவ்யா, வைஷாலி- பிரக்ஞானந்தாவுக்கு பின்னடைவு

கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியின் 8-ஆவது சுற்றில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் வெற்றி பெற, ஆர். வைஷாலி டிரா செய்தார். அவர்கள் இருவர் உள்பட 5 பேர் இணை முன்னிலையில் உள்ளனர்.

சைப்ரஸில் நடைபெறும் இந்தப் போட்டியின் மகளிர் பிரிவு 8-ஆவது சுற்றில், நடப்பு உலகக் கோப்பை சாம்பியனான திவ்யா - உக்ரைனின் அனா முஸிஷுக்கை வீழ்த்தினார். கருப்பு நிற காய்களுடன் விளையாடிய அவர், 83-ஆவது நகர்த்தலில் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஒரு கட்டத்தில் டிராவுக்கு தான் வாய்ப்பு என்றிருந்த நிலையை, தலைகீழாக மாற்றி அவர் அபாரமாக வென்றார். களத்திலிருக்கும் மற்றொரு இந்தியரான வைஷாலி, கஜகஸ்தானின் பிபிசரா அசௌபயேவாவுடன் டிரா செய்தார். அவர் கருப்பு நிற காய்களுடன் மோதிய நிலையில், 74-ஆவது நகர்த்தலுடன் இருவரும் டிரா செய்ய ஒப்புக் கொண்டனர். ரஷியாவின் கேத்தரினா லாக்னோ - சக ரஷியரான அலெக்ஸாண்ட்ரா கோரியச்கினாவை வெல்ல, சீனாவின் ஜு ஜினெர் - சக சீன போட்டியாளரான டான் ஜோங்யியை வீழ்த்தினார். 8 சுற்றுகள் முடிவில், ஜினெர், முஸிஷுக், லாக்னோ, திவ்யா, வைஷாலி ஆகியோர் தலா 4.5 புள்ளிகளுடன் இணை முன்னிலையில் உள்ளனர். கோரியச்கினா, அசௌபயேவா ஆகியோர் தலா 3.5 புள்ளிகளுடன் 2-ஆம் நிலையிலும், ஜோங்யி 2.5 புள்ளிகளுடன் 3-ஆம் நிலையிலும் உள்ளனர்.

# அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்ற அரசு பஸ் டிரைவர்கள்- கண்டக்டர்கள் பணியிடை நீக்கம்

**கோவை, ஏப்.10:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றும் நடத்துனர்கள் மற்றும் டிரைவர்கள் அரசியல் கட்சிகள் சார்ந்த தொழிற்சங்கங்களில் உறுப்பினராகவும், பல்வேறு பொறுப்புகளிலும் இருந்து வருகிறார்கள்.

தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் அவர்களுக்கு தேர்தல் நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

இந்த நிலையில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரசாரத்திற்காக அண்மையில் கோவை கொடிசியாவுக்கு வந்திருந்தார். அப்போது அங்கு விதிகளை மீறி சென்றவர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணியை சந்தித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோவை அரசு போக்குவரத்து கழக மண்டல அதிகாரிகள் கூறியதாவது:-

அரசு ஊழியர் எந்தவொரு அரசியல் கட்சியிலும், அமைப்பிலும் உறுப்பினராகவோ, ஆதரவாளராகவே இருக்கக்கூடாது.

எந்தவொரு வேட்பாளருக்கும் தேர்தல் முகவராகவோ, வாக்குஎண்ணும் முகவராகவோ செயல்படக்கூடாது.

எந்தவொரு அரசியல் கட்சி சார்புடையவராக காட்டிக் கொள்ளக்கூடாது. பஸ்களிலோ, தங்களுடைய உடமைகளிலோ அரசியல் கட்சி தொடர்பான சின்னங்கள், கொடிகள் மற்றும் இதர இலச்சினைகளை வெளிப்படையாக வைத்திருக்க கூடாது என்பன உள்பட பல்வேறு விஷயங்களை தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

அதன்படி தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக நடத்துனர் மற்றும் டிரைவர் உள்பட 11 பேர் 2 நாட்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# காரைக்காலில் மக்களைக் கவரும் வாக்குச்சாவடி! விறுவிறுப்பான வாக்குப்பதிவு!

**புதுச்சேரி, ஏப்.10:**

புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் காரைக்கால் மாவட்டத்தில் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

காரைக்கால் மாவட்டத்தில், காரைக்கால் வடக்கு, காரைக்கால் தெற்கு, நிரவி - திருப்பட்டினம், திருநள்ளாறு, நெடுங்காடு ஆகிய 5 பேரவைத் தொகுதிகள் உள்ளன.

பேரவைத் தேர்தலையொட்டி மாவட்டத்தில் 181 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு, புதன்கிழமை அனைத்து சாவடிகளுக்கான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் உள்ளிட்டவை அனுப்பிவைக்கப்பட்டன.

வாக்குப் பதிவு நாளான (ஏப். 9) காலை 7 மணி முதல் மாவட்டத்தின் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்குப் பதிவு செய்துவருகிறார்கள்.







தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், வேறு 12 வகையான ஆவணங்களில் ஒன்றை கொண்டுச் சென்று வாக்களிக்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி உரிய ஆவணங்களுடன் வாக்காளர்கள் அவரவர் பகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கின்றனர்.

காரைக்கால் மாவட்டத்தில் மக்களைக் கவரும் வகையிலும் வாக்கு சதவீதத்தை அதிகரிக்கும் வகையிலும் தனித்துவமான வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.


பசுமை பார்வையில் தனித்துவமான வாக்குச் சாவடி, பிங்க் நிற வாக்குச் சாவடி, மகளிர் மட்டும் பணியாற்றக்கூடிய வாக்குச் சாவடிகள் என தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்பேரில் பல தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட தேர்தல் அதிகாரி இஷிதா ரதி, வாக்குச் சாவடிகளுக்குச் சென்று பார்வையிட்டு வருகிறார். ஒவ்வொரு மணி நேரத்துக்குக்கும் வாக்குச் சாவடிகளின் வாக்குப் பதிவு சதவீதத்தை தேர்தல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மத்திய பாதுகாப்புப் படையினர், புதுவை மாநில போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# வணிகச் செய்திகள்

## போர் நிறுத்தம் எதிரொலி: பங்கு சந்தையில் முதலீட்டாளர்களுக்கு ரூ.14 லட்சம் கோடி லாபம்

**மும்பை, ஏப்.10:**



ஈரான் மீதான அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டு போர் தாக்குதல் காரணமாக கடந்த 25 பங்குச்சந்தை வர்த்தக நாட்களில் இந்திய பங்குச்சந்தைகள் தொடர்ந்து நஷ்டத்திலேயே வர்த்தகமாகின.

இதனால் ‘சென்செக்ஸ்’ மற்றும் ‘நிப்டி’ குறியீடுகள் முறையே 6 ஆயிரத்து 670 புள்ளிகள் மற்றும் 2 ஆயிரத்து 55 புள்ளிகள் சரிந்து வர்த்தகமாகி முதலீட்டாளர்களுக்கு ரூ.51 லட் சம் கோடிவரை இழப்பை ஏற்படுத்தியது.

தற்போது 2 வாரங்களுக்கு போர் தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது நேரடியாக இந்திய பங்குச் சந்தைகளில் எதிரொலித்தது. மும்பை பங்குச்சந்தை குறியீடு எண் ‘சென்செக்ஸ்’ ஒரே நாளில் 2 ஆயிரத்து 946 புள்ளிகள் அதாவது 3.95 சதவீதம் உயர்ந்து 77 ஆயிரத்து 562 புள்ளிகளில் வர்த்தக மாகி நிறைவடைந்தது.

தேசிய பங்குச்சந்தை குறியீடு எண் ‘நிப்டி’ 873 புள்ளிகள் (3.78 சதவீதம்) உயர்ந்து 23 ஆயிரத்து 997 புள்ளிகள் உயர்ந்து வர்த்தகம் நிறைவடைந்தது. பங்குச் சந்தை உயர்வால் முதலீட்டாளர்களுக்கு ரூ.14 லட்சம் கோடி லாபம் கிடைத்தது.

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் அவமதிப்பு மனுக்களை விசாரிக்க தடை

**மதுரை, ஏப்.10:**

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி ஜிஆர்.சுவாமி நாதன் பிறப்பித்த உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில், மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர், துணை ஆணையர், திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரித்த தனி நீதிபதி, பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதற்கு எதிராக அரசுத் தரப்பிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பிலும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தன. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை அரசியல் மேடையாக மாற்ற வேண்டாம். இது சிறிய பிரச்சினை, ஊதிப் பெரிய பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது. மேல்முறையீடு மனு மீது இரு நீதிபதிகள் ஏற்கெனவே இறுதி உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதன் பிறகும் தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் உத்தரவை மிகைப்படுத்துவது ஏன், இந்த வழக்கில் யாரும் குரலை உயர்த்தி நீதிமன்றத்தை மிரட்டும் நோக்கத்தில் பேசக்கூடாது என்றனர். அப்போது கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் வீராகதிரவன், ரவீந்திரன் ஆகியோர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்க இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகும் தனி நீதிபதி தொடர்ந்து விசாரிக்கிறார்.

டிச.4 உத்தரவுக்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. முழு அவமதிப்பு நடவடிக்கைக்கும் தடை விதிக்கவில்லை என்று கூறி தனி நீதிபதி விசாரணையை ஏப்.9-க்கு தள்ளி வைத்துள்ளார் என்றனர்.

பின்னர் நீதிபதிகள், தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் உத்தரவுக்கு இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகு அவர் விசாரிக்க முடியாது. அந்த வழக்கு தானாக இரு நீதிபதிகள் அமர்வுக்கு வந்துவிடும்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா அல்லது இரு நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டுமா என்பதை விசாரித்து உரிய முடிவெடுப்போம். அதுவரை அவமதிப்பு மனுக்கள் மீது தனி நீதிபதி பிறப்பித்த அனைத்து உத்தரவுகளுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. விசாரணை ஜூன் 4-க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# மேற்கு வங்கத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் மீன் அரசியல்

**புதுடெல்லி, ஏப்.10:**



மேற்கு வங்க மக்கள் பல நூற்றாண்டுகளாக மீன் உணவுக்குப் பழகி விட்டனர். மேலும், காளி, துர்கா உள்ளிட்ட கடவுள்களுக்கும் மீன் உணவுகளைப் படைக்கின்றனர். அங்கு மீன் உணவை சைவமாகக் கருதி உண்ணும் பிராமணர்களும் அதிகம். இந்த மீன் உணவு தேர்தல் பிரச்சாரத்தில் பேசுபொருளாகி உள்ளது.

இது குறித்து, முதல்வர் மம்தா பிரச்சாரத்தில் பேசுகையில், "பாஜக ஆட்சிக்கு வந்தால், வங்காள மக்களின் உணவுப் பண்பாடு, குறிப்பாக நமக்கு மிகவும் பிடித்தமான மீன் மற்றும் இறைச்சி உண்ணுவதைத் தடை செய்து விடுவார்கள்" என்றார். இதே கருத்தை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மற்ற தலைவர்களும் மீன் உணவைப் பயன்படுத்தி பாஜகவை விமர்சிக்கின்றனர்.

இதற்கு பதிலடியாக மீன் உணவைப் புகழ்ந்தும், பாரம்பரியத்தைப் போற்றியும் பாஜக பிரச்சாரம் செய்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் மீன் சந்தைகளுக்குச் செல்வதும், மீன் வாங்குவதும், அதைப் பொது வெளியில் உண்பதையும் வழக்கமாக்கி கொண்டுள்ளனர்.

மாநில பாஜகவின் மூத்த தலைவரும், கரக்பூர் நகர தொகுதி வேட்பாளருமான திலீப் கோஷ், மீன் உணவு மீதுள்ள ஆர்வத்தை வெளிப்படையாக பிரச்சாரம் செய்து வருகிறார். இவர் பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் பிரச்சாரகராக இருந்தவர். சமீபத்தில் திலீப் கோஷ் கரக்பூரில் உள்ள ஒரு மீன் சந்தையில் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடினார்.

அது தொடர்பான புகைப்படங்களையும் அவர் தன் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். பிதான் நகர் தொகுதி வேட்பாளர் சரத்வத் முகர்ஜி சமீபத்தில் ஒரு பெரிய கட்லா மீனை கையில் ஏந்தி வீதிகளில் நடத்திய பிரச்சாரம் வைரலானது. அதேபோல், கொல்கத்தாவை ஒட்டியுள்ள ராஜர்ஹாட்-கோபால்பூர் தொகுதி பாஜக வேட்பாளர் தருண்ஜோதி திவாரி, மீன் சந்தைக்குச் சென்று பிரச்சாரம் செய்ததுடன், அங்கே மீன் சாதம் சாப்பிட்டுக் கொண்டே பேட்டியளித்தார்.

இதனால் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரின் தேர்தல் வியூகம் பிசுபிசுத்து வருகிறது. எனினும், மீன் விவகாரத்தில் பாஜக செய்வது போலித்தனம். இதை நம்ப வேண்டாம் என்று ஆளும் திரிணமூல் கட்சியினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

# காவல் நிலையத்தில் வாலிபர் மரணம்; 8 போலீசார் மீது கொலை வழக்கு பதிவு

**மும்பை, ஏப்.10:**

மும்பை வடலா ரெயில்வே போலீசார், கடந்த 2014-ம் ஆண்டு கொள்ளை வழக்கு தொடர்பாக அக்னெல்லோ வால்டாரிஸ் என்ற வாலிபரையும், அவரது நண்பர்கள் 3 பேரையும் பிடித்து விசாரித்தனர். அப்போது போலீஸ் காவலில் இருந்தபோது அக்னெல்லோ வால்டாரிஸ் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

அவர் தப்பி ஓடியபோது ரெயிலில் அடிபட்டு இறந்ததாக போலீசார் கூறினர். ஆனால், அவர் போலீசாரின் சித்ரவதையால்தான் உயிரிழந்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பான வழக்கை விசாரித்த கீழ் கோர்ட்டு, சம்பந்தப்பட்ட 8 போலீசார் மீது கொலை வழக்கு பதிவு செய்ய கடந்த 2022-ம் ஆண்டு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து இன்ஸ்பெக்டர் ஜிதேந்திர ரத்தோடு உள்ளிட்ட 8 போலீசாரும் மும்பை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இதனை விசாரித்த நீதிபதிகள் ஏ.எஸ்.கட்காரி, ஷியாம் சந்தக் ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை தள்ளுபடி செய்து கீழ் கோர்ட்டு உத்தரவை உறுதி செய்தனர். அதில் நீதிபதிகள் கூறி இருப்பதாவது:-

"இறந்தவர்களால் நீதி கேட்டு கதறமுடியாது. அவர்களுக்காக நீதி கேட்பது உயிரோடு இருப்பவர்களின் கடமை. இந்த வழக்கில் போலீசார் தரப்பில் சொல்லப்படும் காரணங்களில் முரண்பாடுகள் உள்ளன. வாலிபர் உயிரிழந்தது கொலையா? அல்லது விபத்தா? என்பதில் பெரும் சர்ச்சை உள்ளது. உயிரிழந்த வாலிபர் மற்றும் அவருடன் பிடிபட்டவர்கள் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டு, கொடூரமான முறையில் சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர். மருத்துவ ஆதாரங்களும், மற்றவர்களின் வாக்குமூலங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. கண்காணிப்பு கேமரா காட்சிகளும் முறையாக பாதுகாக்கப்படவில்லை. எனவே, போலீசார் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 8 போலீசார் மீதும் கொலை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடரவேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மகனை பள்ளியில் சேர்க்கச் சென்ற தம்பதிக்கு நேர்ந்த சோகம்

**அமராவதி, ஏப்.10:**

ஆந்திர மாநிலம் ராஜமகேந்திரவரம் பகுதியைச் சேர்ந்த வீர்ராஜு(வயது 46) அவரது மனைவி வீர சைலஜா (38) மற்றும் இவர்களது மகன் யஷ்வந்த் (16) சமீபத்தில் 10-ம் வகுப்பு தேர்வு எழுதியிருந்தார். அவரை ஐதராபாத்தில் பிளஸ்-1 படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணிய பெற்றோர். அதற்கான பள்ளிகளை நேரில் பார்ப்பதற்காக மகனுடன் காரில் சென்றனர்.

கம்மம் மாவட்டம் கொனிஜர்லா அருகே சாகர் கால்வாய் பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த லாரி அவர்கள் கார் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் லாரியின் சக்கரம் கார் மீது ஏறியதால் கார் முழுவதும் நொறுங்கியது. இந்த விபத்தில் காரை ஓட்டிய வீர்ராஜு காரின் முன்பகுதியில் சிக்கிக் கொண்டார். சம்பவத்தை நேரில் பார்த்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விபத்தில் படுகாயமடைந்த யஷ்வந்த் 'என் பெற்றோரை காப்பாற்றுங்கள்' என்று கதறி அழுதது அங்கு இருந்தவர்களை உருக வைத்தது.

அருகே இருந்தவர்கள் 3 பேரையும் மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி வீர்ராஜு மற்றும் வீரசைலஜா ஆகிய 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். யஷ்வந்த்க்கு தொடர்ந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்தால் அந்த பகுதியில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாட்டிறைச்சி சாப்பிட தடை இல்லை: அசாம் முதல்வர் ஹிமந்தா விளக்கம்

**குவாஹத்தி, ஏப்.10:**



அசாமில் மாட்டிறைச்சி உண்பது குறித்த தனது நிலைப்பாட்டை முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெளிவுபடுத்தியுள்ளார். என்றாலும் முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அவர் பின்வாங்கி விட்டதாக சமாஜ்வாதி, ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் விமர்சனம் செய்துள்ளன.

இது தொடர்பாக ஹிமந்த பிஸ்வா சர்மா, செய்தியாளர்களிடம் கூறுகையில், "முஸ்லிம்கள் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள். அதற்குத் தடை ஏதும் இல்லை. அசாமில் மாட்டிறைச்சி சாப்பிடும் முஸ்லிம் சமூகம் பெரிய அளவில் உள்ளது. அவர்களைச் சாப்பிட வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. உங்கள் வீடுகளுக்குள் வைத்துச் சாப்பிடுங்கள், பொது இடங்களில் வேண்டாம் என்றுதான் சொல்கிறோம்" என்றார்.

"மாட்டிறைச்சி சாப்பிடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களை விடமாட்டேன்" என்று ஹிமந்தா ஏற்கெனவே கூறியிருந்த நிலையில் தற்போது அவர் மாறுபட்ட கருத்தை கூறியிருப்பது அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஹிமந்தாவின் கருத்தை சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்து, "பாஜகவை அகற்றுவோம், கோமாதாவை பாதுகாப்போம்" என்று பதிவிட்டுள்ளார்.

# இறுதி வாக்காளர் பட்டியலை எதிர்த்து நீதிமன்றத்தில் டிஎம்சி முறையிடும்: மம்தா


**கொல்கத்தா, ஏப்.10:**

மேற்குவங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியின்போது (எஸ்ஐஆர்) 91 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

இது தொடர்பான மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், நீக்கப்பட்டவர்களில் விண்ணப்பித்த 60 லட்சம் மனுக்களை மாவட்ட நீதிபதிகள் பரிசீலனை செய்ய உத்தரவிட்டது. இந்த பரிசீலனையில் 32 லட்சம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. 27 லட்சம் பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இது குறித்து முதல்வர் மம்தா பானர்ஜி கூறும்போது, "இறுதி வாக்காளர் பட்டியலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் திரிணமூல் காங்கிரஸ் (டிஎம்சி) மேல்முறையீடு செய்யும். பரிசீலனையின்போது நிராகரிக்கப்பட்ட 27 லட்சம் பேருக்கும் தேர்தலுக்கு முன்பாக வாக்குரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்படும்" என்றார்.

# ராஜஸ்தானில் மர்ம காய்ச்சலுக்கு 5 குழந்தைகள் பலி: சுகாதார நிபுணர்கள் தீவிர ஆய்வு



**ஜெய்ப்பூர், ஏப்.10:**


ராஜஸ்தான் மாநிலம் சலும்பர் மாவட்டத்துக்கு உட்பட்ட லசாடியா பகுதியில் உள்ள 2 கிராமங்களில் கடந்த 1 முதல் 5-ம் தேதி வரை 5 குழந்தைகள் பலியாகினர். மர்ம காய்ச்சல் தாக்கி பலியான இந்த குழந்தைகள் 2 முதல் 4 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

அடுத்தடுத்து குழந்தைகள் பலியான சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. எனவே பல்வேறு நிபுணர்கள் அடங்கிய மருத்துவக்குழுவினர் அந்த பகுதியில் முகாமிட்டு தீவிர ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

மாநில முதல்-மந்திரி பஜன்லால் சர்மாவும் இந்த விவகாரத்தை தீவிரமாக எடுத்து நிலைமையை ஆய்வு செய்து வருகிறார். குழந்தைகள் இறப்புக்கான காரணம் அறியவும், தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

# மத மூட நம்பிக்கையை நீதிமன்றம் வரையறை செய்யலாம்: சபரிமலை வழக்கில் நீதிபதிகள் கருத்து

**புதுடெல்லி, ஏப்.10:**



கேரள மாநிலம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதி அளித்து, கடந்த 2018-ல் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்த மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல்சாசன அமர்வு விசாரிக்க தொடங்கியுள்ளது.

2-வது நாளான நேற்று மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "மத வழக்கங்கள் மூட நம்பிக்கையா என்பதை நீதிமன்றங்கள் முடிவு செய்ய முடியாது. இந்த விவகாரத்தில் நீதிமன்றங்களுக்கு போதிய புலமை இல்லை. மாறாக அந்த மதத்தின் வழிபாட்டு ஆவணங்களை ஆய்வு செய்து தீர்வு காண வேண்டும்" என வாதிட்டார். அப்போது, நீதிபதி ஏ.அமானுல்லா, "மத மூட நம்பிக்கையை உச்ச நீதிமன்றம் வரையறை செய்ய முடியும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து துஷார் மேத்தா வாதிடுகையில்,

"அரசுக்கு சொந்தமான கோயில்களில் பூசாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்க முடியாது. கடவுள் நம்பிக்கை அற்ற, கடவுள் நம்பிக்கை உள்ள அரசுகள் கூட கோயில்களில் பூசாரிகளை நியமிக்க முடியாது. கோயில் பூசாரிகள் பாரம்பரியமாக நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அரசு விவகாரங்களில் மதம் தலையிடாதபோது, மத விவகாரங்களில் அரசும் தலையிடக்கூடாது. அரவிந்தரை பின்பற்றுவோர் ஒரு மதப் பிரிவினராக உள்ளனர்" என்றார்.

# குஜராத் மக்கள் குறித்த கருத்து: மன்னிப்பு கோரினார் கார்கே

**புதுடெல்லி, ஏப்.10:**

காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அண்மையில் கேரளாவில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

இடுக்கி நகரில் அவர் பேசுகையில், "கேரள மக்களைத் தவறாக வழிநடத்தாதீர்கள், அவர்கள் மிகவும் புத்திசாலிகள், படித்தவர்கள். பிரதமர் மோடி, பினராயி விஜயன் இருவரும் குஜராத்திலும் மற்ற இடங்களிலும் கல்வியறிவில்லாத மக்களை ஏமாற்றலாம். ஆனால் கேரள மக்களை ஏமாற்ற முடியாது" என்றார்.

குஜராத் மக்கள் குறித்த கார்கேவின் இந்த கருத்து மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிலையில் மல்லிகார்ஜுன கார்கே நேற்று 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சமீபத்தில் கேரளாவில் எனது தேர்தல் உரையில் கூறப்பட்ட சில கருத்துக்கள் வேண்டுமென்றே தவறாக திரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எனது மனமார்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். குஜராத் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை" என்று கூறியுள்ளார்.

# மேற்காசிய மோதல் எதிரொலி: 7.88 லட்சம் பேர் இந்தியாவுக்கு பாதுகாப்பாக பயணம்

**புதுடெல்லி, ஏப்.10:**

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி வான்வழியே கடுமையாக தாக்குதல் நடத்திய பின்னர் மேற்காசியாவில் பதற்ற நிலை அதிகரித்தது. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே 2 வார காலத்திற்கு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு உள்ளது.

மேற்காசிய சூழலுக்கு இடையே மத்திய வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் நிருபர்களிடம் இன்று பேசும்போது, வான்வெளி திறந்திருக்க கூடிய நாடுகளில் இருந்து விமானங்கள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

பிப்ரவரி 28-ந்தேதியில் இருந்து இந்தியாவுக்கு இதுவரை 7.88 லட்சம் பேர் பாதுகாப்பாக பயணம் செய்துள்ளனர். இஸ்ரேல், ஈராக், குவைத் மற்றும் பஹ்ரைன் நாடுகளில் வான்வெளி மூடப்பட்டும், விமானங்கள் பறக்க கட்டுப்பாடுகளும் உள்ளன.

அதனால், ஈரானில் இருந்து அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாடுகள் வழியே இந்தியாவுக்கு இந்தியர்களை தொடர்ந்து கொண்டு வருகிறோம்.

இஸ்ரேலில் இருந்து ஜோர்டான் மற்றும் எகிப்து வழியேயும், ஈராக்கில் இருந்து ஜோர்டான் மற்றும் சவுதி அரேபியா வழியேயும், குவைத் மற்றும் பஹ்ரைனில் இருந்து சவுதி அரேபியா வழியேயும் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளனர் என்று கூறியுள்ளார்.

# நாட்டின் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் வெற்றிகரமாக சோதனை

**ரிஷிகேஷ், ஏப்.10:**




நாட்டில் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

நாட்டில் கடல் வழித்தடம் மற்றும் நீர்நிலைகள் அதிகளவில் உள்ளன. விமான நிலையம் அமைக்க முடியாத இடங்களில் கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த திட்டமிடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ரிஷிகேஷில் வர்த்தக ரீதியாக கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்த ஸ்கைஹாப் ஏவியேஷன் என்ற நிறுவனம் தயாராகி வருகிறது.

இந்நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் கடந்த 6ம் தேதி தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்தது. கடல் விமானம் கங்கை நதியில் சுமூகமாக தரையிறங்கி, மேலெழும்பியதன் மூலம் இங்கு கடல் விமான போக்குவரத்து சாத்தியமாகும் எனத் தெரிகிறது.

இது குறித்து ஸ்கைஹாப் ஏவியேஷன் நிறுவனத்தின் நிறுவனர் அவானி சிங் கூறியதாவது: ஸ்கைஹாப் நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது.

விமான போக்குவரத்துக்கான சான்றிதழ் பெறும் நடவடிக்கையில் நாங்கள் இறங்கியுள்ளோம். சான்றிதழ் கிடைத்தவுடன் வர்த்தக ரீதியாக நாங்கள் கடல் விமான போக்குவரத்தை தொடங்குவோம்.

லட்சத் தீவு பகுதியிலும் ஸ்கைஹாப் நிறுவனம் கடல் விமான போக்குவரத்தை தொடங்க திட்டமிட்டுள்ளது. இங்கு ஐந்து தீவுகளை இணைக்கும் வகையில் 19 இருக்கைகள் கொண்ட கடல் விமானத்தை முதல் கட்டமாக இயக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# வரிசையில் நின்று வாக்களித்த மோகன் லால், சுரேஷ் கோபி!



**திருவனந்தபுரம், ஏப்.10:**

மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி குருவாயூர் தெற்கு தொகுதியில் தனது வாக்கை செலுத்தினார்.

கேரளத்திற்கு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் நடிகர் மோகன் லால் காலையிலேயே வரிசையில் வாக்கு செலுத்தி தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார். திருவனந்தபுரம், மூடவன்முகலில் உள்ள வாக்குச்சாவடிக்கு, நேமம் தொகுதியின் அமைச்சரும் இடது ஜனநாயக முன்னணி வேட்பாளருமான வி. சிவன்குட்டி, வாக்கு செலுத்தினார். அதே வாக்குச்சாவடியில் நடிகர் மோகன் லால் வாக்கு செலுத்தினார்.

மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி குருவாயூர் தெற்கு தொகுதியில் தனது வாக்கை செலுத்தினார்.

# 14 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவா? அமேசான் விளக்கம்




வாஷிங்டன், ஏப்.10:

செயற்கை நுண்ணறிவு ஆதிக்கம் அதிகரித்து இருப்பதால் பல்வேறு துறைகளிலும் வேலையிழப்புகள் அதிகரிக்கும் என கூறப்படுகிறது. இதனை உறுதி செய்யும் விதமாக ஆரக்கிள் உள்ளிட்ட முன்னணி ஐடி நிறுவனங்களும் சமீப காலமாக ஆட்குறைப்பில் ஈடுபட்டு வருகின்றன. ஐடி, இ-காமர்ஸ் என பல துறைகளிலும் கொடி கட்டிப் பறக்கும் அமேசான் நிறுவனமும் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஏற்கனவே எடுத்திருந்தது.

இந்த நிலையில், மேலும் 14 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய அமேசான் முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியானது. இது அந்நிறுவன ஊழியர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்த நிலையில், இது தொடர்பாக விளக்கம் அளித்துள்ள அமேசான், அடுத்த மாதம் 14 ஆயிரம் ஊழியர்கள் பணி நீக்கம் என்ற தகவலில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ளது.

# லெபனானில் இஸ்ரேலின் தொடர் தாக்குதல் ஒரே நாளில் 254 பேர் உயிரிழப்பு



லெபனான், ஏப்.10:

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி வான்வழியே கடுமையாக தாக்குதல் நடத்திய பின்னர் மேற்காசியாவில் பதற்ற நிலை அதிகரித்தது. இந்த சூழலில், ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே 2 வார காலத்திற்கு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு உள்ளது.

ஈரானுக்கு எதிராக 2 வார காலம் தாக்குதல்களை நிறுத்துவது என்ற டிரம்ப் அரசின் முடிவுக்கு இஸ்ரேல் அரசு ஆதரவு தெரிவித்து உள்ளது. டிரம்ப்பின் போர்நிறுத்த ஒப்பந்த அறிவிப்பை நெதன்யாகு அலுவலகம் வரவேற்றுள்ளது. ஆனால், இந்த 2 வார கால போர்நிறுத்த ஒப்பந்தத்தில், லெபனான் நாடு இடம் பெறாது என்றும் கூறி உள்ளது. இதனால், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிரான தாக்குதல் நிறுத்தப்படாது என இஸ்ரேல் தெரிவித்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் ராணுவம் லெபனான் மீது மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. 10 நிமிட இடைவெளியில் 100க்கும் மேற்பட்ட டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் தாக்கியுள்ளது. இந்த மிக மோசமான தாக்குதலில் நேற்று ஒருநாள் மட்டும் 254 பேர் கொல்லப்பட்டு, 1,100-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால், பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

காணாமல் போனோர், இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களுக்கான தேடுதல் பணிகளும் தொடர்ந்து நடந்து வருகிறது. லெபனான் மீது சமீபத்தில் நடத்தப்பட்ட மிக பெரிய தாக்குதலில் ஒன்றாக இது இருக்கிறது. பெரும்பாலான வான்வழித் தாக்குதல்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நடந்துள்ளது. இது பெரும் சேதத்தையும் உயிர் இழப்பையும் ஏற்படுத்தின. பல இடங்களில், மீட்புக் குழுவினர் இடிபாடுகளை அகற்றிக் காயமடைந்தவர்களை மீட்டனர். இந்த தாக்குதலுக்கு லெபனான் அதிபர் ஜோசப் அவூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்தால் தற்காலிக போர் நிறுத்தத்திலிருந்து ஈரான் விலக நேரிடும் என மிரட்டல் விடுத்துள்ளது. இது மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

# ஈரானில் இருந்து அமெரிக்க படைகள் பின்வாங்கப்படாது! டிரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப்.10:

ஈரானுடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்கள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும் வரை அமெரிக்காவின் முப்படைகளும் பின்வாங்கப்படாது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே கடந்த 40 நாள்களுக்கு மேலாக நீடித்து வந்த போர், பாகிஸ்தான் மத்தியஸ்தத்தின்பேரில் இரு வாரங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

ஈரானும் தற்காலிகமாக இரண்டு வாரங்களுக்கு அனைத்து சரக்கு கப்பல்களுக்கும் ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதாக ஒப்புக் கொண்டுள்ளன.

மேலும், இரு நாடுகளுக்கு இடையேயான அமைதி ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இஸ்லாமாபாத்தில் நாளை தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் படைகள் பின்வாங்கப்படாது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:

"ஒப்பந்தம் முழுமையாக கடைப்பிடிக்கப்படும் வரை, ஏற்கெனவே பலவீனமடைந்துள்ள எதிரியைத் துல்லியமாகத் தாக்கி அழிப்பதற்குப் பொருத்தமான மற்றும் அவசியமான கூடுதல் வெடிமருந்துகள், ஆயுதங்கள் மற்றும் பிற தளவாடங்களுடன் கூடிய அனைத்து அமெரிக்க கப்பல்கள், விமானங்கள் மற்றும் ராணுவ வீரர்களும் ஈரானிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ந்து நிலைநிறுத்தப்படும்.

ஒப்பந்தத்தை மீறுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்றாலும், ஒப்பந்தம் மீறப்பட்டால், துப்பாக்கிச் சூடு தொடங்கும். அது இதுவரை எவரும் கண்டிராத வகையில், மிக வலிமையாக இருக்கும்.

அணு ஆயுதங்கள் வைத்திருக்கக் கூடாது, ஹோர்முஸ் நீரிணை திறப்பு என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனிடையே, அமெரிக்க ராணுவம் ஆயுதங்களை நிரப்பிக் கொண்டும், ஓய்வெடுத்துக் கொண்டும் இருக்கிறது. வெற்றியை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

# தீவிரமடையும் அமெரிக்க - ஈரான் போர்: இன்று பாகிஸ்தான் செல்லும் அமெரிக்க குழு

வாஷிங்டன், ஏப்.10:

ஈரான் - அமெரிக்கா இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக நிலவும் சிக்கல்களைத் தீர்க்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது உயர்மட்டப் பேச்சுவார்த்தைக் குழுவை நாளை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு அனுப்பி வைக்கிறார். முக்கியத்துவம் வாய்ந்த இந்த பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி. வேன்ஸ் தலைமை தாங்குகிறார். இந்தக் குழுவில் அமெரிக்காவின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்



முன்னதாக இதுதொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தனது எக்ஸ் வலைதளத்தில், "மிகுந்த பணிவுடன் நான் அறிவிப்பது என்னவென்றால், ஈரான் இஸ்லாமியக் குடியரசும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும், அவற்றின் கூட்டாளிகளுடன் சேர்ந்து, லெபனான் மற்றும் பிற இடங்கள் உட்பட எல்லா இடங்களிலும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன. இந்த விவேகமான நடவடிக்கையை நான் மனதார வரவேற்பதோடு, இருநாடுகளின் தலைமைகளுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்து ஒரு உறுதியான உடன்படிக்கையை எட்டுவதற்காக, அவர்களின் தூதுக்குழுக்களை (10.04.2026) இஸ்லாமாபாத்திற்கு வருமாறு அழைக்கிறேன். இரு தரப்பினரும் குறிப்பிடத்தக்க ஞானத்தையும் புரிதலையும் வெளிப்படுத்தி, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் ஆக்கப்பூர்வமாக ஈடுபட்டுள்ளனர். 'இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகள்' நீடித்த அமைதியை அடைவதில் வெற்றிபெறும் என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம், மேலும் வரும் நாட்களில் இன்னும் பல நல்ல செய்திகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்" என்று பதிவிட்டிருந்தார்.

# "ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்காவிட்டால்.." ஈரானுக்கு டிரம்ப் கடும் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப்.10:

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி மாதம் 28 ம் தேதி போரை தொடங்கியது.

இந்த போர் ஒரு மாதத்தை கடந்தும் நடந்து வருகிறது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியதோடு, ஹார்முஸ் ஜலசந்தியை மூடியது.

இதனால் சவுதி அரேபியா, கத்தார், ஓமன், ஐக்கிய அரபு அமீரகம், ஈராக் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்பட பல ஆசிய நாடுகளுக்கான கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு வினியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும். இல்லாவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்தார். அதோடு ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவுக்கு வந்தது. காலக்கெடு முடிவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு டிரம்ப், ''ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும். இல்லாவிட்டால் ஈரானின் நாகரீகம் அழிக்கப்படும். அதில் இருந்து அவர்களால் மீண்டு வர முடியாது'' என்று மிரட்டல் விடுத்திருந்தார். இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்டு ஈரான் - அமெரிக்காவிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதையடுத்து போர் 2 வாரம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக டிரம்ப் அறிவித்தார்.

அமெரிக்கா, இஸ்ரேல் சார்பில் ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படாது என கூறப்பட்டது.

இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மீண்டும் திறந்தது. கப்பல்கள் வழக்கம்போல் பயணிக்க தொடங்கின.

இந்நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை மூடி உள்ளதாக ஈரான் அரசு தெரிவித்தது. போர் நிறுத்தம் தொடர்பான ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறி உள்ளது என்றும், இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல கச்சா எண்ணெய் கப்பல்களுக்கு அனுமதியில்லை என்றும், அனைத்து கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்காவிட்டால், ஈரான் மீது இதுவரை இல்லாதவகையில் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# யுரேனியத்தை தோண்டி எடுப்போம்: ஈரானுக்கு உதவும் நாடுகள் மீது 50 சதவீத வரி: டிரம்ப்

வாஷிங்டன், ஏப்.10:

ஈரானுக்கு எதிரான போரை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள அமெரிக்கா, அடுத்தகட்ட நடவடிக்கைகளை தொடங்கி உள்ளது. ஈரானில் கடந்தாண்டில் அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டு நடவடிக்கையின்போது புதைக்கப்பட்ட பி2 குண்டுகளில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியம் ஈரானுடன் கைகோத்து நிச்சயம் ஆழத் தோண்டியெடுக்கப்படும் என்பதை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

ஈரானில் இனி யுரேனியம் செறிவூட்டப்படாது என்றும் டிரம்ப் தனது சமூக வலைத்தளத்தில் கூறியுள்ளார். கடந்த ஜூன் மாதத்துக்குப்பிறகு ஈரான் அவற்றை தொடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டு உள்ளார். எனினும் டிரம்பின் இந்த அறிவிப்பு குறித்து ஈரான் எதுவும் தெரிவிக்க வில்லை.

ஈரான் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படும் என்று செவ்வாய்க்கிழமை சூளுரைத்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தமது நிலைப்பாட்டை அதன்பின் மாற்றிக்கொண்டதன் எதிரொலியாக அமெரிக்கா ஈரான் இடையே அடுத்த 2 வாரங்கள் போர்நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறதென அறிவிக்கப்பட்டது.

ஈரானுக்கு ஆயுதங்கள் வழங்கும் முக்கிய நாடுகளில் ரஷ்யா, சீனா முன்னிலையில் உள்ளன. ஆனால், இந்த 2 நாடுகளும் உலகின் பெரிய பொருளாதார வல்லரசுகள் என்பதால், அவர்கள் மீது 50 சதவீத வரி விதிப்பது டிரம்புக்கு எளிதான காரியமல்ல. இந்த இரு நாடுகளையும் எதிர்கொள்வது டிரம்புக்கு கடினம். இதனால், சிறிய நாடுகளுக்கு மட்டுமே இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிரம்பின் இந்த 50 சதவீத வரிவிதிப்பு அறிவிப்பு உலக நாடுகளிடையே மீண்டும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஈரானுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு அதிக வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள நிலையில், இது அந்த நாடுகளின் ஏற்றுமதியை பாதிக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. டிரம்ப் ஏற்கனவே ரெசிப்ரோக்கல் வரி விதிப்பு மூலம் பெரும் ஏமாற்றத்தை கண்டிருக்கும் வேளையில் மீண்டும் வரி விதிப்பு முறையை கையில் எடுத்துள்ளார்.

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை



தென் கொரியாவுடன் சுமூக உறவை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்ட சூழலில் அதை முற்றிலுமாக நிராகரிக்கும் வகையில் வடகொரியா புதன்கிழமை அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை நடத்தியது.

வடகொரியாவின் கிழக்குக் கடற்கரை நகரமான வான்சன் பகுதியிலிருந்து சுமார் 700 கி.மீ. தொலைவு பாயும் ஏவுகணை ஒன்றை ஏவி சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை அதிகாலையிலும் குறுகிய தூரம் பாயும் பல ஏவுகணைகளை வடகொரியா ஏவி சோதித்தது பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியது. வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனைகள் ஒரு தேவையற்ற தூண்டுதல் நடவடிக்கை என்று தென் கொரியாவும்; பாதுகாப்பு அச்சுறுத்தல் என ஜப்பானும் கண்டித்துள்ளது.

# வியத்நாம் புதிய அதிபர் பதவியேற்பு

வியத்நாமின் புதிய அதிபராக, அந்நாட்டின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் டோ லாம் (68) பதவியேற்றுள்ளார்.

புதிய அதிபர் தேர்வுக்காக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் கலந்துகொண்ட 495 உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் மூலம், கட்சியின் தலைமைப் பொறுப்பு மற்றும் நாட்டின் உயரிய அரசுப் பதவி ஆகிய இரண்டையும் வகிக்கும் மிக வலிமையான தலைவராக டோ லாம் உருவெடுத்துள்ளார்.

வளர்ச்சிக்கு உறுதி: அதிபரான பிறகு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், வியத்நாமை ஒரு புதிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லப்போவதாக டோ லாம் சூளுரைத்தார்.

புதிய பிரதமர் நியமனம்: நிர்வாக ரீதியிலான மாற்றங்களின் ஒரு பகுதியாக, வியத்நாம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் லே மின் ஹங் (55), நாட்டின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# ஆப்கான்-பாகிஸ்தான் அமைதிப் பேச்சு: இறுதி உடன்பாடு எட்டப்படாமல் நிறைவு

இஸ்லாமாபாத், ஏப்.10:

சீன மத்தியஸ்தத்தில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்த ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை, எவ்வித இறுதி உடன்பாடும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.

அதேநேரம், எல்லைத் தாண்டிய பயங்கரவாதம் குறித்த பிரச்னைக்கு ஒரு 'விரிவான தீர்வை' காண இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.



ஆப்கானிஸ்தானில் இருந்து வரும் பயங்கரவாதிகள் தங்கள் நாட்டில் தாக்குதலில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி, அந்நாட்டின் மீது பாகிஸ்தான் கடந்த சில மாதங்களாக தாக்குதல் நடத்தியது. இதற்கு ஆப்கானிஸ்தானும் பதிலடி கொடுத்தது.

ஆப்கானிஸ்தான் தலைநகா் காபூலில் போதை மறுவாழ்வு மையம் மீது பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400-க்கும் மேற்பட்டோா் கொல்லப்பட்டனா்.

இச்சூழலில், ரமலான் பண்டிகை காரணமாக இருதரப்புமே தற்காலிகமாக தாக்குதலை நிறுத்தின. இதைத் தொடா்ந்து, நிரந்தர அமைதிக்காக சீனா மத்தியஸ்த முயற்சிகளைத் தொடங்கியது. அதன்படி, அந்நாட்டின் ஜின்ஜியாங் மாகாணத்தின் உரும்கியில் கடந்த ஏப். 1 முதல் நடைபெற்ற பேச்சுவாா்த்தையில் இருதரப்பும் பங்கேற்றனா். ஒரு வாரக் கால பேச்சுவாா்த்தையின் நிறைவிலும், முக்கிய விவகாரங்களில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடா்பாளா் மாவோ நிங் கூறுகையில், 'பயங்கரவாதம் என்பது இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும் முக்கியக் காரணியாக உள்ளது. இரு நாடுகளும் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து, அமைதியைப் பேணத் தொடா்ந்து ஆலோசனைகளை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன. அதன்படி, அடுத்தகட்ட பேச்சுவாா்த்தைகளுக்கான வாய்ப்புகள் உள்ளன' என்றாா்.

## ஆப்கான் போா்க் குற்றச்சாட்டில் முன்னாள் ஆஸ்திரேலிய வீரா் கைது

ஆஸ்திரேலியாவின் மிக உயரிய ராணுவ விருதான 'விக்டோரியா கிராஸ்' விருதைப் பெற்ற முன்னாள் வீரா் பென் ராபாட்ஸ் ஸ்மித் (47), ஆப்கானிஸ்தானில் 5 பொதுமக்களைக் கொன்றதாகக் கூறப்படும் போா்க் குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டாா்.

2009 முதல் 2012 வரையிலான காலகட்டத்தில், ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, ராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஆயுதமேந்தாத 5 பேரைக் கொன்றதாக இவா் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய மத்திய காவல்துறை மற்றும் சிறப்புப் புலனாய்வு அலுவலகம் கடந்த 2021 முதல் நடத்திய தீவிர விசாரணையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவா்கள் எவ்வித மோதலிலும் ஈடுபடாதவா்கள் என்றும், அவா்கள் பென் ராபாட்ஸ் ஸ்மித் அல்லது அவரது உத்தரவின் பேரில் கீழ்நிலை வீராகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# கேரளாவில் 77.45%, அசாமில் 85.04% புதுச்சேரியில் 89.83% வாக்குகள் பதிவு






# சமூக நீதியை சிறுமைப்படுத்தும் அரசியல் சதி தொகுதி மறுசீரமைப்பைக் கொண்டு வர முயற்சி?

## தேர்தல் ஆணையம் அதிகார வரம்பை மீறி செயல்படுகிறது: ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

# தமிழகத்தில் முதல்முறை வாக்காளர் விகிதம் 34% உயர்வு

## விஜய் பிரசாரத்தில் விபத்து: தவெகவினர் 11 பேர் மீது வழக்கு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 10.04.2026 வெள்ளிக்கிழமை இலவச இ–பேப்பர்